# பாரதி மாநாட்டு மலர் 1967

தமிழ் எழுத்தாளர் சங்கம்
இளம்பிறைச் சங்கக் கட்டிடம்,
சென்னை-2

# பாரதி

## மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர்
பதினைந்தாவது மாநாடு
1967 டிசம்பர் 16, 17

விலை. ரூ. 1

தமிழ் எழுத்தாளர் சங்கம்
இளம்பிறைச் சங்கக் கட்டிடம்,
சென்னை - 2.

# தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை

**1967-ஆம் ஆண்டு ஆட்சிக்குழு :**

**தலைவர் :**

திரு. அகிலன்

**துணைத் தலைவர்கள் :**

திருவாளர்கள்: மயிலை சீனிவேங்கடசாமி
அழ. வள்ளியப்பா
திருமதி எம். எஸ். கமலா
கு. அழகிரிசாமி

**பொதுச் செயலாளர் :**

திரு. மா. சு. சம்பந்தன்

**துணைச் செயலாளர்கள் :**

திரு. கெ. பக்தவத்சலம்
,, கோவி மணிசேகரன்

**பொருளாளர் :**

திரு. கண. முத்தையா

## செயற்குழு

திரு. நா. பார்த்தசாரதி
திருமதி ஜயா அருணாசலம்
திரு. பூவண்ணன்
,, ஊ. ஜயராமன்
,, கோமதி ஸ்வாமிநாதன்
,, எம். அப்துல் வகாப்
,, ஜடாதரன்
,, ஔவை து. நடராசன்
,, தம்பி சீனிவாசன்
திருமதி குயிலி ராஜேஸ்வரி
திரு. சி. சு. செல்லப்பா
,, மு. நமச்சிவாயம்
,, எஸ். சௌம்ய நாராயணன் (டில்லி)
,, சோமலெ (நெற்குப்பை)

## மாநாட்டு வரவேற்புக்குழு

**தலைவர் :**

திரு. நா. மகாலிங்கம்

**அமைப்பாளர் :**

திரு. சோ. சிவபாதசுந்தரம்

18 DEC 1967.
MADRAS

# பதினைந்தாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு

திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்ஸி, எம். ஐ. இ.

# வரவேற்புரை

மாநாட்டைத் தொடக்கிவைக்க வந்திருக்கும் பெரு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பாராட்டுப் பெறுகின்ற அறிஞர் பெருமக்களே, சங்கத் தலைவர் அவர்களே, நமது நாட்டையும் மொழியையும் உயர்த்துகின்ற வகையில் நல்ல பணியாற்றி வருகின்ற எழுத்தாள நண்பர்களே, உங்களை இப்பதினைந்தாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கு வருக வருக என மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

பேராசிரியர் கல்கி அவர்களின் அரிய முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த எழுத்தாளர் சங்கம் எழுத்தாளர்களிடையே நல்ல ஒற்றுமையையும், உறவினையும் வளர்த்து வருகிறது. குடும்ப—சமூகக் கதைகளை மட்டுமே படித்துக் கொண்டிருந்த காலப் போக்கில் ஒரு மாறுதலை ஏற்படுத்தி, வரலாற்றை வாழவைத்து சரித்திர சம்பவங்களால் அழகான தொடர் கதைகளை உருவாக்கிய பெருமை அமரர் கல்கி அவர்களையே சாரும். இந்நேரத்தில் கல்கி அவர்களின் இலக்கியப் பணியை நினைந்து போற்ற வேண்டியது நம் கடனாகும். தகுதி வாய்ந்த தலைவர்களால் அவ்வப்போது சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்ற இந்தச் சங்கத்தின் இப்போதைய தலைவரான திரு. அகிலன் அவர்களைப் பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறோம். அன்பர் திரு. அகிலன் அவர்கள் நல்ல லட்சியக் கதைகளை எழுதிப் பெரும்புகழ் பெற்ற நல்ல நண்பர். அவருடைய தலைமையில் சங்கம் சீரிய பணியாற்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மாநாட்டைத் தொடக்கிவைக்க இசைந்திருக்கும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை அறியாதவர்கள் பாரதநாட்டை அறியாதவர்கள் என்றே கூறிவிடலாம். நிர்வாக நேர்மையும், செயலாற்றும் திறமையும், சிந்தனை வளமும் சிறப்பாகப் பெற்றுள்ள அவர் தமது எழுத்தின் மூலம் சிறந்த நூல்களையும் படைத்திருக்கிறார். மேலை நாடுகள் சென்று வந்த தம் அனுபவங்களை எல்லாம் தொகுத்து 'நான் சென்ற சில நாடுகள்' ''உலகம் சுற்றினேன்'' என்று அவர் தொகுத்த இரண்டு நூல்கள் பிரயாண நூல் வரிசையில் மிகச் சிறப்பான இடம் பெறுவன. அவ்வாறே தமது மொழிக்கொள்கையை வற்புறுத்துவதற்காகத் 'தமிழால் முடியும்' முதலிய நூலினையும் எழுதியுள்ளார். நீண்டகால அரசியல் அனுபவமும், நுணுக்கமும், பக்குவமும் பெற்றுள்ள அவர் தமது அரசியல் அனுபவங்களை எல்லாம்



திரு. நா. மகாலிங்கம்

தொகுத்துத்திரட்டி எழுதுமாறு இந்தவேளையில் வேண்டுகிறோம். இப்படிப்பட்ட அறிஞர்கள் தங்கள் அனுபவங்களை எழுதுவதன் மூலம்தான் நாட்டின் ஒரு குறிப்பிட்ட கால வரலாற்றை மிக நல்ல வகையில் நாம் அறிந்து கொள்ளமுடியும்.

'பாம்பறியும் பாம்பின் கால்' என்றபடி எழுத்தாளர்களாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து எழுத்தாளர்களாகிய நீங்கள் இங்குப் பாராட்டுவது போற்றத்தக்க அம்சமாகும். எழுத்தாளர் சங்கத்தில் தொடக்க கால முதல் செயலாளராகவும், புதுமை இலக்கிய ஆராய்ச்சி நூலாசிரியராகவும் விளக்கும் திரு. கோதண்டராமன் அவர்களையும், சங்க இலக்கியங்களுக்கெல்லாம் எளிய இனிய உரை எழுதும் பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களையும் பாராட்டுகின்றோம். அண்மையில் நான் ஔவை அவர்களின் நற்றிணை உரை நூலைப் படித்தபோது ஒவ்வொரு பாடலுக்கும் ஆசிரியர் எழுதும் முன்னுரை வரலாறு, கல்வெட்டு, இலக்கிய நயம், உரை விளக்கம் எல்லாம் சிறப்பாக இடம்பெற்று இருப்பதால் நற்றிணைக்கு விளக்கத்தின் மூலம் சிறப்பு உயருகின்றது எனக் கருதினேன். பிரெஞ்சு மொழியில் தமிழைப் பரப்பும் பெரும்பணியில் ஈடுபட்டுவரும் திரு. தேசிகப் பிள்ளையையும், இந்தி மொழியில் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நடத்திய டாக்டர் மாலிக் முகமது அவர்களையும் இங்கே கௌரவித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பரப்ப வேண்டிய அத்யாவசியம் இப்போது மிக முக்கியமான தேவையாக இருக்கிறது.

எழுத்தாளர்கள் ஒரு நாட்டின் கௌரவத்திற்குரிய மக்களாவர். ஒரு நாட்டின் பெருமை அந்த நாட்டின் எழுத்தாளர்களால்தான் ஏற்படும் என்றால் அது மிகையாகாது. 'கம்பன் பிறந்த தமிழ்நாடு! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று, பாரதியார் பிறந்த நாட்டிற்குப் பெருமை, அதன் சிறந்த எழுத்தாளர்களால் தான் வரும்என்று கூறுகின்றார். இன்றைய எழுத்தாளர்கள் இக்காலத்துச் சமூகத்தின் சிக்கல்களையும், மக்களின் மன நிலையையும் ஆராய முற்படவேண்டும். இதற்கென அவர்கள் சுற்றுப்பயணம் செய்வதற்கு அரசாங்கம் பிரயாணச் சலுகை தர வேண்டும். தமிழ் எழுத்தாளர் நோபல் பரிசு பெறுகிற நன்னாளை நாம் விரைவில் எதிர் நோக்குகின்றோம். மேலைநாட்டு எழுத்தாளர்கள், சரித்திரத்தையும், விஞ்ஞானத்தையும், மருத்துவத்தையும், புதை பொருளாராய்ச்சியையும் கூடப் பொருளாகக் கொண்டு அமர இலக்கியங்களைப் படைத்துள்ளார்கள்.

சர் ஜேம்ஸ் ஜீன்ஸ், சி.இ. எம். ஜோட், ரசல் போன்றவர்களின் நூல்களை எண்ணிப்பார்ப்பது அவசியம். கால வெள்ளத்தைக் கடந்து நிற்பது தான் இலக்கியத்தின் பெருமையாகும். எனவே காலத்தோடுமனம்போனபோக்கில்எழுதுவதைக் காட்டிலும், காலத்தைக் கடந்து நிற்கும் அரிய உண்மைகளைத் தெளிவாக்கும் சமூக நிலைகளை எல்லாம் ஆராயவேண்டும். 'எழுதுகோல் தெய்வம்—இந்த எழுத்தும் தெய்வம்'—என்று பாரதியார் கூறியபடி எழுத்திலும், எழுதுவதிலும் நம் நாட்டிற்குரிய புனிதத்தை எழுத்தாளர்கள் போற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வருக...வருக என மகிழ்ச்சியோடு மனமார வரவேற்கின்றேன்.



# தமிழ் எழுத்தாளர்
# பதினைந்தாவது மாநாடு

1967 டிசம்பர் 16, 17

# தலைமையுரை

அகிலன்

மாநாட்டைத் தொடங்கிவைக்க வந்திருக்கும் மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! வரவேற்புக் குழுத் தலைவரான வள்ளல் அவர்களே! சங்கத்தின் பாராட்டைப் பெறும் அறிஞர் பெருமக்களே! எழுத்தாள நண்பர்களே! மாநாட்டைச் சிறப்பிக்க வந்து கூடியிருக்கும் பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் அன்பு கலந்த வணக்கம். சிறப்புமிக்க நமது பழம்பெரும் இலக்கிய மரபைப் போற்றித் தமிழின் தனித்தன்மைக்கு அஞ்சலி செலுத்துதல், இறவாதபுகழுடைய புத்திலக்கியங்கள் தமிழில் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், நம் நாட்டுப் பிறமொழி இலக்கியங்களோடும் உலக இலக்கியங்களோடும் உறவு கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது முக்கியமான நோக்கங்களாகக் கொண்டிருக்கிறது.

தொல்காப்பியர் காலந்தொட்டு வளர்ந்து வரும் இலக்கியப் பெருமரபை, சங்கப் புலவர்களும் வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் செழிக்கச் செய்துள்ள மரபை நாங்கள் போற்றுகிறோம் என்பதைச் சுட்டிக்காட்டவே அந்த மரபுவழி வந்த பெரியார் ஒளவை துரைசாமிப் பிள்ளை அவர்களை நாங்கள் பாராட்டி மகிழ்கிறோம். கருத்து வளத்தாலும், கற்பனை ஆற்றலாலும், நடையழகாலும் கால வெள்ளத்தை எதிர்த்து நிலைத்து நிற்கும் நமது பேரிலக்கியங்கள் அனைத்துக்கும் நாம் அவற்றிற் பல நூல்களின் உரையாசிரியரான திரு. ஒளவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் வாயிலாக அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆனால், பழம் பெருமை பேசுவது மட்டிலுமே எங்கள் தொழிலென்று நினைத்துவிட வேண்டாம். தமிழ் இலக்கியத்தில் புது யுகத்தையே தோற்றுவித்த பாரதியின் சொல் தமிழ் எழுத்தாளர்களுக்கு அவர்களுடைய கடமையை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

''மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல்
வேண்டும்.''

ஆம்; இறவாத புகழுடைய புது நூல்கள் படைக்க வேண்டுமென்ற பேராசை நமக்கும் உண்டு. நம்முடைய முன்னோர்களால் அது முடிந்ததென்றால் ஏன் நம்மால் அது முடியாது? ஆகவேதான், இன்றைய 'எழுத்துக்களைப் போற்றும்' வகையில், இன்றைய இலக்கியப் படைப்புக்கள் பற்றிய திறனாய்வு நடத்தி வரும் பி. கோதண்டராமன் அவர்களைச் சிறப்புச் செய்து நாம் பெருமையடைகிறோம்.

நமது இலக்கியத்தின் மனிதத் தன்மையைக் காக்க விரும்பும் நாம். அதற்காகச் சுற்றுப்புற உலகத்திலிருந்து ஒதுங்கிக் கிணற்றுத் தவளைகளாகவும் வாழ விரும்பவில்லை. பிறமொழிகளுக்குத் தமிழ் இலக்கியத்தின் வளத்தைக் கொடுக்கவும், பிறமொழிகளின் இலக்கிய வளத்தைத் தமிழுக்கு உரமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் நாம் விழைகிறோம். இதற்குச் சான்றாகவே, நமது இடைக்கால வைணவ இலக்கியங்களைப் பற்றி இந்தி மொழியில் ஆராய்ச்சி நூல் வெளியிட்ட டாக்டர் மாலிக் முகமது அவர்களையும், தமிழ் இலக்கியங்களை பிரஞ்சு மொழியில் கொடுத்துள்ள தேசிகப்பிள்ளை அவர்களையும் சங்கம் மறக்கவில்லை. பிற இந்திய மொழிகளோடு நாம் கொண்டுள்ள உறவின் சின்னமாக மாலிக் முகமது அவர்களும், நமது உலக இலக்கியத் தொடர்பின் சின்னமாகத் தேசிகப்பிள்ளை அவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். 'பிறநாடுகளில் எழுத்தும் எழுத்தாளரும்' என்பது குறித்து நாளைக்கு எழுத்தாள நண்பர்கள் பலர் பேச

இருக்கிறார்கள். இவ்வாறாக, மாநாட்டின் தொடக்க விழாவிலிருந்து நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கவனித்தால், இந்த மாநாடு நம் இலக்கியக் கொள்கையின் விளக்கமாகவே அமைந்திருப்பதை அறிஞர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் போது சென்னைநகரில் பல தமிழறிஞர்களுக்குச் சிறப்பாகச் சிலைவைக்கப் போகிறார்கள். தமிழ் எழுத்தாளர்களுக்குப் பலவகையிலும் வழிகாட்டியாக இருந்த கல்கி அவர்களுக்கும் ஒரு சிலை வைக்குமாறு தமிழக அரசை இந்தச் சமயத்தில் எழுத்தாளர்கள் சார்பில் நான் வேண்டுகிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளில் நாட்டின் புற வாழ்க்கை வளர்ந்திருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நம்மில் பலர், விஞ்ஞான அறிவியலில், பொருளாதாரத் துறையில், தொழில் துறையில், மருத்துவத் துறையில், நாம் அடிமைப் பட்டிருந்த காலத்தைவிடக் கணிசமான அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். எழுத்துக் கல்வி கூடப் பன்மடங்கு பரவித்தான் இருக்கிறது—பயன் என்ன?

ஒவ்வொரு துறையிலும் போலித்தனம் ஊடுருவி வருகிறது; தன்னலம் தலைவிரித்தாடுகிறது. மனிதனுக்கு மகிழ்ச்சியூட்டி அவனுடைய உள்ளத்தை உயர்த்தும் துறைகளெனக் கருதப்படும் கலைத்துறை, இலக்கியத்துறை, கல்வித்துறைகள் கூடக் குறுக்கு வழி வாணிபப் போட்டிகளால் மூச்சுத் திணறுகின்றன. சமுதாயத்துக்கும் பணி செய்து வாழவேண்டிய மனிதன், சமுதாயத்தை ஏமாற்றி வாழத் துணிந்து விட்டான். ஆகவே தான் நாட்டில் அங்கங்கே கட்டுப் பாடின்மையும் ஒழுங்கீனங்களும் தலைதூக்கி, நமது அமைதிக்கும் வலிமைக்குமே அறைகூவல் எழுப்பி வருகின்றன.

பேனா மன்னர்களாகிய நாம் நம்முடைய மனச்சாட்சி எனும் மாபெருந் தலைவனுக்குக் கட்டுப்பட்ட ராணுவ வீரர்கள், வாள் முனையின் வலிமை உலகத்தில் அணுகுண்டு வந்தவுடன் மழுங்கிப் போய்விட்டது. ஆனால், உலகத்தில் சுய சிந்தனை உள்ள எழுத்தாளன் ஒருவன் வாழும் வரை, ஏன் அவன் இறந்த பின்னரும் கூட, அவனது பேனாமுனை அணுகுண்டுவிடம் தோற்றுப்போகாது. அந்தப் பேனாமுனை அன்புக்காகவும் அறத்துக்காகவும் உறவுக்காகவும் உண்மைக்காகவும் போராடும் வரையில் அதை உலகில் எந்தச் சக்தியாலும் முறியடிக்க முடியாது.

மனிதர்களின் உள்ளத்துக்கு மனிதப் பண்பையும், சித்தனைக்கு ஒளியையும் அவர்களறியா வண்ணம் ஊட்டுவதற்குக் கடமைப்பட்டவர்கள் நாம். சிறுகதைகளாக, நாவல்களாக, நாடகங்களாக, கட்டுரைகளாக, கவிதைகளாக நாம் படைத்துக் கொடுப்போம். சுவையாகப் படைத்துக்கொடுப்போம். நம் நாட்டு மருத்துவர்கள் தேனில் மருந்தைக் குழைத்துக் கொடுப்பது போல், அவசியமானால் கசப்பான உண்மைகளைக் கூட இனிக்க இனிக்கக் கொடுப்போம்! முதலில் நாமே சுயசிந்தனையாளர்களாக இருந்தால் தான், பரந்து விரிந்த கண்ணோட்டமுடையவர்களாக இருந்தால்தான், நம்முடைய படைப்புகளும் சக்தி பெற்றவையாக இருக்கும். இன்றைய வாழ்க்கையின் சிக்கல்களைப் பற்றி நாம் எழுதத்தான் வேண்டும்; ஆனால், நாம் எழுதும் முறையோ என்றும்நிலைத்திருக்கத்தக்க வலிமையைப் பெற்றிருக்க வேண்டும். Contemporary life எழுதுவது இலக்கியமாகாது என்பார்கள் சிலர். சங்ககாலப் படைப்புக்கள் அந்தக்கால Contemporary காட்சிகளே. ஆகவே, Contemporary life உள்ள படைப்பு, Temporary life உள்ள அற்பாயுள் படைப்பாகப் போய்விடக் கூடாது என்பதுதான் முக்கியம்!

இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கு எழுத்தாளர்களின் ''சக்திக்கு மீறிய இடர்ப்பாடுகள் சில. இருக்கவே செய்கின்றன. ஓரளவு சிந்தனையாற்றல் உள்ளவர்களால்தான் இன்றைய இலக்கியப் படைப்புக்களைக் கூடச் சுவைத்து அனுபவிக்க முடியுமே தவிர, படிக்கத் தெரிந்து விட்டால் மட்டும் போதாது. படிக்கத் தெரிந்தவர்களைத் திசை திருப்பி விடுவதற்கும், பரபரப்பான செய்திகளாலும் திரைமயக்கு விவரங்களாலும் அவர்களைக் கவர்வதற்கும் இங்கே போட்டிகள் நடைபெறுகின்றன.

இவற்றால் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயிலும் மாணவ மாணவியரில் பலர், சிந்தனை உழைப்பற்ற பொழுது போக்குக்களையே பெரிதும் விரும்பும் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் எழுத்துக்களையே அச்சிடாமல் புகைப்படங்களை மட்டுமே போட வேண்டிய காலம் வந்தாலும் வரக்கூடும்!

செய்திப் பத்திரிகைகள், வாரப்பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் நடத்தும் பேரன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஒரு சில பத்திரிகைகள் மட்டிலுமே இலக்கியத் திறனாய்வுக்காகப் பக்கங்களை ஒதுக்குகின்றன. தயவுசெய்து எல்லா பத்திரிகைகளும் சேர்ந்து, நாட்டில் படிக்கும் பழக்கத்தைத் தூண்டிவிட உதவுங்கள். இலக்கியக் கூட்டங்களைப் பற்றிய நடவடிக்கைகளும் நடுநிலைச் சிந்தனையாளர்களின் கருத்துக்களும் மக்களிடையே பரவுவதற்குத் துணைசெய்யுங்கள். இலக்கிய வளர்ச்சிக்காக மட்டும் நான் இந்த வேண்டுகோள் விடவில்லை. நாட்டில் குடியாட்சி நிலைத்து நமது சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், சுயசிந்தனையை மதிக்கக்கூடிய மக்கள் கூட்டம் பெருகினால்தான் அது முடியும்.

குடியாட்சி நிலைக்கும்வரையில்தான் நம்முடைய எழுத்துச் சுதந்திரமும் இங்கு நிலைக்கும்.

பிற இந்திய மாநிலங்களிலும் சரி, பிற நாடுகளிலும் சரி, கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இந்த நூற்றுண்டு உரைநடை இலக்கியங்களுக்குப் போதிய இடம் அளித்திருக்கிறார்கள். பாடநூல்களாகவும் துணைப்பாட நூல்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிறுகதைகளும் நாவல்களும் கல்வித்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இங்குகூட ஆங்கில மறுமலர்ச்சிச் சிறுகதைகளும்நாவல்களும் தாராளமாகக் கற்றுத் தரப்படுகின்றன ஆனால், புதுமைத் தமிழ் இலக்கியம் மட்டிலும் இன்றும் தீண்டப்படாத படைப்பாகவே இங்கு கருதப் படுகிறது. தாகூரின் கவிதைகளிலும், ஏன், ஷேக்ஷ்பியரின் நாடகங்களிலும் கூடச் சிற்சில இலக்கணத் தவறுகள் உண்டு என்று கற்றோர் கூறுகிறார்கள். அவற்றைக் காரணம் காட்டி யாரும் அவர்களைக் கல்லூரிகளில் அனுமதிக்க மறுக்கவில்லை. அதனால் தமிழ் எழுத்தாளர்கள் நமதுமரபு வழிவந்தஇலக்கணத்தைப் புறக்கணிக்க வேண்டுமென நான் கூறவில்லை. சிறந்த கலைப்படைப்புக்களைத் தடுக்க இலக்கணம் ஓர் ஆயுதமாகப் பயன்படக் கூடாது என்பதுதான் என் கருத்து. இன்றைய வாழ்வியலைப் படம்பிடிக்கும் புதிய படைப்புக்களுக்கு ஏற்ற இடத்தைக் கல்விக்கூடங்கள் அளிக்கத் தவறி விட்டால், நாளைக்கு மாணவர்களில் பலர் வகுப்பு நேரத்தில் திரைப்படக் கொட்டகைகளிலும், கட்சிச் சண்டைக் கூடங்களிலும் கழிக்கும் நிலை வரக்கூடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மட்டிலுமே இந்த வருந்தத் தக்கநிலை இன்றும் இருந்துவருகிறது. இது மாறத்தான் வேண்டும்.

கடைசியாக, எழுத்தாள நண்பர்களுக்கும் ஒரு வேண்டுகோள்:—

நாம் நமது உணர்ச்சி அனுபவங்களையும் சிந்தனை அனுபவங்களையும் மக்களுக்கு வழங்குவோரிடம் ஓரளவு நட்புறவோடு பழகுவது அவசியம். இதற்காக நாம் நமது கருத்துக்களையோ லட்சியங்களையோ சிறிதும் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. பத்திரிகையாளர், பதிப்பாளர், முதலியோரிடம் நாம் முரண்பட்டு நின்றால், நமது சிந்தனைகளையே நாம் மக்களிடம் பரப்ப முடியாத நிலைக்கு வந்து விடுவோம். ஆகவே போட்டிகள் நிறைந்த உலகத்தில் வாழும் அவர்கள் போக்கோடு நாம் நேரடியாக மோதிக் கொள்ளாமலும், அதே சமயம் நமக்குள்ள எழுத்துரிமைகளில் அவர்கள் தலையிடாமலும் பார்த்துக்கொண்டு நாம் நம்முடைய படைப்புக்களை வழங்குவோம்.

காலத்தை நம்மால் மாற்றமுடியும் என்ற நம்பிக்கை நமக்கு முதலில் வேண்டும். காலத்தை வெல்லக்கூடிய கருவியான இலக்கியப் படைப்புக்களைக் கொண்டே நாம்பொறுமையோடும் இடைவிடாமலும் அதைச் செய்து கொண்டிருப்போம்.

சொல் என்பது அகராதியில் உள்ளபோது ஒரு கருவி; அதை நாம் நம்முடய தனித்தன்மை கொண்ட எழுத்தாக்கும் போது அது உயிர் பெற்றுவிடுகிறது. இந்த உயிராற்றலால் நாம் மக்களை அலைக்கழித்து, அவர்களிடமுள்ள விலங்குணர்ச்சிகளைத் தூண்டிவிடவும் முடியும்; அவர்களிடமுள்ள நல்ல பண்புகளைச் சுட்டிக்காட்டி, அவர்கள் மனிதர்களாக வாழ வழிகாட்டவும் முடியும். வள்ளுவர் முதல் பாரதிவரை உள்ள நமது முன்னோர்களை நாம் நினைத்துக் கொண்டால் நமது ஆற்றலை நாம் எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பது நமக்கு விளங்கும்.

எழுத்தை ஆள்பவர் எழுத்தாளர்; நம்மை ஆள நாம் கற்றுக் கொண்டால் நம்மால் எழுத்தையும் ஆளமுடியும்; நம் எழுத்தால் உலகையும் ஆளமுடியும். நமது நிறைவு குறைவுகளை நாமே ஆராய்வதற்காகத்தான் நாளைக்கு முற்பகலில் ஒரு கருத்தரங்கமும், மாலையில் ஒரு பட்டிமன்றமும் வைத்திருக்கிறோம். நம்முடைய ஆற்றலை வளர்த்துக்கொள்ள அவை வழிகாட்டும் என நம்புகிறேன்.

இறுதியாக, எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் ஒரு வேண்டுகோள். நமது வரவேற்புக்குழுத் தலைவர் அவர்கள் நாம் நோபல் பரிசுபெற வேண்டுமென மனமுவந்து வாழ்த்தினார்கள். அதற்கு நாம் நன்றி செலுத்துவோம். ஆனால், நோபல் பரிசு பெறுபவர்களில் பலர், அதற்கு முன்பே தங்களுடைய நாட்டிலும் பல இலக்கியப் பரிசுகளைப் பெறுவது வழக்கம். நோபல் பரிசுபோன்ற ஒரு திட்டத்தையோ அல்லது பாரதீய ஞானபீடத்தின் பரிசு போன்ற ஒரு திட்டத்தையோ தமிழ் நாட்டில் உருவாக்க முடியும். நமது வரவேற்புக்குழுத் தலைவர் அவர்களும் நமது விழாவைத் தொடங்கி வைத்த தலைவர் அவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் உள்ள பல பெரு மக்கள் இதற்கு வரவேற்புத் தருவார்கள். முனைந்து இவர்கள் முன்னே நின்றால் மூன்றே மாதங்களில் திட்டம் உருவாகி விடும். தமிழ் எழுத்தாளர்களுடைய உற்சாகத்தைத் தூண்டவும் இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழில் தோன்றவும் இது பெருந்துணை செய்யும். ஆகவே, எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் இந்த வேண்டுகோளை விடுவதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்,

# தீபம்

ஆசிரியர் : நா. பார்த்தசாரதி

(தலைசிறந்த தமிழ் இலக்கிய மாத இதழ்)

மணிக்கொடி, கிராம ஊழியன், சக்தி, சரஸ்வதி ஆகிய பத்திரிகைகளுக்குப்பின் அதே தரத்திற்கு வெளிவரும் ஒரே மாதப்பத்திரிகை. எழுத்தாளர்களும், எழுத்தாளர்களின் வாசகர்களும் அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை.

ஆண்டுச் சந்தா ரூ. 10

அரை ஆண்டுச் சந்தா ரூ. 5

விவரங்களுக்கு ;

தீபம் காரியாலயம்

6, நல்லத்தம்பி செட்டித் தெரு,

சென்னை - 2.


# நம் சங்கத்தின் நிதி உதவிகள்

புதுமைப்பித்தன் குடும்பத்திற்கு ரூ. 8000 திரட்டிக் கொடுத்திருக்கிறது.

வசந்தன் குடும்பத்திற்கு நிதி திரட்டிக் கொடுத்துள்ளது. ரூ. 250

எழுத்தாளர் உதவிநிதியாக ரூ. 1500 சேர்த்தது ;

1. திரு. எம். எல். சபரிராஜனுக்காக ரூ. 250
2. ,, கி. ரர. கோபலன் குடும்பத்திற்கு ரூ. 250
3. ,, கன்னிக் கண்ணனுக்கு வைத்திய உதவிக்காக ரூ. 250
4. ,, நெல்லையப்பருக்குச் சேமநல நிதியிலிருந்து ரூ. 200
5. ,, கடலூர் முத்துக் குமாரசாமி பாவலரின்மனைவியான திருமதி சரோஜா பாவலருக்கு ரூ. 200
6. ,, உமாகுருமூர்த்தி ரூ. 250
7. புதுமைச்சித்தன் ரூ. 150

1954-ல் பரலி சு. நெல்லையப்பருக்குக் ''குமுதம்'' ஆசிரியர் திரு. எஸ். ஏ. பி. அண்ணாமலை மூலம் திரட்டப்பட்ட நிதியைச் சங்கத்தின் சார்பில் சென்னைப் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. சண்முக ராஜேஸ்வர சேதுபதியைக் கொண்டு ரூ. 2591-50 வழங்கியது.

இவருக்கு இலக்கிய ஒய்வூதியம் அளிக்க வேண்டுமென்று பொதுமக்கள் மனு ஒன்றைத் தயாரித்து இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளது.

PROSPERITY THROUGH PARTNERSHIP

# உலக வாணிபத் தொழில் பொருட்காட்சி

## சென்னை-30.

★

தந்தி: INDIANFAIR　　　　போன்: 61123 to 61127

★

அகில இந்திய உற்பத்தியாளர்களின் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாபெரும் பொருட்காட்சி 1968 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடைபெறும்.

**பல்வேறு வெளிநாடுகள், மத்திய அரசாங்க அமைச்சுகள், மாநில அரசாங்கங்கள் கலந்து கொள்ளும் இப்பொருட்காட்சியில் அரசாங்க உதவி யுடனும் தனிப்பட்ட முறையிலும் இயங்கிவரும் இந்தியாவிலுள்ள பல்வேறு தொழில் ஸ்தாபனங் களும் கலந்துகொள்கின்றன.**

ஆசியாவிலேயே இதுவரையிலும் நடைபெற்றுள்ள பொருட்காட்சிகளில் இதுவே மிகப் பெரியதாகத் திகழும்.

எல்லோருக்கும் பயன்படும் பல்வேறு பிரிவுகளும் உல்லாச நிகழ்ச்சிகளும் இப்பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ரசிகப் பெருமக்களுக்கு எங்களின் நல்வாழ்த்துக்கள்.

★

எங்கள் முயற்சியில் உருவாக்கப்பட்ட நவராத்திரி, திருவிளையாடல், திருவருட் செல்வர் முதலிய படங்களுக்குப்பேராதரவு தந்து ஊக்குவித்ததுபோல் அடுத்து எங்கள் தயாரிப்பான,

## "தில்லானா மோகனாம்பாள்"

வண்ணப்படம் வெற்றியோடு திகழ உங்களின் நல்லாசிகளைத் தந்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்.

★

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்,
62/2. மோபரீஸ் ரோடு, சென்னை-18.

இன்றைய உலகின்
முதுகெலும்பைப் போன்றவர்கள்
திறம் வாய்ந்த எழுதுகோலைப் பெற்ற
எழுத்தாளர்கள்.
தமிழ் எழுத்தாளர்களின் பணி
உலகை உய்விப்பதாக இருக்கட்டும்!

"யாதும் ஊரே!
யாவரும் கேளிர்"

என்று பாடிய கணியன் பூங்குன்றனும்
ஒரு தமிழன்தான்
என்பதை உலகம்
மறந்துவிட முடியுமா?

தமிழ் எழுத்தாளர்களுக்கு எங்களின்
அன்பான வாழ்த்துகள்!



பொம்மை

இந்தியாவிலேயே அதிகமாக
விற்பனையாகும் மாதப் பத்திரிகை

## பேராசிரியர்

# ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள்

திரு. நா. பார்த்தசாரதி
(ஆசிரியர், தீபம்)

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், வேங்கடசாமி நாட்டார், ரா. ராகவையங்கார், கரந்தைக் கவியரசு, நாவலர் ச. சோ. பாரதியார் போன்ற பெரும் புலவர்களை இழந்தபின் அந்த அளவு ஆழமான தமிழ்ப் புலமையுள்ளவர்களில் ஒரு சிலரையே நாம் இன்று நம்மிடையே பெற்றிருக்கிறோம். அவர்களில் பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களும் ஒருவர். அவரது தமிழ்ப் புலமை செறிவும், ஆழமும். நிறைந்தது. பழந்தமிழ் நூல்களுக்கு உரை கண்ட பெருமையில் அவருக்கிணையானவர் இன்று வேறெவரும் இல்லை. இந்த ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம் அவரைப் பெருமைப்படுத்துவதன் மூலம் தானே பெருமைப்படுகிறது. அறுபத்துநான்கு வயது நிறைந்த பேராசிரியர் 'ஔவை' அவர்கள்—மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரால் 'உரை வேந்தர்' என்ற பெரும் பட்டமளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பட்டிருக்கிறார். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஒரு சில குறிப்புக்களையாவது நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும்.

'ஔவை'—என்ற அடைமொழி அவருடைய பெயருக்கு முன்னால் இணைய நேர்ந்தது தமிழ்ப் புலமையாலும் அவருக்குப் பொருந்துமென்றாலும் அவரது பிறந்த ஊராகிய 'ஔவையார் குப்பத்தின் நினைவாகவே அச் சொல் பெயரோடு ஒட்டிக்கொண்டு விட்டது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மயிலத்திலிருந்து வந்தவாசிக்குச் செல்லும் சாலையில்—மயிலம் புகைவண்டி நிலையத்துக்கு வடமேற்கே இரண்டு கல் தொலைவில் இருக்கும் ஔவையார் குப்பம் கிராமத்தில் 1903ம் ஆண்டு தோன்றினார் பேராசிரியர் 'ஔவை' அவர்கள். 'பந்தன்' என்ற வள்ளலுக்குரிய பந்தயங்கலத்துக்கு மேற்கு எல்லையாக ஔவையார் குப்பம் அமைந்திருக்கிறது. பேராசிரியர் ஔவை அவர்களின் தந்தையாகிய சுந்தரம் பிள்ளை அவர்கள் கிராமக் கர்ணமாக இருந்தவர். அவர் மயிலமலை முருகன்மேல் பல செய்யுள் நூல்களையும் இயற்றியிருக்கிறார். கர்ணம் சுந்தரம் பிள்ளை—சந்திரமதி தம்பதிகளின் நான்காவது புதல்வரே நம் பேராசிரியராவார்.

பேராசிரியர் 'ஔவை' அவர்களின் உயர் பள்ளிக் கல்வி திண்டிவனம் அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிக் கல்வி வேலூர் ஊரீஸ் கல்லூரியிலும் வாய்த்தன. பேராசிரியரின் குடும்பமே தமிழிலும் சைவத்திலும், தோய்ந்த பாங்குடையதாய் வேறு பல நற்பண்புகளுக்கும் உறைவிடமாக இருந்தது என்றாலும் முறையான தமிழ்ப் புலமையை, சீர்காழிக் கோவிந்தசாமி ரெட்டியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை ஆகியோரிடமிருந்து பெற்றார் நம் பேராசிரியர் ஔவை அவர்கள். சைவ சமயக் கல்வியைத் திரு. கந்தசாமி தேசிகரிடமிருந்தும், தவத்திரு வாலையானந்த சாமிகளிடத்திலிருந்தும் பெற்றார். 1930-ல் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டமும் பெற்றார். ஏற்கெனவே இருந்த புலமையும் அறிவாற்றலும், பட்டத்தினால் பெருமை பெற்றன என்பதைவிடப் பட்டம் புலமை உள்ள இடத்தை அடைந்து தகுதிபெற்றது என்பதே சிறப்புடையது.

பின்பு நம் பேராசிரியர் அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியிலும், வடார்க்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளிலும், திருப்பதி திருவேங்கடவன் வடமொழிக் கல்லூரியிலும் தமிழ்ப்பணி புரிந்தார். அவரது பணி பலதுறையிலும் சிறந்த காலம் அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு வந்த பின்பே தொடங்கியது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். அந்தக் காலத்திலேயே பல நூல்களை ஆராயவும், உரை எழுதவும், அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது என்பதைத் தமிழகம் நன்கு அறியும். தமிழ்ப் பண்ணையாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக்

கழகம் பேராசிரியரவர்களிடம் சிறந்த மாணவர்கள் பலரைக் கற்கும்படி வாய்ப்பளிக்கச் செய்ய உதவியாயிருந்தது. பேராசிரியர் இந்தப் பல்கலைக் கழக மூலம் தமிழகத்துக்குப் பெரிதும் பயன்பட்டதோடு—சிறப்பும் அளித்தார்.

அதன் பின்பு அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவர்களின் நற்பயன் மதுரைத் தியாகராசர் கல்லூரிக்குக் கிடைத்தது. பேராசிரியர் 'ஔவை' அவர்கள் மதுரைக்கு வந்தார்கள். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிஞர்கள்; இன்றும் பணியாற்றி வருகிருர்கள்.

## சொற்பொழிவாளர்—உரையாசிரியர்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினரால் 'சித்தாந்த கலாநிதி'—என்ற பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் அவர்கள் சிறந்த சொற்பொழிவாளருமாவார்கள். சைவ சித்தாந்தத்தில் பேராசிரியரவர்களுக்கு நல்ல தேர்ச்சி உண்டு. 'திருவிளங்கு'—என்று தொடங்கும் கணீரென்ற காப்புச் செய்யுளோடு அவர் இலக்கியச் சொற்பொழிவுகளைத் தொடங்கிஞல் நுணுக்கமும், ஆழமும், நிறைந்த கருத்துக்கள் வெள்ளம்போல் பெருக்கெடுத்து வரும். அவையோர் வியப்பர்.

ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை ஆகிய நூல்களுக்கும், மணிமேகலை பிற்பகுதிக்கும் அவர் எழுதியுள்ள உரைகள் தமிழ் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பேருதவிபுரிய வல்லவையாகும். பதிற்றுப்பத்தைப் புலவர்கள் 'இரும்புக் கடலை'—என்றஞ்சுவர். 'மணிமேகலை' பிற்பகுதி சமய நுணுக்கங்களும் தருக்க தத்துவ நுணுக்கங்களும் நிரம்பியது. இவை இரண்டிற்கும் உரை கண்டதன் மூலமே பேராசிரியரின் புலமைத் திறனை நாம் அறிந்து கொள்ளலாம். நூல்களுக்கு உரை கண்டதோடு வேறு பல அரும் பணிகளையும் பேராசிரியர் அவர்கள் புரிந்துள்ளார்கள். சிவஞான போதச் சிற்றுரை, ஞானாமிர்தம் பழையவுரை, ஆகியவற்றைப் பதிப்பாசிரியராயிருந்து நன்கு வெளியிட்டிருக்கிருர்கள்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி ஆகிய நூல்களுக்குச் சுருக்கம் (Abridgement) வெளியிட்டிருக்கிருர்கள்.

சீவகசிந்தாமணி ஆராய்ச்சி, மணிமேகலை ஆராய்ச்சி, சிலப்பதிகார ஆராய்ச்சி நூல்களையும், அவ்வைத் தமிழ், மதுரைக் குமரஞர், தமிழ்த் தாமரை, பெருந்தகைப் பெண்டிர், தெய்வப் புலவர், நந்தா விளக்கு, ஆகிய ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதிகளையும் பேராசிரியர் அவர்கள் தமிழுலகுக்கு அளித்திருக்கிருர்கள். வரலாற்று நூல்களை ஆக்குவதிலும் நம் பேராசிரியர் அவர்களுடைய கவனம் சென்றிருக்கிறது. சைவ இலக்கிய வரலாறு, சேர மன்னர் வரலாறு, ஆகிய நூல்கள் பேராசிரியர் அவர்களின் கைவண்ணத்தால் சிறப்புப் பெற்றவை. 'மத்தவிலாசத்தை' மொழி பெயர்த்தும் இருக்கிருர். பேராசிரியரவர்களின் சைவ மாநாட்டுத் தலைமையுரை, பத்துப்பாட்டுச் சொற்பொழிவு, குறுந்தொகைச் சொற்பொழிவு, ஆகிய சொற்பொழிவுகளும் நூல் வடிவில் இணைந்துள்ளன.

'An introduction to the study of Thirukkural'—என்ருேர் ஆங்கில நூலும் நம் பேராசிரியர் அவர்களால் எழுதப் பெற்றிருக்கிறது. அன்பு மாணவர்களால் 'ஔவை' என்றழைக்கப்படும் நம் பேராசிரியர் அவர்கள்—புலமையிலும், அறிவாற்றலிலும், எழுத்துத் திறனிலும் ஔவையாகவே விளங்குகிருர்கள். தமிழ் எழுத்தாளர் சங்கம் இந்த ஆண்டு நம் பேராசிரியர் அவர்களைக் கௌரவிக்கத் தேர்ந்தெடுத்தது மிகமிகப் பொருத்தமானது. சென்னையில் இரண்டாவது உலகத் தமிழராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெறுவதற்கு முன்னர் தமிழாராய்ச்சிக்கு அயராது பாடுபட்டு வரும் பேராசிரியர் ஒருவரைப் போற்றுவது ஏற்றமும் தகவும் உடையதாகும். பேராசிரியர் ஔவை அவர்கள் இன்னும் பல்லாண்டுக் காலம் நம்மிடையே வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றவேண்டும் என்று தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் அவரை இந்த நன்ஞளில் மனப்பூர்வமாக அவரை வாழ்த்துவோமாக!

# சிந்தனைச்செல்வர் சித்தார்த்தகௌதமர்

—ஔவை துரைசாமிப் பிள்ளை

இன்றைய வாழ்வில் அரசியல், பொருளாதாரம் விஞ்ஞானம் முதலிய துறைகளில் புதிய புதிய கருத்துக்களும் கொள்கைகளும் தோன்றி நலம்பல புரிந்துள்ளன. இவை யாவும் தக்கோர்களின் சிந்தனையின் விளைவாகும். இச்சிந்தனையாளர்கள் இன்று நேற்றல்ல; பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்பே தோன்றி மக்களினத்தின் நல்வாழ்வு குறித்துத் தங்கள் சிந்தனைகளைச் செலுத்திச் செயற்படுத்தியுள்ளனர்.

சிந்தனை என்பது மக்களுடைய மனத்தின் கண் நிகழும் எண்ணவகை, மனம் எப்பொழுதும் இடையறவின்றி யாதேனும் சிந்திப்பதையே தொழிலாகவுடையது; எனினும் சிற்சில இயற்கை நிகழ்ச்சிகள் அவர்கள் கண் முதலிய பொறிவழியாக மனத்தின்கண் தோய்ந்து புதிய புதிய சிந்தனைகளைத் தூண்டி விடுகின்றன. மரத்தின்கண் இருந்து பழுத்த பழம் வீழ்வதும், கொதிக்கிற தண்ணீர் ஆவியாகி வெளிப்படுவதும் இவை போன்ற பலவகை நிகழ்ச்சிகள் விஞ்ஞானிகளின் சிந்தனையைத் தூண்டிப் புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்குக் காரணமாகியதை விஞ்ஞான வரலாறு காட்டுகின்றது. இவ்வாறே இயற்கைக் காட்சிகள் சில அரசகுமாரனை கௌதம புத்தரின் மனத்தை அசைவித்துச் சிந்தனையை எழுப்பின. அச்சிந்தனை ஒரு பெரிய சமயத்தையே தோற்றுவித்துக் கிழக்காசிய நாட்டு மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தமை வரலாறு காட்டும் உண்மை.

நமது இந்தியநாட்டு வடபகுதியில் உள்ளது கோசலநாடு. 2500 ஆண்டுகட்கு முன் அந்நாட்டையாண்ட சுத்தோதனன் என்ற வேந்தனுக்கு மகனாகத் தோன்றியவர் கௌதம புத்தர். இவர்க்குப் பெற்றோர் இட்டு வழங்கிய பெயர் சித்தார்த்தன் என்பது. சித்தார்த்தர் என்ற சொல்லுக்கே சிந்தனைச் செல்வர் என்றுதான் பொருள்.

அரசர் அரண்மனையில் செல்வச் செழிப்பினிடையே பிறந்து வளர்ந்தமையின், புத்தருடைய மனம், நாடெங்கும் மக்கள் தம்மைப் போலவே குறைவிலா நிறைவாய் இன்ப வாழ்வே பெற்றுள்ளனர் என்றே எண்ணியிருந்தது. தந்தையாகிய அரசனும் இன்பமே நிலவும் சூழ்நிலையை அவர்க்கு அமைத்தளித்தான். அவர் உரிய கலை பலவும் கற்று மணப்பருவம் எய்திய போது அரசன் யசோதரை என்னும் அழகியை அவர்க்குத் திருமணம் செய்துவைத்து இளவரசுப் பட்டமும் தந்து சிறப்பித்தான். கௌதமபுத்தரும் வளவிய இளமைக்கு ஏற்ப இன்பத்துறையில் எளியரானார்.

இங்ஙனம் இருக்கையில் அவருடைய சிந்தனையைத் தூண்டும் நிகழ்ச்சிகள் தோன்றலாயின. ஒருநாள் தமது பெருமனையிலிருந்து தமது தந்தையைக் காணச் சிவிகையூர்ந்து செல்லுகையில் வழியில் பெரும் பிணியுற்று வருந்திவந்த நோயாளன் ஒருவனைக் கண்டார் கௌதமர். திடுக்கிட்டு, ''இப்படியும் மக்கள் துன்புறுகின்றனரா'', என்று எண்ணினார். பின்பொருநாள் மூத்து நரைத்து முகம் திரைத்துக் கோலூன்றித் தள்ளாடிவரும் முதியவன் ஒருவனை நோக்கினார். மக்கள் எய்தும் முதுமை நிலையை முற்றக் கண்டு எண்ணமிடலானார். வேறொருநாள் குதிரையேறிச் சென்று கொண்டிருக்கையில் பிணம் ஒன்றைக் கண்டு இறப்பின் இன்னலை எண்ணியறிந்தார்.

இவ்வாறு மண்ணிற்பிறந்த மக்கட்குப் பிணி, மூப்பு, சாக்காடு முதலியன விளைவிக்கும் துன்பங்களையும் பொருளும் வாழ்வும் நிலையின்றித் தேய்ந்துகெடும் துன்பங்களையும் கண்ட கௌதமர் நாடு காவல்புரியும் அரசன் நாட்டு மக்களை வருத்தும் இவற்றையும் போக்கி, இன்ப வாழ்வு நிலைபெறுவதற்கு முயலவேண்டும் என்று எண்ணி, இதற்காவனவற்றைச் சிந்திக்கலானார். பார்க்குமிடம் எங்கும் துன்பமே கண்டதனால் இத் துன்பத்திற்குக் காரணம் யாது? இத்துன்பத்தைப் போக்குமாறு எங்ஙனம்? அதற்குரிய வழிகள் யாவை? என்ற இந்நான்கு வினாக்கள் அவர் மனத்தில் எழுந்தன. அவையே கௌதமரின் சிந்தனைக்குப் பொருளாயின. இவற்றை நால்வகை வாய்மை என்று குறித்து,

> ''துன்பம் தோற்றம் பற்றே காரணம்
> இன்பம் வீடே பற்றிலி காரணம்
> ஒன்றிய வுரையே வாய்மை நான்காவது''

என மணிமேகலை கூறுகிறது. இவற்றைப் புத்த நூல்கள் நால்வகைச் சத்தியங்கள் என்று குறித்து, துக்கம், துக்கோற்பத்தி துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்று கூறுகின்றன.

இந்த உண்மைகளை முறையே சிந்திக்கலுற்ற

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு

எங்கள்

நல்வாழ்த்துகள்!

★

★

# இந்தியா பிஸ்டன்ஸ் லிமிடெட்

செம்பியம் சென்னை-11

கௌதமர் பிறந்த மக்களிடமாக இத்துன்பங்கள் காணப்படுதலால், பிறப்பே துன்பம், பிறந்தார்க்குவரும் பிணிகளும் துன்பம், இவ்வாறே முதுமையும் துன்பம், இறப்பும் துன்பம். இவற்றின் வேருக அன்பில்லாதவர் தொடர்பும், அன்புடையவர் பிரிவும் துன்பம் தருகின்றன. எனவே பிறப்பும் பிறந்து பெறும் வாழ்வும் துன்பமே என்ற முடிவுக்கு வருகின்ருர்.

இங்ஙனம் எங்கும் பரந்து காணப்படும் இத்துன்பத்துக்குக் காரணம் யாதாகலாம் என்ற சிந்தனை எழுகிறது. எல்லாவுயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன; இன்பத்துக்கு உடம்பும், பொருளும், இடமும் ஆக்கமாவது கண்டு உடம்பின்பால் பற்றும் பொருளின்பால் வேட்கையும் இடத்தின்பால் விருப்பும் உண்டாகின்றன; இவை நிரம்ப இருந்தால்தான் இன்பம் பெருகுமென்று எண்ணி இவற்றின்பால் ஆரா இயற்கைத்தாகிய அவா உண்டாகிறது. அந்த அவாதான் பிறப்புக்கே காரணம்; துன்பத்துக்கு முதல் என்ற முடிவை எய்துகின்ருர்.

இவ்வண்ணம் துன்பத்தையும், அதற்குரிய காரணத்தையும் சிந்தனையிற்கண்ட கௌதமர், இத்துன்பப்பிணிப்பிலிருந்து மக்கட்கு விடுதலை கிடையாதா? என்று எண்ண மிடலானுர். விடுதலையுண்டு; பிறப்புக்கே காரணமாகிய பற்று என்றும் ஆசையென்றும் கூறப்படும் அவாவை ஒழித்தல் வேண்டும். அது தன்னிடத்தே இல்லாதபடி அறுத்து அதிலிருந்து தன்னை நீக்கிக் கொள்ளுவதுதான் செய்யத்தக்கது; அது செய்தால் பற்றறுத்துத் துன்பமேயில்லாத பேரின்பம் பெறலாம் என்று துணிகின்ருர். இதனை,

> "பிறந்தோர் உறுவது பெருகிய இன்பம்;
> பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்னது
> அற்ருேர் உறுவது"

என்று மணிமேகலை வடித்துத் தருகிறது.

துன்பத்துக்குக்கேதுவாகிய பற்றை, அவாவை, அறுத்தொழித்தால் பிறப்பறும், பேரின்பம் தலைப்படும். "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்", "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்று எல்லாரும் கூறுகின்றனர். பற்று எங்ஙனம் துன்பத்துக்குக் காரணமாம் என்ற சிந்தனை எழுகிறது.

கௌதமபுத்தருடைய சிந்தனை விரிவாகச் செல்லுகிறது. நாடு முழுதும் அலைந்தார். நல்லோர் பலரைக்கண்டு அளவளாவினுர். தாமும் நன்ருகச் சிந்திக்கலானுர். அடர்ந்த காடுகளிலும் ஆற்றங்கரைகளிலும் உயர்ந்த குன்றுகளையும் ஓங்கிய மரத்தடிகளிலும் தங்கிக் கௌதமர் சிந்திக்கலானுர். உண்டி சுருங்கினுர்; உறக்கம் வெறுத்தார்; உடம்பு வாடினுர்; சுருங்கச் சொன்னுல் சிந்தனை வடிவமானுர் சித்தார்த்தார் என்பது பொருந்தும். சிந்தனை முடிவில் பற்றுக்கு முன் பின்னுமாகிய பேதைமை, முதலாக வினைப்பயன் ஈருகப் பன்னிரண்டு பொருள்கள் காரண காரிய முறையில் புலனுகின்றன. இவற்றை,

> "பேதைமை செய்கை உணர்வே அருவுரு
> வாயில் ஊறே நுகர்வே வேட்கை
> பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
> இற்றென வகுத்த இயல்பு ஈராறும்
> பிறந்தோர் அறியின் பெரும் பேற்றிகுவர்"

என்று மணிமேகலை கூறுகிறது.

இவ்வாறு துன்பம் உண்டாதற்குரிய காரணங்களைக் கண்ட புத்தர்பெருமான், இவற்றைப் போக்குதற்குரிய வழிகளைச் சிந்திக்கலானுர். பேதைமை முதலாக ஒன்றிற்கொன்று காரணமாய் நிற்கும் குற்றம் நீங்குமாயின் துன்பம் நீங்கும் என்ற முடிவுக்கு வருகின்ருர்.

> "பேதைமை மீளச் செய்கை மீளும்
> செய்கை மீள உணர்ச்சி மீளும்
> உணர்ச்சி மீள அருவுரு மீளும்
> அருவுரு மீள வாயில் மீளும்
> வாயில் மீள ஊறு மீளும்
> ஊறு மீள நுகர்ச்சி மீளும்
> நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
> வேட்கை மீளப் பற்று மீளும்
> பற்று மீளக் கருமத் தொகுதி
> மீளும் கருமத் தொகுதி மீளத்
> தோற்றம் மீளும் தோற்றம் மீளப்
> பிறப்பு மீளும் பிறப்புப் பிணி மூப்புச்
> சாக்காடு அவலம் அரற்றுக் கவலை
> கையாறு என்றிக் கடையில் துன்பம்
> எல்லாம் மீளும்"

என்று மணிமேகலையும் இவற்றை விளக்கிக் கூறுகிறது. பேதைமை மீளுமாயின் செய்கையொழியும், அது நீங்க உணர்ச்சியும் பின் அருவுரு முதலியனவும் நீங்கும்என்பது ஒக்கும் பேதைமை முதலியன எவ்வாறு ஒழியும் என்ற சிந்தனை எழுகிறது. இச்சிந்தனை,

> "நற்காட்சி நல்லொழுக்கம் நல்வாய்மை நல்வாழ்க்கை
> நற்செய்கை யோடைந்தும் நாடு,
> நன்முயற்சி நன்காம் கடைப்பிடி நல்லோர் தம்பால்
> செல்கையுடன் நட்டனைத்தும் தேறு"

என்ற எட்டு வழிகளைக் காட்டுகிறது.

இவ்வழிகளைப் பின்பற்றுவோரைத் தாக்கி இருள்செய்வன காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றும் என்று உணர்ந்து இவற்றைப் போக்குதற்கு ஐவகைப் பாவனைகளைக் கௌதமர் கண்டார். அவை மைத்திரி, கருணை, முத்தை, அசுபம், உபேக்ஷை என ஐவகைப்படும். மைத்திரி பாவனை எல்லாவுயிரிடத்தும், அன்பும் பரிவும் கொண்டு அவை துன்பமும் நோயுமின்றி இன்ப

முடையவாகுக என்று நினைந்து ஒழுகுவது. கருணை பாவனை என்பது பிறவுயிர்கள்படும் துன்பம் கண்டு மனமுருகி அதனை நீக்கற்கு விரையும் பண்பும் செயலுமாகும். பிறர் பெற்றிருக்கும் செல்வ வாழ்வு கண்டு மனம் மகிழ்ந்து அவர் எப்போதும் இன்பமே பெற்று நிலவுக என்று எண்ணுவது முதிதா பாவனை. உடலழகு கண்டு இது அநித்தம், அநான்மா அசுசி எனக் கருதி பற்றுக் கொள்ளாத மனப்பான்மையுடையராவது அசுபபாவனை. இதனால் காமம் என்னும் குற்றம் தோன்றாது கெடுகிறது. அறவுரை கேட்டல் சிந்தித்தல், தெளிதல் தெளிந்தவாறு ஒழுகுதல் என்ற நான்கும் உபேக்ஷா பாவனை, எனப்படும். இதனால் மயக்கம் என்னும் குற்றம் நீங்கும்.

இவ்வாறு காமவெகுளி மயக்கங்களைப் பாவனைகளால் போக்கி மனம் தூயனாய்த் தூய சிந்தனை கொள்வது முதலாம் தியானம். சிந்தனை யாதும் இன்றிச் சாந்தி நிலையில் இன்புற்றிருப்பது இரண்டாம் தியானம். சாந்தி நிலையில் உயர்ந்து புத்தபரமேட்டிகள் விரும்பும் பொறுமையும் அறிவும் கொண்டு தனக்குள்ளே இன்பம் அனுபவிப்பது மூன்றாம் தியானம். சுகமோ துக்கமோ இன்றிச் சமநிலையில் அறிவை நிறுத்தும் தூயநிலை நான்காம் தியானம். இந்தத் தியானங்களில் பக்குவப்பட்டவர் சமாதியாகிய யோக சித்தியைப் பெறுவர். சிந்தனைச் செல்வராகிய புத்தர் பெருமான் இந்த நால்வகைத் தியானத் தால்தான் முற் பிறப்பியல்பும், பிறந்த பிறப்பின் பெற்றியும் வேறு எல்லாவற்றையும் முற்றவுணர்ந்தார்.

இச்சிந்தனைகள் முடிவிலே யோகக் காட்சியும் யோகக் கேள்வியும் பரசித்த ஞானமும் பழம் பிறப்புணர்வும் காம முதலாகிய குற்றங்களின் நீக்கமும் பல்வேறு இருத்திகளும் நல்கும் என்று பௌத்த தருமம் கூறுகிறது.

[திருச்சி வானொலியில் இதன் சுருக்கம் பேசப்பட்டது]

With best wishes:

Grams: NARENMETAL
Phones: Off.: 37398
Factory: 31870

NARENDRA METAL INDUSTRIES
METALWARE MANUFACTURERS

Office & Show Room
132, MINT STREET,
MADRAS-1

Factory
14, KANNIAH NAIDU ST.,
Kondithope
MADRAS-1

# பி. கோதண்டராமன்

—: அப்துல் வஹ்ஹாப் :—

சென்னை மகாஜன சபை மண்டபத்தில் 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் இருபதாம் நாள் முதுபெரும் எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில், பி. கோதண்டராமன் அவர்களின் அறுபதாம் ஆண்டுவிழாக் கொண்டாடப்பெற்றது. திருவாளர்கள் சாண்டில்யன், அ. மு. பரமசிவானந்தம், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, சு. வேம்பு, டி. எஸ். ராகவன், க. சாமிநாதன், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, அப்துல் வஹ்ஹாப், த. நா. குமாரசாமி, காலஞ்சென்ற ஆக்கூர் அனந்தாச்சாரி ஆகியோர் பி. கோதண்டராமன் அவர்களின் இலக்கியத் தொண்டையும், தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு அவர் ஆற்றிய நற்பணிகளையும் விளக்கிப் பேசினர்.

தமிழ் எழுத்தாளர்கள் சார்பில், 'எளிய எழுத்தாளர்கள் தம் அன்பையெல்லாம் கொட்டியளித்த அன்பு முடிப்பாக இதைக் கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டு, பி. கோதண்டராமன் அவர்களுக்கு ஒரு சிறு பணமுடிப்பை யளித்தார் சங்கத் தலைவர், காலஞ்சென்ற தேவன்.

பாராட்டுரைகளுக்குப் பதிலளிக்க எழுந்த பி. கோதண்டராமன் அவர்கள், "உங்கள் அன்பு என் உள்ளத்தைத் தொடுகிறது......" என்று துவங்கினர்; அவ்வளவுதான்; கண்களில் நீர் பனிக்க அப்படியே நின்றுவிட்டார். வாழ்க்கையின் கடுமையையும் குளுமையையும் எத்தனையோ துறைகளில் கண்டு அனுபவித்த அவரை எழுத்தாளர்களின் 'அடைக்கும் தாழிலா அன்பு' மெய் சிலிர்க்க வைத்துவிட்டது. அங்கிருந்த அனைவருடைய இதயபூர்வமான அன்பும் அவரை எப்படி மெய்மறக்க வைத்துவிட்டது என்பதற்கு அவருடைய, 'உருகிப் பாய்ந்த உள்ளமும், பெருகிப் பாய்ந்த கண்களும்' சான்று கூறின.

செல்வமும், அதிகாரமும் அவர் கையில் இருந்ததில்லை. ஆனால், இவ்விரண்டும் சாதிக்க முடியாததை, அவர் உள்ளத்தில் செழித்துப் பரந்திருந்த அன்பும் அறமும் சாதித்துக் கொள்ளும். அன்பெனப்பட்டதே இலக்கிய வாழ்க்கை என வாழ்ந்து காட்டும் பெருந்தகை பி. கோ. என்பதை அவர் எழுத்தே சொல்லும்.

செங்கை மாவட்டத்தில் பாலாற்றங்கரையில் தவழ்ந்து வளர்ந்த பி. கோதண்டராமன் பால் போன்ற உள்ளம் படைத்தவர்; வயதில் எழுபத்திரண்டு ஆண்டு முதியவர்; ஆர்வத்தில் என்றும் இளைஞர்!

செங்கை உயர்நிலைப் பள்ளியிலும், சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலும் பயின்று, பின் 1918-ம் ஆண்டில் சட்டக் கல்லூரி மாணவராக இருந்தபோதே பொதுவாழ்க்கையில் புகுந்தவர் பி. கோ.

திரு. வி. க., பி. பி. வாடியா, மிருணுளினி சட்டோபாத்தியாயா ஆகியோர் தலைமையில் 1918-ம் ஆண்டு நடந்த சென்னைத் தொழிலாளர் சங்க இயக்கத்தின் வேலைநிறுத்தத்தின் போது அதில் பங்கு கொண்டார். 1920-ம் ஆண்டு எம்.ஏ., பி.எல். பட்டங்களோடு கல்லூரிச் சுவர்களுக்கு வெளியே அவர் வந்ததும், கொழுத்த ஊதியம் தரும் உத்தியோகங்களையோ எளிதில் செல்வம் திரட்டவல்ல தொழில்துறைகளையோ அவர் நாடவில்லை. மாருக, ராஜாஜி தலைமையில் தமிழ் நாட்டில் நடந்த முதல் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், பெரியார் ஈ. வெ. ராமசாமி, க. சந்தானம், எஸ். ராமனுதன், என். எஸ். வரதாச்சாரி ஆகியோருடன் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து காந்திஜியின் கொள்கைகளுக்கு ஆக்கம் தேடினர். ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவாகப் படிப்பைத் துறந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக ராஜாஜி நிறுவிய 'ஸ்வாதீன வித்தியாலயத்'தில் ஆசிரியராகப் பணியாற்றினர். காந்திஜி தென்னகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது டாக்டர் ராஜனும் பி.கோ.வும் அவருடன் தென்னுடு முழுதும் சுற்றினர்.

குடந்தையில் 1921-ம் ஆண்டு நடந்த மாவட்டக் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திருச்சிக்குத் திரும்பிக் கொண்டிருந்த பி. கோ.வை ரயிலிலேயே கைது செய்து திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பிவைத்தனர் போலீஸார். ஓராண்டுக் கடும் தண்டனை விதிக்கப்பெற்று, திருச்சி, பெல்லாரி, கடலூர் ஆகிய சிறைச்சாலைகளில் வாசம் செய்தார். இவருடன் சிறைச்சாலையில் தோழர்களாக இருந்தவர்கள் வ.வெ.சு. ஐயர், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, காளேஸ்வர்ராவ் ஆகியோர் ஆவர். 1923-ம் ஆண்டு 'சுதேசி' என்ற வார இதழைத் துவங்கி ஓராண்டு நடத்தினர்; இதன் பிறகு வழக்குரைஞராகவும் சிறிது காலம் தொழில் செய்யலானர்.

அரசியல் உலகின் பரபரப்பும், 'வழக்குரை' வாழ்க்கையின் பளபளப்பும் உள்ளத்துக்கு அமைதியைத் தேடித் தரவில்லை. அரசியலும் வழக்குரைத்தலும் இலக்கியப் பணிக்கு ஆக்கம்

# பெருகி வரும் தேவைகளைச் சமாளிக்க உற்பத்தி தழைத்தோங்க வேண்டும்

## Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்கள்

## விவசாயத் துறையில் உற்பத்தி தழைத்தோங்க பெரும் ஊக்கம் அளிக்கின்றன!

கிர்லோஸ்கர்-ஆசியா டைரக்ட்-ஆன்-லைன் ஸ்டார்டர்கள் 10 எச். பி. வரையிலும், ஸ்டார்/டெல்டா ஸ்டார்டர்கள் 60 எச். பி. வரையிலும், ஸ்லிப்ரிங் மோட்டார் ஸ்டார்டர்கள் 70 எச். பி. வரையிலும் உடனடியாகக் கிடைக்கும்.

**கிர்லோஸ்கர் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்,**
த. பெ. எண் 1017, பெங்களூர்-3, இந்தியா
பூரண விநியோகஸ்தர்கள்: **பாரி & கம்பெனி லிமிடெட்**
த. பெ. எண் 12, மதராஸ்-1. த. பெ. எண் 208, கல்கத்தா-1
த. பெ. எண் 506, பம்பாய்-1 BR. த. பெ. எண் 172, புது டில்லி-1.



தருவனவல்ல என்று தோன்றிற்று போலும். 1928-ம் ஆண்டு வெளியுலகத் தொடர்புகள் அனைத்தையும் துறந்து, புதுவை அரவிந்த ஆசிர மத்தில் தம் புதுவாழ்க்கையைத் துவங்கினார்.

இருபதாண்டுக் காலம் அங்கிருந்தபோது தான் 'தமிழர் இசைக்கருவிகள்', 'விவசாயப் பிரச்னைகள்', 'புரட்சி செய்த பேனா வீரர்கள்' முதலிய அரிய ஆராய்ச்சி நூல்களை இயற்றினார்.

இலக்கியப்பணி மீண்டும் அவரை வெளியுல குக்கு ஈர்த்தது; ஆசிரமத்திலிருந்து விலகி 1948 முதல் 1956 வரை 'சுதேசமித்திரன்' புத்தக விமர்சனப் பகுதியில் துணையாசிரியராகப் பணி யாற்றினார். இக்காலத்தில் அவருடைய ''விஞ் ஞானமும், சமூகமும்', 'மண்வளம்' ஆகிய நூல் களுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் பரிசளித் தனர்.

அறுபது வயது எய்தியதும், 'மித்திரனி' லிருந்து ஓய்வுபெற்று மீண்டும் ஆசிரமத்தை யடைந்தார். 'மித்திரன்' நாளிதழிலிருந்து ஓய்வு பெற்றாரே தவிர, எழுத்துப் பணியிலிருந்து அவர் விலகிக்கொள்ளவே யில்லை; இந்தப் பன்னி ரண்டு ஆண்டுக் காலத்தில் எட்டு அருமையான நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்திருக் கிறார்; அன்றியும், வேறு சில நூல்களையும் மொழிபெயர்த்திருக்கிறார். கட்டுரைகளாகவும், புத்தக விமர்சனங்களாகவும் இன்னும் எழுதிக் கொண்டேயிருக்கிறார்.

ஃபிரெஞ்சு மொழியிலே தரமான புலமை யுடைய பி. கோ., ஃபிரெஞ்சு எழுத்தாளர் மூவ ரின் இலக்கியப் படைப்புகளை அழகு தமிழில் ஆக்கித்தந்திருக்கிறார். பண்டைய இலக்கியத் தில் வேர்விட்டு புதுமை இலக்கியத்தின் புது மலராகப் பரிமளிக்கும் அவருடைய இலக்கியப் பணி பழமையின் கனிவையும் புதுமையின் வேகத்தையும் தன்னுள்ளே கொண்டு நிற்கிறது.

சிறந்த சிந்தனையாளராகவும், எழுத்துத் துறையில் வல்லுனராகவும், திறனாய்வாளராக வும் புகழ்பெற்று விளங்கும் பி. கோதண்ட ராமன் அவர்கட்கு இந்த ஆண்டுக் கேடயம் வழங்குவதில் தமிழ் எழுத்தாளர் சங்கம் பெரு மைப்படுகிறது.

இந்தச் சங்கத்தின் துவக்க காலத்தில், அதன் வளர்ச்சிக்கு ஏற்பட்ட எத்தனையோ இடர்ப்பாடுகளைக் காலஞ்சென்ற கல்கியவர் களின் துணையோடு எதிர்த்து வென்று சங்கத் தின் இன்றைய வலிவுக்கும் பொலிவுக்கும் அடி கோலியவர் பி. கோ. எந்த நிறுவனத்துக்கும் அதன் ஆரம்ப ஐந்தாண்டு வாழ்வுதான் சோத னைக் காலமாயிருக்கும்; அந்தக் காலகட்டத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளராக அயராது உழைத்துச் சங்கத்தைக் காத்தவர் பி. கோ. இரண்டாண்டுகள் அக்காலத்தில் அவருடன் துணைச்செயலாளராகப் பணியாற்றும்போது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த அடிப்படையில் தமிழ் எழுத் தாளர்களின் சிறப்புமிகு பரிசைப்பெற இருக்கும் அந்த நல்ல மனிதரைப் பற்றி எழுதும் சந்தர்ப் பம் கிடைத்ததைப் பெரும் பேறாகவே கருது கிறேன். ★

---

# திரு. பி. கோதண்டராமன் எழுதிய நூல்கள்

1. விவசாயப் பிரச்னைகள் (1945)
2. தமிழர் இசைக் கருவிகள் (1945)
3. புரட்சி செய்த பேனாவீரர்கள் (1946)
4. விஞ்ஞானமும் சமூகமும் (1947) (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு)
5. மண்வளம் (1951) (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு)
6. இந்திய ஓவியக் கலை வரலாறு (1956)
7. சிறுகதை-ஒரு கலை (1958)
8. பாரதி யுகம் (1961)
9. பங்கிம் சந்திரர் வரலாறு (1961)
10. பங்கிம் சந்திரர்-இலக்கிய மேதை(1961)
11. இலக்கியமும் விமர்சனமும் (1962)
12. பராசக்தி (ஸ்ரீ அன்னை வாழ்க்கைப் பணி) (1962)
13. ஸ்ரீ அரவிந்தர் வாழ்க்கை வரலாறு (4-ம் பதிப்பு) 1964
14. எழுத்தாளர் தருமம் (1965)

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

15. அல்போன்ஸ் தோதே எழுதிய சிறுகதைகள் (பிரெஞ்சிலிருந்து) ''சோமபானம்'' (1955)
16. விக்டர் ஹ்யூகோ-'மரகதம்' (1948)
17. பிராஸ்பர் மேரிமே-'அழகுப் பேய்' (1960)
18. காஞ்சனமாலா-வங்க நாடோடிக் கதைகள் (1961)
19. மல்லிகை ,, ,, (1945)
20. ஜபயோகம் (எம். பி. பண்டித்) (1960)
21. யோகசாதனை (ஸ்ரீ அன்னை எழுதியது) (பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்த்தது) (2-ம் பதிப்பு 1951)
22. சிந்தனையும் மின்னொளியும் ஸ்ரீ அரவிந்தர், (2-ம் பதிப்பு, 1956)
23. கீதைப் பேருரை - அரவிந்தர் (1-ம் பகுதி 1959) (2-ம் பகுதி 1960)
24. அதிமானுடன் யார்?-அரவிந்தர்(1944)
25. முப்பெருந்தலைவர்-அரவிந்தர் (1942)
26. கலையும் நாடு அடையும் பயனும் ஸ்ரீ அரவிந்தர் (1943)
27. இந்திய மறுமலர்ச்சி (1944)
28. சங்கரர் பொன்மொழிகள் (1956)

# WHAT IS PUBLIC RELATIONS?

*"good performance, publicly appreciated because adequately communicated" through a class newspaper like THE HINDU*



Enlightened enterprise gets its case across to Members of Parliament and State Legislatures, Officials who shape and make policy in both sectors, top management and those in the second and third echelons and to leaders of public opinion through

**THE HINDU**

INDIA'S NATIONAL NEWSPAPER

*power and prestige through an influential readership.*

# தமிழ் நாவலின் வருங்காலம்

—பி. கோதண்டராமன்

நாவல் ஓர் இலக்கியம்; ஒரு கலை. அது மக்களின் இன்பத்திற்கும் பொழுதுபோக்குக்கும் உரியதொன்ருக இருக்கலாமாயினும், வெறுங் கற்பனைக் கதையாக மட்டுமே இருக்க முடியாது. அது வாழ்க்கையுடன் இன்றியமையாது தொடர்புடையதாக இருக்கவேண்டும். அது சென்ற இரண்டரை நூற்ருண்டுகளாக மானிட வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தழுவியும், குடும்ப நாவல், சமூக நாவல், காதல் நாவல், துப்பறியும் நாவல், உளவியல் நாவல், அரசியல் நாவல், விஞ்ஞான நாவல், தத்துவ ஞான நாவல் சமூகக் கருத்துக்கள், பிரச்சினைகள் முதலியவற்றை விளக்கும் நாவல் ஆகியவை போன்ற பல வகைகளாக விரிந்தும் வளமுற்றும் வருகின்றது. அது மக்களின் சரியான நடத்தையை வாசகர் மனத்தில் பதியவைக்கின்றது. சமூகத்தில் காணும் தீமைகளை வெளிப்படுத்தி உரிய சீர்திருத்தங்களைச் சூசகமாக வலியுறுத்துகிறது. அரசியல் துறைகளில் காணப்படும் குற்றங்களை நையாண்டி செய்கிறது. நல்வாழ்க்கைக்கான தத்துவங்களைக் கதைப்போக்கில் மறைவாகப் போதிக்கிறது. நிகழ்ச்சிகளைக் கூறும்போதே கதைமாந்தரின் குணதிசயங்களை வெளிப்படுத்துகிறது புறநிகழ்ச்சிகளையன்றி அகநிகழ்ச்சிகளையும் ஆழ்ந்து ஆராய்ந்து கூறுகின்றது. சமுதாயத்தின் உணர்ச்சிகளுடன் தனி மனிதனின் உணர்ச்சிகளையும், உள்ளத்து எழுச்சிகளையும் மனத்தின் ஆழத்தில் பொங்கி எழும் எண்ணங்கள், உணர்வுகள், உள்மனத்தில் அமிழ்ந்துள்ள உணர்வு அம்சங்கள் ஆகிய யாவற்றையும் அவை அவ்வப்போது தோன்றியவாறே அது வெளிப்படுத்துகிறது. இத்தகைய நாவலை எழுதும் நாவலாசிரியன் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் எல்லா அம்சங்களையும் கூர்ந்து நோக்கியும், தன் உள்ளத்தில் அனுபவித்தும், அழகிய மொழியில் பல சுவைகளுடன் அமைத்தும் படைத்துத் தரவேண்டியவனுகிருன். இங்ஙனம் அவன் படைத்துத்தரும் நாவல் குடிமக்களின் பெருங்காப்பியமாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மேலைநாடுகளில் தோன்றி வளர்ந்து மேலே குறித்த இன்றைய நிலையை அடைந்துள்ள நாவலை நம்மிடைய தோன்றி வளர்ந்துவரும் தமிழ் நாவல் எவ்வளவு தூரம் எட்டிப் பிடித்திருக்கிறது என்பதை ஒருசிறிது ஆராய்வோம்.

தமிழ் நாவலுக்கு முதன் முதலாக வித்திட்டவர் வேதநாயகம் பிள்ளை ஆவர். 1876-ல் அவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலுக்குரிய இலக்கணங்களின்படி அமைந்ததொரு நாவலன்று. தமிழில் வசன நூல்கள் இல்லாத குறையைப் போக்கவே அவர் அதை எழுதினர். பாத்திரங்களின் மூலம் நீதிபோதனையை வெளிப்படையாகச் செய்தது ஓர் இழுக்காகும். 1893-ல் பி. ஆர். ராஜம் அய்யர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரமே' முதல் தமிழ் நாவலாகும். இலக்கியமதிப்புடை அந்நாவலில் அமைப்புமுறை சிறந்து விளங்கியது. மாதவய்யாவின் 'பத்மாவதி சரித்திரமும்' 'விஜய மார்த்தாண்டமும்.' அசல் தமிழ் நாவல்கள். நடேச சாஸ்திரியின் 'தீனதயாளு' (1900) 'திக்கற்ற குழந்தைகள்' (1902), 'மதிகெட்ட' மனைவி (1903) முதலியன ஆங்கில நாவலைத் தழுவி எழுதப்பட்டன. இவர்களுக்குப்பின் கல்கியின் காலம்வரையில் ஆரணி குப்புசாமிமுதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார், கே. ஆர். ரங்கராஜு, கோதைநாயகி அம்மாள் ஆகியோர் தமிழ் நாவல் உலகில் ஆட்சி புரிந்தனர். ஆரணி குப்புசாமி முதலியார் ரைனல்ட்ஸின் நாவல்களையும் மர்மக் கதைகளையும் மொழிபெயர்த்தார். அவற்றின் வாசகர்கள் மேலும் நாவல்கள் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் பெற்றனர். வடுவூர் துரைசாமி அய்யங்கார் ஆங்கில நாவல்களைத் தழுவித் தமிழ்நாட்டு நிலைக்களத்தைப் புகுத்தி 'மேனகா, 'திகம்பர சாமியார்' போன்ற தமிழ்க் கதைகளை எழுதினர். கே.ஆர். ரங்கராஜு 'ராஜாம்பாள்', 'சந்திரகாந்தா' போன்ற துப்பறியும் கதைகளை எழுதினர். கோதைநாயகி' அம்மாள் வடுவூராரை அடியொற்றி 'வைதேகி' போன்ற கதைகள் எழுதித் தமிழ் மக்களின் கதையார்வத்தைத் தணித்துவந்தார். பின் சீர்திருத்த, பிரசாரக் கதைகளையும் நீதிக்கதைகளையும் எழுதிவந்ததால், மக்களின் ஆர்வம் மெல்லமெல்லக் குறைந்துவந்தது.

கல்கி (1899—1954) தம் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்து, தம் எழுத்துக்களால் பெயரும் புகழும் பெற்று, கதையுலகில் ஒரு புரட்சியையே செய்துவிட்டார். அவர், தமிழ் நாவலை முதன் முதலாக நமக்களித்த ராஜம் அய்யர், 'பத்மாவதி சரித்திரம்', 'விஜயமார்த்தாண்டம்' போன்ற ஜனரஞ்சிதமான நாவல்களை அளித்த மாதவய்யா, மொழிபெயர்ப்பு நாவல்களையும் தழுவல் நாவல்களையும் அளித்தனராயினும் மக்களிடையே கதைபடிக்கும் ஆர்

வத்தைப் பன்மடங்கு பெருக்கியும் படிப்போரின் தொகையைப் பன்மடங்கு அதிகரித்தும் வந்த ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரை சாமி அய்யங்கார், ரங்கராஜு ஆகியோரின் வழி வந்தவர்தாம். அவர்களின் உத்திகளையும் படைப் பின் ரகசியங்களையும் நன்கு கற்றிருந்த அவர், மேலைநாட்டுத் துப்பறியும் நாவல்கள், பரபரப்பு ஊட்டும் நாவல்கள் ஆகியவற்றை இயற்றிய கலைஞர்களின் வழிமுறைகளையும் கற்ருர். தம் காலத்திய மக்களிடையே பொங்கி வழிந்த மொழியார்வமும், பண்டை நாகரிகம், பண்பாடு கலைகளின் சிறப்பு ஆகியவற்றின்பால் மேன் மேலும் ஏற்பட்டுவந்த பற்றுதலும், அப்பற்று தலுக்கு ஓர் உருவும் பற்றுக்கோடும் அளிப்பதன் பொருட்டு வாசிக்கும் பழக்கம் பெருகி வந்த மக் களிடையே வழங்கிய பத்திரிகைகளும் அவருக்கு ஆதரவாயிருந்தன. அப்பத்திரிகைகளின் மூலம் மக்கள் பேசிய சாமானிய தமிழில், நகைச்சுவை ததும்பும் இனிய எளிய நடையில் தம் சரித்திர நாவல்களைத் தொடர்கதைகளாக அளித்தார். தம் நாவல்களைப் பத்திரிகைகளின் மூலம் தொடர் கதைகளாக அளித்து வாசகர்களி டையே பேரார்வத்தையும் பேரவாவையும் உண்டுபண்ணியதில்தான் அவர் தனிச்சிறப்பும் பெருமையும் உள்ளன. அவர்1924 ஆம் ஆண்டி லிருந்து உயிர் துறக்கும் வரையில் சற்றேறக் குறைய முப்பதாண்டுகள் பத்திரிகையுலகில் தம் படைப்பு வேலையைச் செய்துவந்தார். 1928முதல் 1941 வரையில் 'ஆனந்த விகடனி'ல் பணியாற்றி வந்தபோது, 'கள்வனின் காதலி', 'தியாக பூமி' ஆகிய இரண்டு நாவல்களையும் வெளியிட்டார். 1941ஆம் ஆண்டு முதல் இறு திக் காலம் வரையில் தாமே நடத்திவந்த 'கல்கி' பத்திரிகையில் காப்பிய ரீதியில் அமைந்த 'சிவகாமி சபதம்', 'பார்த்திபன் கனவு', 'பொன் னியின் செல்வன்', 'அலையோசை' முதலிய புகழ் பெற்ற நாவல்களை எழுதி வெளியிட்டார்.

கல்கியின் காலத்தை ஒரு வளமான காலம் என்றே சொல்லவேண்டும். அக்காலத்தில் ஒரு பக்கம் வங்காளி, மராத்தி போன்ற பிற மொழி களிலிருந்து பங்கிம் சந்திரர், சரத் சந்திரர், டாகுர், காண்டேகர் ஆகியோரின் புகழ் பெற்ற நாவல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டுவந்தன; மற்ெருரு பக்கம் தமிழாசிரியர்களின் சுய சிருஷ்டிகளான குடும்ப நாவல்கள், சமூக நாவல் கள், கிராமிய நாவல்கள், உளவியல் நாவல்கள் ஆகியவையும், மேலைநாட்டு நாவல் முறையில் புதுப்புது விதமான நாவல் முயற்சிகளும், காதல் நாவல்கள், லட்சிய நாவல்கள், அரசியல் நாவல் கள் ஆகியவையும் வெளிவந்தன. வங்காளி மொழியிலிருந்தே பங்கிம் சந்திரர், டாகுர்


## கல்யாண காலங்களுக்கு...

★ பட்டுச் சேலைகள்

★ பாவாடைத் துண்டுகள்

★ சோளி பீஸ் ரகங்கள்

தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு நற்கியாதி பெற்ற ஸ்தாபனம்

↓

# நல்லி சின்னசாமி செட்டி

(பனகல் பார்க்)

## தியாகராயநகர், சென்னை-17.

டெலிபோன் நெ. 444115, 444111

போன்றவர்களின் அருமையான நாவல்கள் சில வற்றைத் தமிழில் மொழிபெயர்த்து அளித்த பெருமை த. நா. குமாரசாமி, த. நா. சேனாபதி ஆகிய இரு சகோதரர்களேயே சாரும். காண்டேகர் போன்றவர்களின் மராத்திய நாவல்களை மூலமொழியிலிருந்தே மொழிபெயர்த்துத் தந்த பெருமை கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களுக்கே உண்டு. இம்மொழிகளிலுள்ள சில நாவல்களை அ. கி. ஜயராமன், ரா. ஷண்முகசுந்தரம் போன்றவர்கள் இந்தியிலிருந்து தமிழ்ப் படுத்தித் தந்துள்ளனர். ஹேமா ஆனந்ததீர்த்தன் கன்னட மொழியிலிருந்து சில நாவல்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அசல் தமிழ் நாவல்களை எழுதியுள்ளவர்களில் எஸ். வி. வி., லட்சுமி (திருபுர சுந்தரி), பி. எம். கண்ணன், ரா. ஷண்முகசுந்தரம், நாரண துரைக்கண்ணன், சரோஜா ராமமூர்த்தி, குகப்பிரியை, அனுத்தமா (ராஜேஸ்வரி பத்மநாபன்), சாவித்திரி அம்மாள் முதலியோரைக் குறிப்பிடலாம். மேலைநாட்டு முறையில் புது முயற்சி செய்தவர்களில் 'மிஸ்டர் வேதாந்தம்' என்னும் நாவலை எழுதிய தேவன், 'பொய்த் தேவு', 'ஒரு நாள்' என்னும் நாவல்களை எழுதிய க. நா. சுப்பிரமணியன், 'விதி வழியே', 'ஆசைவலை' போன்ற நாவல்களை எழுதிய சுகி சுப்பிரமணியம், தமிழ் நாட்டுக்கு வெளியேயுள்ள இ ட ங் க ளை நிலைக்களமாக வைத்து எழுதிய மாயாவி (ராமன்) முதலியோரைக் குறிப்பிடலாம். பி. எம். ராஜகோபாலன் 'சர்க்கா' என்ற கிராமிய நாவலை மிக நன்றாக எழுதியிருக்கிறார். நாரண துரைக்கண்ணனின் 'உயிரோவியம்' குறிப்பிடத்தக்கது. காதல் நாவல்களை எழுதியவர்களுள் ஆர்வி (வெங்கட ராமன்), கி. ரா. கோபாலன், வி. எஸ். மணி, எல்லார்வி, குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை, பகீரதன் முதலியோர் பிரதானமானவர்கள். அரசியல் நாவல்களை எழுதியவர்களுள் 'பார்வதி' பி. ஏ. என்ற நாவலை எழுதிய திரு. அண்ணாதுரையையும், 'பஞ்சும் பசியும்' என்ற நாவலை எழுதிய திரு. சிதம்பர ரகுநாதனையும் குறிப்பிடலாம். அரசியல் நாவல் எனக் கூறத்தக்க இவை ஓரளவு பிரசாரஞ் செய்கின்றன வாயினும், வரவேற்பதற்குரிய புது முயற்சிகள். வ. ரா. எழுதியுள்ள 'சுந்தரி', 'கோதைத் தீவு' ஆகியவை லட்சிய நாவல்கள் கா. சி. வேங்கட ரமணியின் 'தேசபக்தன் கந்தன்', சங்கரராம் எழுதிய 'மண்ணாசை', மு. வரதராசனின் 'மலர் விழி' தமிழ் நாவலுக்குப் பெருமையளிக்கும் நல்ல படைப்புக்கள். கர்நாடக சங்கீதத்தில் ஊறிப்போன ஓர் இசைக்கலைஞனின் வாழ்க்கையை விவரிக்கும் 'இதய நாதம்' என்னும் நாவலைச் சிதம்பரசுப்பிரமணியன் எழுதியிருக்கிறார். கல்கியின் காலத்தில் எழுதப்பட்ட மொழிபெயர்ப்பு நாவல்களும் சரி, சுயபடைப்புக்களும் சரி, தமிழ் நாவலுக்கு ஊட்டமும் ஆற்றலும் அளித்துள்ளன.

கல்கிக்குப் பிறகும் தமிழ் நாவல் இடைவிடாமல் வளர்ச்சியடைந்துவருவது கண்கூடு. இவ்வளர்ச்சியில் பங்குகொண்டுவருகிறவர் பலர். அவர்கள் எல்லோரையும் பற்றிக் கூறுவதற்கு இங்கே இடமில்லை. முன்னணியில் நிற்கும் ஒரு சிலரைப் பற்றி மட்டுமே குறிப்பிட முடியும். கல்கிக்குப் பின்னரும் அவர் எழுதிச் சிறப்படைந்த சரித்திர நாவல் துறையிலேயே பிரதான ஆசிரியர்கள் இன்னும் கருத்துச் செலுத்தி வருகின்றனர். தொடர்கதைகளை வெளியிட்டு மக்களின் கருத்தையும் கவர்ச்சியையும் ஈர்த்து வரும் 'கல்கி', 'ஆனந்தவிகடன்', 'சுதேசமித்திரன்' 'தினமணிக் கதிர்' போன்ற பத்திரிகைகள் பல, மாதங்கள் ஓடும் இவர்களின் தொடர்கதைகளை வெளியிட்டு இவர்களுக்குப் பெயரும் புகழும் தேடித்தருகின்றன. இந்நாவல்கள் பல தொகுதிகளாக வெளியிடப்பட்டுப் பெருவிலையில் விற்கப் பட்டுவருகின்றன. இவர்களின் நாவல்கள் வெறுந் தொடர் கதைகளேயன்றி இலக்கிய முறையில் நன்கமைந்தவையல்ல என ஒருசில விமர்சகர்கள் கூறிவருகின்றனர். வாரந்தோறும் மக்களின் கவனத்தைக் கவரும் பொருட்டு நாவலாசிரியர் 'சஸ்பென்ஸ்' என்னும் தந்திரத்தைக் கையாண்டுவருகின்றனர் எனக் கூறப்படுகிறது. இருக்கலாம். ஆனால், புத்தகவடிவில் வரும்போது இக்குறை நீக்கப்படலாம்; அமைப்பில் உரிய திருத்தங்கள் செய்யப்படலாம். பத்திரிகைகளில் தொடர்கதையாக வெளிவருவதாலேயே இந் நாவல்கள் யாவற்றிலும் இக்குறை காணப்படுகிறது என்று சொல்லுவதற்கில்லை. 'சஸ்பென்ஸ்' தந்திரத்தைப் பிரயோகிக்காமலேயே சில ஆசிரியர்கள் தம் தொடர்கதைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டுவருவது கண்கூடு. முக்கியமான குறைபாடு இதுவன்று. பிரபல எழுத்தாளர்கள் சரித்திர நாவலில் மட்டுமே பெருங்கருத்துச் செலுத்திவருவதேன்? கல்கி சரித்திர நாவல் எழுதிப் புகழடைந்துவிட்டதால், தாமும் அதன் மூலம் புகழடைந்துவிடலாம் என்ற எண்ணமா?

இன்று நாவல் எழுதிப் புகழடைந்தவர்களுள் 'வேங்கையின் மைந்தன்' (சரித்திரம்) எழுதிய அகிலன், 'குறிஞ்சிமலர்' (சமூகம்) எழுதிய நா. பார்த்தசாரதி, 'கன்னிமாடம்' 'யவனராணி', 'கடல் புறா' முதலிய நாவல்கள் எழுதியுள்ள சாண்டில்யன் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும், பலர் உள்ளனர். தற்சமயம் விரிவாகக் கூறுவதற்கில்லை. அகிலன் அவர்களுக்குக் கற்பனையும் நல்ல தமிழ் நடையும் அமோகமாக உள்ளன. நா. பார்த்தசாரதியவர்கள் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றவர். அவருடைய 'குறிஞ்சி மலரை' ரசித்த அன்பர் பலரை இக்கட்டுரையாசிரியர் அறிவார். சாண்டில்யன் வெகுகாலமாகச் சரித்திர நாவல்கள் எழுதிவருகிறார். கைதேர்ந்த எழுத்தாளர். இவர்களிடம் மக்களைக் கவரும் ஆற்றல் உளது. புத்திசாலிகளான தமிழ் வாசகர்கள் சரக்கில்லாதவர்களிடம் போகமாட்டார்கள். இவர்களின் எழுத்துக்களில் உயிரும், வலிமையும், சுவையும் உள்ளன. நா. பார்த்த

*With Compliments from*

# SUPASKREEN

INDUSTRIAL SCREEN PRINTERS
DISPLAY PRODUCERS &
ADVERTISING CONSULTANTS

FACTORY :
117, L. B. Road,
MADRAS-41
PHONE : 76414

OFFICE :
193, Mount Road,
MADRAS-2
PHONE : 81306

WITH THE BEST COMPLIMENTS OF

# Facit Asia Ltd

Manufacturers of
FACIT CALCULATORS & ADDING MACHINES
Perungudi (via) Thiruvanmiyur,
MADRAS-41.

Phone : 76056 — 3 lines

Gram : FACITASIA, Madras.

சாரதியிடம் அறநோக்கும் போதனையும் ஓரளவு மிகுந்து உள்ளன என்று சொல்லலாம். இவர்களின் நூல்களை இலக்கியத் தகுதியற்றவை எனக் கூறுவது அடாது.

சரித்திர நாவல்களுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்துவந்தன. தமிழ் நாட்டின் பண்டைப் பெருமை தமிழ் வாசகர்களுக்கு இன்ப மூட்டும் விஷயமாகும். இதைப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்கும் கருத்து வெகுகாலம் நீடித்திருக்கப்போவதில்லை. பத்திரிகைகளின் ஆதரவில்லாவிடில் எழுத்தாளர் வேறு விஷயங்களில் தம் கருத்தைச் செலுத்தியாக வேண்டும்.

ஏற்கெனவே தலைசிறந்த எழுத்தாளர் வேறு வகைகளில் கருத்துச் செலுத்தி வருகின்றனர். தி. ஜானகிராமன், தஞ்சைப் பிராந்திய நாவல்கள் சில மிக அருமையாக எழுதியிருக்கிறார். அவரது 'மலர் மஞ்சமும்' 'மோகமுள்ளும்' அபூர்வமான படைப்புக்கள். கிருத்திகாவின் 'வாஸவேச்வரமும்' 'சத்யமேவ'வும் நல்ல படைப்புக்கள். கிராம, நகர மக்களின் ஆசா பாசங்களையும் விருப்பு வெறுப்புக்களையும், கிராமங்களில் படையெடுத்து வரும் கம்யூனிஸ மனப்பான்மையையும் நன்குசித்திரித்திருக்கிறார். அவரது நடையில் கவிதையும் அழகும் நிரம்ப உள்ளன. புதிய இக்காலத்தில் உவமைகளுக்கு ராஜம் கிருஷ்ணனின் 'குறிஞ்சித் தேன்' மிக நல்ல படைப்பு 'அமுதமாகி வருக', வருங்கால நாவல். அதை அடியொற்றி மேலும் பல நாவல்கள் வெளிவந்து தமிழ் நாவலுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும்.

அரசியல் நாவல்கள் தமிழில் மிகக் குறைவு. பங்கிம் சந்திரர் எழுதியுள்ள ஆனந்த மடம் அப்பாஸ் எழுதிய 'இங்குலாப்', 'சரத் சந்திரரின்' 'பாரதி' இவைபோன்ற நூல்கள் தமிழில் வெளிவர வேண்டாமா? ஆகஸ்ட் புரட்சியைப் பற்றிய நாவல்களை நாம் படைக்க முடியாதா? வெட்கமில்லாமல் பிற நூல்களை மொழி பெயர்த்துக்கொண்டுதான் போக வேண்டுமா? எம். எஸ். கலியாணசுந்தரம் எழுதிய 'இருபது வருஷங்கள்' ஓர் அரசியல் நாவலாக விளங்கியிருக்கலாம். ஏனோ ஆசிரியர் அதை வெறும் வாழ்க்கை வரலாறாக ஆக்கிவிட்டார்! நம் நாட்டில் இன்று கலப்பு மணங்கள் நடந்துவருகின்றன. தமிழ் எழுத்தாளன் இக் கலப்பு மணங்களைக் கூர்ந்து நோக்கி அற்புதமான நாவல்கள் எழுதலாம். இந்த அணு யுகத்தில் நம் நகரங்களிலும் கிராமங்களிலும் புரட்சிமயமான மாறுதல்கள் நடந்துவருகின்றன. புதிய முறைகளில் நாவல் எழுதுவதற்குரிய விஷயங்கள் பல காண்கின்றன. தமிழ் எழுத்தாளன் இனி வீட்டில் இருந்துகொண்டே நாவல்கள் எழுதலாகாது. வெளியே சென்று முகாம் போட்டு ஆறு மாதங்களேனும் தங்கி, மக்களையும் ஊரையும் இயற்கையையும் கூர்ந்து கவனித்துத் தான் சேகரித்த விஷயங்களின் அடிப்படையில் எழுதவேண்டும். எழுத்தாளர் சங்கம் திட்டம் போட்டுத் தமிழ் நாவலை வளர்க்கவேண்டும். நல்ல கதைகளை வேண்டும் படாதிபதிகள் மேதையுள்ள எழுத்தாளர்களுக்கு உதவ முன்வரவேண்டும். இந்திய அரசாங்கம் வெளி ராச்சியங்களுக்குச் செல்ல விரும்பும் நாவலாசிரியருக்குப் பணவுதவி செய்ய வேண்டும்.

எழுத்தாளன் வெளியே சென்று வாழ்க்கையின் பல துறைகளையும் கண்டறிந்தும் அனுபவித்தும் எழுதினால்தான் அவன் எழுதும் நாவல் உயிர்ச்சக்தியுடையதாக இருக்கும். தமிழ் நாவலின் வருங்காலம் எழுத்தாளனின் கையில் உள்ளது. சரித்திர நாவல் போதும்; பிறவகை நாவல்களை எழுதுவோமாக. ★


எழுத்தாளர் நாட்டின் உணர்ச்சிமயமான

ஊதுகுழல்!

அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

★

கலைஞன் பதிப்பகம்

தியாகராயநகர், சென்னை-17

கிறுகிறுக்க வைக்கும் காலை நேர
வேலைக்கஷ்டத்தைச் சமாளியுங்கள்.





# சில நிமிடங்களில் பிரஸ்டிஜ் முறையில் சமையலை முடியுங்கள்.

பிரஸ்டிஜ், நேரம், பணம், எரிபொருள் செலவை ஐந்தில் ஒரு பங்காகக் குறைப்பதுடன் சமைத்த பண்டங்களின் போஷாக்குச் சக்தியையும் பாதுகாக்கிறது இருவருக்கோ, பத்துபேருக்கோ, நிமிடங்களில் சமையல் தயார்! எதிர்பாராத விருந்தினர் வருகை ஒரு பிரச்சினையே இல்லை. உங்கள் பாத்திரங்களையே கூட பிரஸ்டிஜில் உபயோகிக்கலாம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்ற அளவில் கிடைக்கிறது. பத்திரமானது பன்னிரண்டு வயதுச் சிறுமியும் கையாளக்கூடியது 400,000 குடும்பத்தலைவிகளின் அனுபவபூர்வமான தேர்வு.

விற்பனைக்குப் பிறகு பழுது பார்த்துத்தரும் சேவையை இந்தியா முழுவதும் அளிப்பது பிரஸ்டிஜ் ஒன்றே

PREETT ப்ரீத் பாத்திரங்களை உபயோகித்து உங்கள் சமையலறையை நவீனமயமாககுங்கள்

ஐந்து மாடல்களிலிருந்து உங்கள் பிரிஸ்டிஜைத் தேர்ந்தெடுங்கள்.




மாடல் 77
4.5 லிட்டர்

ஹை-டோம்
5-75 லிட்டர்

மாடல் 777
6.5 லிட்டர்

ஸூபர் ஹை-டோம்
7.5 லிட்டர்

ஸீனியர் 9.5 லிட்டர்

Prestige

பிரஸ்டிஜ் வாழ்நாள் முழுவதும் உழைக்கும் ஓர் பிரஷர் குக்கர்

தயாரிப்பாளர் ; டி டி. (பிரைவேட்) லிமிடெட், தூரவாணி நகர், பெங்களூர்-16 .ttp 4043r1

# ரா. தேசிகப் பிள்ளை

[ பகவதி ஜயராமன் ]

திரு. ரா. தேசிகப் பிள்ளை அவர்கள் ஃபிரஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் வகித்திருந்த புதுச்சேரியில் 1898ஆம் வருடம் மார்ச்சு மாதம் 23-ம் தேதி பிறந்தவர். புதுச்சேரியில் இருந்த ஒரு பெரிய யாதவக் குடும்பத்தின் வழிவந்தவர் அவர். அங்கு ஒரு காலத்தில் புகழ் பெற்ற ஊர்த்தலைவராக விளங்கிய கோவிந்த பிள்ளை அவர்களின் கொள்ளுப் பேரர். யாதவர்களின் வளமையிலும் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டு அச்சமூகத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தவர் கோவிந்த பிள்ளை. அவர்களிடையே ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்து அவர்கள் நேசத்துடனும் ஒற்றுமையாகவும் இருக்க அவர் வழி வகுத்தார். ஊர்த் தலைவராக விளங்கியதால் அவருக்குத் தண்டனையதிகாரமும் இருந்தது. அவர் சிலருக்கு வழங்கிய தண்டனைகள் பத்திரங்களில் பதிவு செய்யப்பட்டு அவை தேசிகப்பிள்ளை குடும்பத்தாரிடம் இன்றும் காணப்படுகின்றன. தேசிகப் பிள்ளையின் பாட்டனார் முத்துசாமிப் பிள்ளை சிறந்த வணிகர்; இவர் தகப்பனார் இராஜ கோபாலப் பிள்ளை புதுச்சேரி அரசாங்க நிதித் துறையில் தலைமை எழுத்தராக இருந்தவர். இத் தகைய ஒரு குடும்பத்தில் பிறந்தவர் தேசிகப் பிள்ளை.

மூன்று ஆண்டுகள் தாய்மொழியான தமிழைக் கற்ற பிறகு, தேசிகப் பிள்ளை ஃபிரஞ்சு பள்ளியில் சேர்ந்தார். தொடக்கத் தேர்வுகளில் வெற்றி பெற்றுப் புதுவை ஃபிரஞ்சு கல்லூரியில் சேர்ந்தார். அங்கு பி. ஏ. பட்டம் பெற்றுச் சட்டம் படிக்கத் தொடங்கினார். பி. எல். தேர்வில் தேறிச் சட்டக் கல்லூரியைவிட்டு அகன்றார். ஃபிரஞ்சு இந்திய அரசாங்கம் வழங்கிய உதவிச் சம்பளத்தைக் கொண்டு மேற்படிப்புக்கு ஃபிரான்ஸ் தேசத்துக்குப் போக இருந்தார். ஆனால், எதிர்பாராத சூழ்நிலைகளால் அவர் கடற் பயணம் தடைப்பட்டது. 1921ஆம் வருடம் அவர் மொழிபகர்ப்பாளர் (interpreter) தேர்வில் வெற்றி பெற்றுப் புதுவைப் பொதுத்துறை நீதிமன்றத்தில் (Civil Court) இளநிலை மொழி பகர்ப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தேசிகப் பிள்ளை அவர்களுக்கு இளமையிலேயே இலக்கியப் பற்று உண்டு. சட்டப் படிப்புப்படித்தவுடன் தமிழை அவர் சிறப்பாகக் கற்கத் தொடங்கினார். தமிழ் வைணவ இலக்கியம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதி அனுப்பினார். அக்கட்டுரைகள் பத்திரிகையாளர்களாலும் பிற அறிஞர்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. புதுச்சேரியில் உள்ள 'கல்விக் கழகம்' என்னும் அமைப்பு இவரால் நிறுவப்பட்டுத் தமிழ்மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும்பணி ஆற்றிவருகிறது. இக்கழகத்துக் கூட்டங்களில் தலைமை வகிக்காத அல்லது சொற்பொழிவு நிகழ்த்தாத தமிழ் அறிஞர்கள் தமிழகத்தில் இல்லை எனலாம். இது வெளியிட்ட வெள்ளி விழா மலர் மிகச் சீர்மையாக அமைந்த ஒரு தொகுப்பு நூலாகும்.

புதுச்சேரியில் ஃபிரஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் வகித்துவந்த காலத்தில், ஆனந்தரங்கம் பிள்ளை என்னும் செல்வர் டியூப்ளே துரைக்குத் தலைமை மந்திரியாக (திவானாக) இருந்தார். அவர் வெறுஞ் செல்வராகமட்டும் இல்லாமல் சிறந்த தமிழ் இரசிகராகவும் ஃபிரஞ்சு வித்தகராகவும் திகழ்ந்தார். பல புலவர்களை ஆதரித்து மக்கள் நலத்தை ஓம்பியதுமன்றி, அவர்தம் காலத்து நிகழ்ச்சிகளைச் சரளமாகத் தமிழில் நாட்குறிப்பு (Diary) எழுதிவந்தார். அந்நாட்குறிப்பிலிருந்து 18-ம் நூற்றாண்டைய அரசியல், சமுதாய, பொருளாதாரச் செய்திகள் பலவற்றை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. 18-ம் நூற்றாண்டின் தமிழ்மொழிநடையினைத் தெரிந்துகொள்ளவும் இது மிகவும் உதவி செய்கிறது. இந்நாட்குறிப்பு ஏறத்தாழ ஆறு, ஏழு பாகங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது; இதனை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். நாட்குறிப்பில் சுவையான நிகழ்ச்சிகளும் குறிப்புகளும் நிறையக் கிடைக்கின்றன. இந்த ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றித் தேசிகப் பிள்ளைதாம் 1944-ல் முதன் முதலாக ஒரு வாழ்க்கை வரலாறு எழுதி வெளியிட்டார். இந்நூல் சென்னை பல்கலைக்கழக இடைநிலை வகுப்புக்கும் (Intermediate) சென்னை அண்ணாமலைப்பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கும் (Entrance) பாடமாக நீண்ட காலம் வைக்கப்பட்டிருந்தது.

வைணவக் குடும்பத்தில் பிறந்த தேசிகப் பிள்ளைக்குத் தமிழ் வைணவ இலக்கியத்தில் மிக்க ஈடுபாடு இருப்பது இயல்புதான். வைணவ தத்துவத்தின் நுட்பங்களைக் கூர்ந்து உணர்ந்தவர் இவர். வைணவச் சித்தாந்தத்தை ஆழமாகப் பயின்று அவற்றைத் தமிழ் மக்களிடையே எளிமையாகப் பரவச் செய்ய வேண்டும் என்பது இவர் விருப்பம். முடிந்த போதெல்லாம் நய

மான வைணவப் பிரச்சாரத்துக்கு இவர் தம் காலத்தைச் செலவழித்திருக்கிறார். 1958-ல் புதுச்சேரியில் முதன் முதலாக ஒரு வைணவ மாநாட்டை இரண்டு நாட்கள் வெற்றிகரமாக நடத்தினார். அதில் தமிழகத்தின் வைணவ வித்தகர் பலர் பங்கு கொண்டு திருமாலியத்தின் மேன்மையை எடுத்துக்கூறினர். புதுவை வரத ராஜ பெருமாள் கோவிலில் 'திருமால் திருநெறி மன்றம்' என்றுஓர் அமைப்பை நிறுவி, போற்றத் தக்க விதத்தில் வைணவத் தொண்டு புரியவைத் தவர் இவரே. 1963-ல் சென்னையில் நடந்த 38-வது வைணவ மாநாட்டுக்குத் தலைமை தாங்கி ஓர் அழகிய உரையை இவர் நிகழ்த்தி யிருக்கிறார். அண்மையில் 'வேதாந்த தேசிகர் வரலாறு' என்னும் நூலையும், 'மாறன் என்னும் நம்மாழ்வார்'' என்னும் நூலையும் எழுதி வெளி யிட்டிருக்கிறார். இவை வேதாந்த தேசிகரைக் குறித்தும் நம்மாழ்வாரைக் குறித்தும் அரிய செய்திகளை உணர்த்துகின்றன.

தேசிகப் பிள்ளை அவர்களின் முதன்மையான இலக்கியத் தொண்டு, தமிழ் இலக்கியங்களை ஃபிரஞ்சு மொழிக்குக் கொண்டுபோனதுதான். ஃபிரஞ்சு மொழியை இவர் நன்கு கற்றிருப் பதால், பாடல் வசனம் எதையும் இவரால் தமி ழிலிருந்து ஃபிரஞ்சு மொழிக்குச் சுலபமாக எடுத் துச் செல்ல முடிகிறது. பன்னிரண்டு ஆழ்வார் களுள் ஒருவராக வைத்துப் போற்றப்படும் புனிதத்திரு ஆண்டாளின்' திருப்பாவையை' இவர் 1952-ல் பாடலாகவே மொழிபெயர்த்தார். 'திருப்பாவை'யின் இயற்கையான இசைத்திற மும் கவிவளமும் ஃபிரஞ்சு மொழிக்குச் சென்று ஃபிரஞ்சு அறிஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. ஃபிரான்ஸில் இதற்குச் சீரிய வரவேற்புக் கிடைத்தது. 1959-ல் இவர் கலை மகளைப் பற்றிய சில கவிதை நூல்களை ஃபிரஞ் சுக்குக் கொண்டுபோனார். கம்பரின் 'சரஸ்வதி அந்தாதி', குமரகுருபரரின் 'சகலகலாவல்லி மாலை' இவை இரண்டும் மொழிபெயர்ப்பாயின. இம்மொழிபெயர்ப்புக்குப் புதுச்சேரி ஃபிரஞ்சு கல்விமனையின் (The French Institute of Pondicherry) இயக்குநரான (Director) டாக்டர் ஜே. ஃபீலியோசா (Dr. J. Filliozat) முன்னுரை கொடுத்திருக்கிறார். இதற்கு ஃபிரஞ்சு வாச கர்களிடம் நல்ல ஆதரவு கிடைத்தது.

இம்மொழிபெயர்ப்பினால் பிள்ளை அவர் கள் ஃபிரஞ்சு அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெற்றார். 'Chevalier de l' Ordre de l' Etoile d' Arjunan' என்னும் பட்டமும், 'Chevalier de l' Ordre de l' Etoile Noire de Benin' என்னும் பட்டமும் சிறப்புப்பட்டங்களாக அவருக்கு வழங் கப்பட்டன. அவருடைய இலக்கியப் பணியைப் போற்றி ஃபிரஞ்சு தேசக் கல்வியமைச்சர், 'Officier d' Academe' (கல்விக் கழக மேலதிகாரி) என்னும் விருதை ஈந்தார். பிள்ளை அவர்களுக் குத் தமிழ், ஃபிரஞ்சு மொழிகளோடு ஆங்கில மும் நன்கு தெரியும். கல்லூரியில் அவருக்கு ஆங்கிலம் இரண்டாவது மொழியாக இருந்திருக் கிறது. ஆங்கில இலக்கியங்களிலும் அவருக்குத் தோய்ந்த புலமை உண்டு. புதுச்சேரி நீதிமன் றங்களில் இவர் ஆங்கில மொழிபகர்ப்பாளராக வும் பதவி வகித்திருக்கிறார்.

பிள்ளை அவர்களுக்குச் சமயக் காழ்ப்புச் சிறி தும் கிடையாது. ஒரு சீரிய வைணவராயினும், மற்றச் சமயங்களில் உள்ள மேன்மைகளைப் போற்றிப் புகழ் செய்ய அவர் எப்போதும் பின் தங்கியதில்லை. வைணவத்தை ஒப்பச் சைவமும் தென்னகத்தின் பழம்பெருஞ் சமயம் என்பதை அவர் என்றும் மறுத்ததில்லை. சைவ இலக்கியங் களில் மேதக்கனவற்றையும் ஃபிரஞ்சு மொழியில் அழகாகப் பெயர்த்திருக்கிறார். 1954-ல் நீதித் துறையிலிருந்து ஓய்வு பெற்றவுடன், ஃபிரஞ்சு இந்தியவியல் ஆராய்ச்சிமனையில் (French Institute of Indology) ஆராய்ச்சி வல்லுநராகப் பணியாற்றி வருகிறார். 'திருவிளையாடற் புரா ணம்', 'காஞ்சிப் புராணம்', 'கந்த புராணம்' என்னும் மூன்று சிறந்த சைவ நூல்களை ஃபிரஞ் சில் பாடல்களாகவே மொழிபெயர்த்து, அவை களை முறையே 1960, 1964, 1966-ம் வருடங் களில் வெளியிட்டுள்ளார். சைவ சிந்தாந்த


தயாராகிறது!

★ தித்திக்கும் தமிழ் நடை!

★ தெய்வத் தமிழ் நாட்டின்

★ மகோன்னத சரித்திர நாவல்!

**கோவி. மணிசேகரன்**

எழுதிய

**மீனவன் நண்பன்**

இரண்டு பாகங்கள்-இருபத்தைந்து ரூபாய்

**வைரம் பதிப்பகம்**

50, பெல்ஸ் ரோடு, சென்னை-5.

நுணுக்கங்களைக் கூர்ந்து உணர்ந்து ஃபிரஞ்சு ஆக்கம் செய்திருக்கும் இவர் திறத்தை ஃபிரஞ்சு அறிஞர்கள் மெத்தப் பாராட்டுகின்றனர். தற்போது மேலதிகாரிகளின் விருப்பப்படி, பிள்ளை அவர்கள் 'பெரிய புராணம்' என்னும் 'திருத்தொண்டர் புராணத்தை' மொழிபெயர்த்துவருகிறார்.

தேசிகப் பிள்ளைக்குத் தம் சமூகத்தின்மீதும் மிக்க பற்று உண்டு. ஆயர்குல முன்னேற்றத்துக்கு அவர் தம்மால் இயன்றதைச் செய்துள்ளார். புதுச்சேரியில் 'யதுகுல சங்கம்' என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தி, நெடுங்காலமாக அதற்குத் தலைவராக இருந்து வருகிறார். தமிழகத்து யாதவர் சங்க மாநாடுகள் பலவற்றுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்திருக்கிறார். 'ஆயர் ஏறு' என்று ஒரு பத்திரிகையைச் சில காலமாக நடத்திவந்திருக்கிறார். 1952-ல் வேதபுரீஸ்வரர் கோவிலில் நிறுவப்பட்ட பொது நூல் நிலையம், படிப்பறைக்குப் பொதுச்செயலாளராக இருந்துவருகிறார். பிள்ளை ஃபிரஞ்சு மொழியிலிருந்து ரோட்டிரவ், பெர்னார்டின் டி புனித பியர், சேவியர் டி மெய்ஸ்திரே முதலிய ஆசிரியர்களின் நூல்களையும் தமிழில் கொண்டுவந்திருக்கிறார்.

அமைதியான நோக்கும், இனிமையான முகமும், இங்கிதமான பழக்கவழக்கங்களும் உடைய பிள்ளை அவர்கள் ஓர் ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர். சிறிதும் தற்பெருமையோ தன் முனைப்போ இல்லாமல், தம் கல்வியையும் மற்றவர்க்குப் புலப்படுத்தாமல், பொறுமையாக இலக்கியப் பணி புரிந்துவருகிறவர் இவர். அறுபத்தொன்பது வயது நிரம்பிய பிள்ளை அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பிற மொழித் தமிழ்த் தொண்டைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்பது நம் விருப்பமாகும். இவருக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இந்த ஆண்டு பதக்கம் அணிவித்துப் பெருமைப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறது என்பதில் ஐயம் என்ன? ★

WITH BEST COMPLIMENTS FROM

SOUTHERN STRUCTURALS LIMITED

Wagon Builders and Structural Engineers.

REGISTERED OFFICE:
19, Cathedral Road,
'GDC' Building,
MADRAS-6

FACTORY OFFICE:
Pattabiram

# பிரஞ்சுக்காரரின் தமிழ்த் தொண்டு

ரா. தேசிகன்

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. இதன் அருமையும் பெருமையும் தமிழரல்லாத பிறர் மனத்தையும் கவர்ந்துள்ளன. வேற்று நாட்டார் பலர் தமிழைக் கற்றுப் போற்றினர். அவருள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் பிரஞ்சுக்காரர் ஆவார்.

பதினேழாவது நூற்றூண்டில் பிரஞ்சுக்காரர் இந்தியாமீது தம் கருத்தைச் செலுத்தினர். மேற்குக் கரையில் சில விடுதிகளை அமைத்தனர். பிறகு புதுச்சேரியில் குடியேறினர். அதன் பின் பிரான்சு நாட்டுக்கும் இந்தியாவுக்கும்—சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும், நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அரசியல்,வாணிபம் முதலிய துறைகளில் ஏற்பட்ட இத்தொடர்பு கலாசாரத்திலும் கால்கொண்டது. இக்கலாசாரத் தொடர்புக்கு அடிப்படையாயிருந்தது மொழியாகும். மொழியென்னும்போது இங்குத் தமிழ் மொழியே என்பதை எடுத்துக் கூறவேண்டியதில்லை.

தமிழின் தொன்மை, இனிமை, செம்மை, தனிமை, உயர்வு, செறிவு முதலியனவெல்லாம் பிரஞ்சுக்காரரின் மனத்தைக் கவர்ந்தன. தமிழர் தம் மொழியைத் தெய்வமாகவும் தாயாகவும் போற்றி வணங்குவதை அறிந்து அவர்கள் வியந்து மகிழ்ந்தனர். தமிழைக்கற்க அவர்களுள் பலர் ஆர்வங் கொண்டனர்.

உத்தியோக முறையிலோ அல்லது கிறித்துவ மதப் பிரசாரங் கருதியோ புதுச்சேரிக்கு வந்த பிரஞ்சுக்காரர் சிலர் தனி முறையில் தமிழ் கற்றனர். இவர்களுள் சிறப்பாகப் பாதிரிமார்களே பேருக்கங் கொண்டு விளங்கினர். தங்கள் நாட்டு மக்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்காகவே தமிழைப் பற்றிய நூல்கள் சில எழுதினர். பிரஞ்சு-தமிழ், தமிழ்—பிரஞ்சு அகராதிகளும் தொகுத்தனர்.

பதினெட்டாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் ழேசூய்த் (Jesuite) சங்கத்தைச் சேர்ந்த மத போதகர் பலர் தமிழ் கற்றனர். பிரஞ்சுக்காரர்களுக்கென்றே தமிழ்ப் பாடநூல்கள் எழுதினர். இப்பணி புரிந்தவர்களுள் கீழ்க்கண்டவர்களைச் சிறப்பாகக் குறிக்கலாம்: புஷே (Boucher), தே லா லான் (De la Lane), பூஜ் (Bouzes), கல்மேத் (Calmethe), கர்காம் (gargame).

கத்தோலிக்க மத குருக்கள்கூட மேற்கண்டவர்களைப் போலவே, அவர்கள் கையாண்ட முறையிலேயே, தமிழ் கற்று அதன் உதவி கொண்டு தங்கள் மதத்தை வளர்க்க முற்பட்டார்கள். பெறேன் (Perrin), துய்புவா (Dubois), துய்ப்புய் (Dupuis), முசே (Mousset), மகி (Maguy), லெகுஸ்த் (Legoust), லாப் (Lap) முதலியவர்கள் இத்துறையில் பணிபுரிந்த அறிஞர்கள் ஆவார்கள்.

மேலே கண்ட இருதிறத்து மக்கள் தவிர சமயச் சார்பின்றித் தனிப்பட்டவர் பலர் தமிழின்பால் ஆர்வங் கொண்டு அதனைக் கற்றனர். அவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் எதுவார் அரியேல் (Edouard Ariel) என்பவராவார். இவர் 1844ஆம் ஆண்டில் புதுச்சேரிக்கு வந்தார். கடற்படைக்கு உதவித் தளகர்த்தராகப் பணிபுரிந்து 1854ஆம் ஆண்டில் புதுச்சேரியில் காலமானூர். இந்தப் பத்தாண்டுக் காலத்தில் அவர் தமிழை முறையாகப் பயின்று நல்ல தமிழறிவு பெற்றூர். ஓலைச்சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் ஏராளமாகத் தொகுத்தார். அவை அனைத்தும் பாரீசு தேசீய நூல்நிலையத்திற்குக் கொடுக்கப்பட்டன.

தமிழ் கற்றுத் தமிழறிவு பெற்றதோடமைந்தவர்கள் ஒரு புறமிருக்க, தமிழைக் கற்றுத் தமிழைப் பற்றிப் பிரஞ்சு மொழியில் நூல்களும் வேறு பல கட்டுரைகளும் எழுதிய பிரஞ்சுக்காரரும் உண்டு. எழேன் புய்ர்னூப் (Eugene Burnouf), லாங்லேஸ் (Langles), தெவேஜ் (Devez), பரீக்தெ போந்தேனிய (Barrigue de Fontainieu) முதலியோர் இத்துறையில் சிறந்து விளங்கியவர்களாவார்கள்.

பிரஞ்சுக்காரர் ஆர்வங்கொண்டு தமிழைக் கற்க முற்பட்டதனுல் பாரீசு நகரத்தின் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவு ஒன்று 1879 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அக்காலத்தில் பிரஞ் சிந்திய அரசியல் அமைப்புப்படி பிரஞ்சிந்தியாவின் பிரதிநிதியாகப் பாரீசுப் பாராளுமன்றத்திலிருந்தவர் ழுய்ல் கொதேன் (Jules Godin) என்ற பிரஞ்சுக்காரர். இவருக்கு ஏற்பட்ட புதுச்சேரியின் தொடர்பால் இவர் உள்ளத்தில் தமிழார்வம் பெருகிற்று. பாரீசில் தமிழைக் கற்பிக்க வேண்டுமென்று எண்ணினூர். இது குறித்துப் பெருமுயற்சி செய்தார்; வெற்றியும் பெற்றூர். பாரீஸ் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பிரிவு அவ்வெற்றியைக் குறிப்பதாகும். மாணவர் பலர் அத்தமிழ்ப் பிரிவில் சேர்ந்து தமிழ்ப் பயிற்சி பெற்றனர்.

ழுய்ல் கொதேன் தமிழ்க் கல்வியைப் பாரீ

சில் முறையான வகையில் பல்கலைக் கழகத்தின் மூலம் போதிக்க ஏற்பாடு செய்தாரெனினும், அவருக்கு முன்னரே லாங்க்ளேஸ் (Langles, புர்னூப் (Bournouf) என்பவர்களின் முயற்சியால் தற்காலிகமாக ஒரு தமிழ் வகுப்பு கீழ்நாட்டு மொழிக் கல்விச்சாலையில் தொடங்கப்பட்டுச் சிறிது காலம் நடந்தது.

தமிழ் மொழியைத் தங்கள் நாட்டில் வளர்ப்பதற்காகத் தொண்டு புரிந்த வேறு பல பிரஞ்சு அறிஞர்களும் உண்டு. தமிழைப் பற்றியும் தமிழ் கற்கவேண்டிய முறையைப் பற்றியும் இவர்கள் எழுதியுள்ளார்கள். தமிழிலுள்ள அரிய நூல்களையோ அல்லது அரிய நூல்களின் சிறப்பான பகுதிகளையோ பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்தும் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார்கள். இத்துறையில் ஈடுபட்ட பெருமக்களுள் கீழ்க்கண்டவர்கள் சிறப்பானவர்கள்.

சொன்னரா (Sonnerat) என்னும் பெயரினர் 'தமிழ் எழுத்தின் அமைப்புமுறை' என்றதொரு நூலினைப் பிரஞ்சு மொழியில் 1806ஆம் ஆண்டில் வெளியிட்டார். பரீக்தெ போந்தேனிய (Barrigue de fontainieu) என்பவர் திருக்குறளின் காமத்துப்பாலைப் பிரஞ்சு மொழியில் தந்திருக்கிறார். அபே துய்புவா (Abbe' Dubois) என்னும் பெயரினர் 'பஞ்சதந்திரம்' 'பரமார்த்தகுரு' முதலிய கதைகளைப் பிரஞ்சு மொழியில் தந்திருக்கிறார். முசேதுய்புய் (Mousset Dupuis) இவர்கள் இருவரும் பிரஞ்சு—தமிழ் அகராதியும், தமிழ்-பிரஞ்சு அகராதியும் தொகுத்திருக்கின்றனர். இந்த அகராதிகளில் வேர்ச்சொல், மேற்கோள் வாக்கியங்கள் உள்ளன. பியேர் மேய்ல் (Perre Meil) என்பவர் 'இருபதாம் நூற்றுண்டின் தமிழ் இலக்கியப் பாடநூல்' என்னும் ஒரு நூலைப் பிரஞ்சு மொழியில் எழுதியுள்ளார். சொல்லோசை, பாடமுறை முதலியன இதில் காணக்கிடக்கின்றன.

புலேஜ் (Boulez) என்னும் பெயரினர் வேலூரில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். 'கொச்சைத் தமிழ்' என்னும் பெயரில் பிரஞ்சு மொழியில் ஒரு நூல் இயற்றியுள்ளார். சொற்களின் உச்சரிப்பு, இலக்கண அமைதி முதலியவற்றோடு வேலூர்ப் பக்கங்களில் வழங்கப்படும் வட்டாரச் சொற்கள் பற்றிய குறிப்புகளையும் அதில் தந்துள்ளார். ஷெனே (Chenot) என்பவர் 1849ஆம் ஆண்டில் பிரஞ்சு-தமிழ்ப் பாடநூல் என்னும் பெயரில் ஒரு நூல் இயற்றியுள்ளார். இந்நூலில் இவர் தரும் தமிழ்ப் பாடங்கள் எல்லாம் ரோமன் லிபியில் எழுதப்பட்டுள்ளன. லமேரேஸ் (Lamairesse) என்ற பெரியார் 'தென்னாட்டுப்பாக்கள்' என்னும் தலைப்பில் பிரஞ்சு மொழியில் ஒரு நூல் இயற்றியுள்ளார். இதில் 'திருக்குறள்' ஒருபகுதியும் 'திருவரங்கக் கலம்பகம்' முழுமையும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி, இவர் பிரஞ்சு மொழியில் 'தேவதாசிப் பாட்டு' 'தெருப்பாட்டு' என்ற தலைப்புகளில் சில பாட்டுகளைப் பிரஞ்சு மொழியில் தந்திருக்கிறார். வல்லே தெ விரிவீல் (Vallet de Viriville) என்பவர் தமிழில் வசனமும் பாட்டும் கலந்திலங்கும் வாசகப்பா ஒன்று இயற்றியுள்ளார். அதற்கு எஸ்தாக்கியர் வாசகப்பா' என்பது பெயர். 'எஸ்தாக்கியர் (Saint Eustache) வரலாற்றை விளக்குவதே அவ்வாசகப்பா. அது 1837ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு 1845ஆம் ஆண்டில் புதுச்சேரியில் நடிக்கப்பட்டது.

ப்ளேன் (Blin) என்னும் பெயருடைய போர் வீரர் ஒருவர் பிரான்சு நாட்டினின்று புதுச்சேரிக்கு வந்தார். இங்கு வந்ததும் அவர் தமிழ் மொழியில் பற்று மிகக்கொண்டு அதனைக் கற்று 'அகராதித் தமிழ்' என்னும் ஒரு நூலை இயற்றினார். அந்நூல் பாரீசில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. ழுலியேன் வேன்சோன் (Julien Vinson) என்பவர் தமிழ் மொழியில் பேரார்வங் கொண்டு அதனை நன்கு கற்று அம்மொழிபற்றி நூல்கள் பல இயற்றியுள்ளார். இவர் தம் தந்தையோடு புதுச்சேரிக்கு வந்தார். தமிழ் பயின்றார். தமிழ்ப் புலவர்கள் பலரை அணுகி அவர்கள் ஆதரவைப் பெற்றார். உ. வே. சாமிநாதய்யர், வேதாசலம் பிள்ளை, பண்டிதர் சவரிராயர், காரைக்கால் ஐயாக்கண்ணனார், ஐயாசாமிப் புலவர் முதலிய தமிழ்ப் பெரியார்களின் அன்பையும் ஆதரவையும்பெற்றார். தமிழ்ப்பாடநூல்என்னும்பெயரில் பிரஞ்சும் தமிழும் கலந்து ஒரு நூல் இயற்றினார். பல கதைகள் தமிழில் எழுதினார். ஆனந்தரங்கப் பிள்ளையின்நாட்குறிப்புகளிற் சிலவற்றைப் பிரஞ்சில்மொழிபெயர்த்துவெளியிட்டார். 'கம்பராமாயணத்'தில் தாடகைவதை அகல்யை பாபவிமோசனம் ஆகிய இரண்டு படலங்களைப் பிரஞ்சில் மொழிபெயர்த்தார். இவை இரண்டும் 1861-ம் ஆண்டில் பிரஞ்சிந்திய அரசாங்கப் பத்திரிகையில் வெளிவந்தன. இதற்குப் பின்னர் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகியவற்றின் சில பகுதிகளைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரஞ்சு மொழியில் எழுதினார். சிந்தாமணி இவர்தம் கருத்தைப் பெரிதும் கவர்ந்தது. சிந்தாமணியைப்பற்றி இவர் கூறுவது சிந்திக்கத்தக்கது: "சிந்தாமணியில் இலக்கிய நயம் மிகவுண்டு. இந்நூலில் இதன் ஆசிரியர் கையாளும் நடை ஒரு தனி நடையாகும். ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை இவர் ஏராளமாக ஆள்கிறார். சிந்தாமணி உயர்ந்ததோர் இலக்கிய நூலாய் அமைந்துளது. சிந்தாமணியின் உரை புலமை நடையில் எழுதப்பட்டுள்ளது."

ழுலியேன் வேன்சோனுக்குப்பின் அதாம் (Adam) என்பவரைக் குறிப்பிடலாம். அதாம் காரைக்காலுக்கு நீதிபதியாக வந்தவர். தமிழ் மீது ஆர்வங்கொண்டு அதனைக் கற்றார். 'திருவள்ளுவர்' சரித்திரம் என்னும் நூல் ஒன்றைப் பிரஞ்சு

WITH BEST COMPLIMENTS FROM

# Kaveri Structurals

Head Office :
SIRE MANSION
123, Mount Road,
MADRAS—6
PHONE : 85368 &
88693
GRAM : METALFAB

FACTORY :
Senthannipuram,
Golden Rock,
Trichy-4
PHONE : 736,136 & 185
GRAM : STRUCTURES
TELEX : 045-210

STRUCTURAL ENGINEERS & FABRICATORS.
ALSO MANUFACTURERS OF STORAGE TANKS
PRESSURE VESSELS, PENSTOCKS ETC.

# சமுதாய விரோதிகள்!

சுவர் ஏறிக் குதித்துக் கொள்ளையடிப்பவனும், பிறர் சட்டைப் பையிலிருந்து பணம் திருடுபவனும், பிரயாணச்சீட்டு வாங்காமல் ரயிலில் பிரயாணம் பண்ணுபவனும் மூன்று வேறுபட்ட மனிதர்களாயினும், சமுதாய விரோதிகளே! டிக்கட் இல்லாத பிரயாணிகள் தேசக் கருவூலத்தின் நியாயமான வருவாயைத் திருடுவதுடன், ஒழுங்கான பிரயாணிகளின் வசதியையும் நிம்மதியையும் பறித்துக்கொள்ளுகிறார்கள்.

எனவே, டிக்கட் இல்லாத பிரயாணியை நீங்கள் பிடித்துக் கொடுத்தால், அது சமுதாயத்துக்குப் புரியும் சீரிய தொண்டாகும்.

---தென்னிந்திய ரயில்வே

மொழியில் இயற்றினர். அதன் பின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களைப் பிரஞ்சில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பியேர் லொத்தி (Pierre Loti) என்பவர் ஒரு பிரஞ்சு எழுத்தாளர். அவர் தமிழராய்ச்சிசெய்தார், தமிழைப்பற்றிய அவர் தம் கருத்தை ஒரு நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவதாவது: ''பிரஞ்சுக்காரர் இந்தியாவுக்கு வந்ததன்பின் அவர்கள் முதன் முதலாகக் கற்றுக்கொண்டது தமிழ் மொழியே. இந்த மொழியின் வாயிலாகத்தான் தமிழ் நாட்டின் பழக்கவழக்கங்கள், சமூக அமைப்புகள், மதங்கள் முதலியவற்றின் உண்மையான தத்துவங்களை அவர்கள் அறிந்துகொள்ள முடிந்தது. தமிழ் இலக்கியம் மிகப் பரந்துவிட்டது. மிகத்தொன்மை வாய்ந்தது. மற்றஎந்த இந்திய மொழியும் வரி வடிவத்தில் வாராமுன்னம் தமிழ் எழுதப்பட்டுவந்தது. தமிழின் நெடுங்கணக்கு முழுத்தன்மையுடையது. முதல் தன்மையுடையது. இந்த நெடுங்கணக்கை அமைத்த முறை மிக்க அறிவு சான்ற ஒரு திறமையை வெளிப்படுத்துகிறது. அந்நெடுங்கணக்கில் மிக நுண்ணிய, மிக நியதியுள்ள கண்ணோட்டத்தினை நாம் காண்கிறோம். இந்த நெடுங்கணக்குத் திடீரென்று ஏற்பட்டதன்று. ஓர் இலக்கணப் புலவனின் அல்லது ஓர் இலக்கணப்புலவர் கூட்டத்தின் நுண்ணறிவுள்ள நீண்ட காலப் பணியின் பயனேயாகும்.''

பியேர் லொத்தியைப் போலவே பேராசிரியர் மெய்ல் (Meil) என்பாரும் தமிழ் மொழியில் ஆர்வங்கொண்டவர். தமிழைப் பயின்று பாரீசில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். மாணவர்களுக்கென தமிழிலும் பிரஞ்சிலும் பாடநூல்கள் சில இயற்றினர். இவர் தமிழைப்பற்றிக் கொண்டிருந்த கருத்து வருமாறு: ''தமிழ் இலக்கியம் விந்தையும் வியப்பும் தரத்தக்கதாயும், வற்றாத உயர் எண்ணங்களின் ஊற்றாயும் இருக்கிறது. தமிழ் மொழி இந்தியமொழிகளுள் மிகமிகப் பழமையானது. அதுவே முதன் மொழியாகவும் இருக்குமென்று நான் நம்புகிறேன். அஃது உயர் தனிச் செம்மொழி. அதனை வெகு காலத்திற்கு முன்னரே பிரஞ்சுக்காரர் கற்கத் தொடங்காதது ஒரு பெருங் குறையே. தமிழர்களின் வாழ்க்கை நலன்களை நாம் அப்போதே தெரிந்து கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாத ஒரு பெருந்தவற்றைப் பிரஞ்சுக்காரராகிய நாம் நீண்ட காலமாகச் செய்துவிட்டோம்.''

இற்றைய நாளில் பிரஞ்சுக்காரர் பலர் தமிழ்த் துறையில் சிறந்து விளங்குகின்றனர். அவருள் முதலிடம் பெற்றுப் புகழுடன் இருப்பவர்தான் பிலியோஜா (Jean Filliozat) என்பவர். அவரையடுத்து பிரான்சுவா குரோ (Francois Gros) என்பவர் சிறந்த தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறார்.

இப்போது பாரீசுப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவு சிறப்புற்று விரிவடைந்து வருகிறது. மாணவர் எண்ணிக்கையும் பெருகிவருகிறது. அவர்கள் தமிழ் மொழி ஆராய்ச்சியைப் பற்பல கூறுகளில் செய்துவருகிறார்கள். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலும் பிரான்சு நாட்டு மாணவர்கள் இன்று தமிழ்ப் பயிற்சி பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். ★

இயல் இசை கூத்தின் இனிக்கும் குரலினை ஈன்றிடும் எங்கள் பணிமனை!

செயல்திற மிக்க சீர்மிகு வானொலி செல்வராசனின் மேஜார்!

குறைந்த விலையில் குறைந்த மெயின் செட்:

3 பேண்டுகள்; 6 வால்வுகள்; விலை ரூ. 165 (A.C. மட்டும்)

மேஜார் எலக்ட்ரானிக் (பி) லிமிடெட்

18, அக்கிரகாரம் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2.


for
Security
and
Service
Bank with
THE
BANK OF INDIA
LTD.
T. D. KANSARA: General Manager

# டாக்டர் மாலிக் முகம்மது

—"இனியன்"

திரு. மாலிக் முகம்மது அவர்கள் குமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் 22-2-1935 ல் பிறந்தவர். இவருடைய தாய் மொழி தமிழ் ஆகும்.

இவர் மாணவராக இருந்தபொழுதே தமிழில் மிக்க ஆர்வங் கொண்டிருந்தார். இவர் எழுதிய 'ஆலம் கிரீன் ஆட்சியிலே' என்ற சிறு நாடக நூல் பலருடைய பாராட்டுதலைப் பெற்றது. தமிழில் சில நூல்களும் பல கட்டுரைகளும் அக்காலத்தில் எழுதியுள்ளார்.

கல்லூரிப் படிப்பின்போது பிறமொழி இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்ற வேணவா இவர்க்கு எழுந்தது. இதன் விளைவாக இந்தி இலக்கியத்தை நன்கு கற்றார். தமிழ் இலக்கியத்தின் அருமைபெருமைகளை இந்தி மொழி வாயிலாக வடநாட்டில் பரப்பும் நற்பணியில் இவர் முனைந்தார்.

வடநாட்டில் இந்தி மொழி பேசும் உத்தரப் பிரதேச மாநிலத்தில், அலிகார் பல்கலைக்கழகத்தில் இவர் இந்தியில் எம். ஏ. வகுப்பில் முதல்வராகத் தேறினர். பிறகு சட்டப் படிப்பிலும் முதல்வராக வெற்றி பெற்றார். என்றாலும் சட்டத் துறையில் புகாமல், இலக்கியப் பணியே இவருக்கு இன்பம் கொடுத்ததால், அதில் மிகுதியும் நாட்டங்கொண்டு உழைத்துவரலானர்.

இதன் காரணமாகத் தமிழிலும் இந்தியிலும் கட்டுரைகளும் மொழிபெயர்ப்பு இலக்கியப் படைப்புக்களும் இவர் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். இவர் தமிழ் வைணவ இலக்கியத்தை ஆழ்ந்து நுகர்ந்தபோது ஓர் உண்மை நன்கு புலப்பட்டது. தமிழ் வைணவ பக்தி இயக்கமே, பொதுவாக வடநாட்டிலும், சிறப்பாக இந்தி வழங்கும் பகுதியிலும், குறிப்பாக இந்தி இலக்கியத்திலும் ஊடுருவி ஆங்கெல்லாம் பக்தி இயக்கம் பெருகத்துணைபுரிந்துள்ளது என்ற அடிப்படைத் தத்துவத்தை இவர் உணர்ந்தார். உணர்ந்ததை ஆராய்ச்சி ரீதியில் மெய்ப்பிக்க முனைந்தார். இதன் பயனாக ஒரு பெரிய ஆராய்ச்சி நூலை இந்தியில் இவர் எழுதினர். இதற்காக, அலிகார் பல்கலைக்கழகம் தத்துவப் பேரறிஞர் (பி. எச். டி.) என்ற பட்டத்தை இவருக்கு வழங்கிப் பெருமைப்படுத்தியது. இவர் இந்தியில் எழுதிய இவ்வாராய்ச்சி நூல் புத்தக வடிவில் வெளிவந்தபோது, இந்தி அறிஞருலகம் இவரை மிகுதியும் பாராட்டத் தொடங்கியது. தமிழ்ப் பக்தி இயக்கத்தின் பெருமையைத் தக்க சான்றுகளுடன் இவர் மெய்ப்பித்துக்காட்டியதை இந்தி அறிஞர்கள் வியப்புடன் வரவேற்று ஏற்றிப் போற்றினர். 1966 ல் உத்தரப் பிரதேச அரசாங்கம், சிறந்த இலக்கியப் பணிக்காக இவருக்கு ரூ. 1000 பரிசும் கௌரவமும் கொடுத்துச் சிறப்பித்துப் பாராட்டியது இங்கே குறிக்கத் தகுந்தது.

இந்தி மொழி வழங்கும் உத்தரப் பிரதேசத்தில் இவர் ஆராய்ச்சி மாணவராக நான்காண்டுகளும், பின்னர் அலிகார் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பல ஆண்டுகளும் பணியாற்றினர். அக்காலத்தில் தமிழ் மொழியை இந்தி மக்கள் மத்தியில்பரப்ப இவர் தமிழ் வகுப்புக்கள் நடத்தினர். உத்தரப் பிரதேச அரசாங்கம் தென்னாட்டு மொழிகளைக் கற்பிக்க ஒரு திட்டம் கொண்டுவந்தபோது, அத்திட்டம் நன்கு நிறைவேறவும் தமிழ் வகுப்புக்களைச் சரிவர நடத்திவரவும் இவர் பாடத்திட்டம் வகுத்துக் கொடுத்தார். இதன் பயனாக, லக்னோ, ஆக்ரா, அலகாபாத் முதலிய நகரங்களில் தமிழ் வகுப்புகள் நடத்த வேண்டிய நல்லாலோசனைகளையும் இவர் நல்கினர். அந்நகரங்களில் பல தடவைகளில் இவர் தமிழ் இலக்கியத்தின் பெருமையைப் பற்றி இந்தியில் சொற்பொழிவாற்றித் தமிழ் மொழியைக் கற்க ஆர்வமூட்டியுள்ளார். வானொலி வாயிலாகவும் தமிழ் இலக்கியம் பற்றி இந்தியில் இவர் பல முறை பேசியுள்ளார்.

இவர் இந்தியில் எழுதியுள்ள "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் விரிவான நூலை உத்தரப் பிரதேச இந்தி சமிதி வெளியிட இருக்கிறது. திரு. அகிலன் அவர்களின் 'பாவை விளக்'கின் இந்தி மொழிபெயர்ப்பை இவர் செய்து முடித்துள்ளார். அது சீக்கிரம் வெளிவரும் என்று தெரிகிறது.

1964 முதல் கேரளப் பல்கலைக் கழகத்தில் இந்தி ஆராய்ச்சித் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார் திரு. மாலிக். கேரள சாகித்திய அக்காதமியின் வேண்டுகோளுக்கிணங்க, இவர் 'அகநானூற்றை' மலையாளத்தில் மொழி பெயர்த்து, விரிவான முன்னுரையுடன் கொடுத்துள்ளார். இதுவும் விரைவில் வெளிவர இருக்கிறது. 'தமிழ் வைணவ பக்தி இயக்கம்' பற்றிய இவரது தனி நூல் ஒன்று இந்தியில் அண்

With Compliments from:

the

# INDIAN EXPRESS

Your Favourite Daily

★

Now Published from

MADRAS—BANGALORE—MADURAI—VIJAYAWADA—BOMBAY & DELHI

The largest Circulated English Daily
with a Circulation Exceeding
Three Lakhs and with a
Readership of over
a Million

—: :—

# DINAMANI

The Tamil Daily Preferred by the discriminating Readers

AND

# DINAMANI KADIR

The Tamil Weekly.

மையில் வெளிவரவுள்ளது. தமிழ் இலக்கியம் பற்றி இந்தி மொழியில் தொடர்ந்து இவர் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுவருகிறார்.

இன்னும் எத்தனையோ இலக்கியத் திட்டங்களையும் இலக்கிய ஆராய்ச்சிகளையும் செய்யத் திரு. மாலிக் எண்ணியுள்ளார். தமிழில் சிறந்த காவியங்களையும் நூல்களையும் இந்தி மொழியில் மொழிபெயர்த்து வெளியிடவும் இவர் கருதியுள்ளார். இவைகளின் விளைவாகத் தமிழ் இலக்கியப்பெருமையை இந்தி உலகம் மேலும் அறிந்து போற்றும் என்பது திண்ணம்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரும், தென்னாட்டுச் சூழலை நன்கு தெரிந்தவரும், இஸ்லாமிய நெறியில் வளர்ந்தவருமான திரு. மாலிக் முகம்மது அவர்களுக்குத் தாய்மொழியோடு ஆங்கிலம், இந்தி, மலையாளம், சமஸ்கிருதம், உர்தூ முதலிய மொழிகள் நன்கு தெரியும். இவர் எம். ஏ., எல். எல். பி., பி. எச். டி. போன்ற பட்டங்களுடன், வித்வான், ஸாஹித்திய ஆசார்யா, ஸாஹித்திய ரத்ன, ஸாஹித்திய பிரவீண், பாஷா பாரங்கத் முதலிய விருதுகளும் பெற்றுள்ளார்.

இளமையும், மிடுக்கும், கலையார்வமும் மிக்க திரு. மாலிக் முகம்மது அவர்கள் மேலும் மேலும் இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து புரிந்து, தாய்மொழிக்கும் தாய்நாட்டிற்கும் பேரும் புகழும் தேடிக் கொடுக்கும் திருத்தூதராக விளங்குவாராக!

---


*நல்வாழ்த்துக்கள்!*

# இந்தியன் டெலிபோன் இன்டஸ்டிரீஸ் லிட்.,

**தூர்வாணி நகர், பெங்களூர்-16.**

டெலி-கம்யூனிகேஷன் சாதனங்கள் உற்பத்தியாளர்கள்

# மோட்டார், சாலைப் போக்குவரத்துக்குத் தொண்டுபுரியும் நிறுவனங்கள்

—:★:—

டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மெட்ராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

சதர்ன் ரோடுவேய்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ் மோட்டார் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அசெஸரீஸ் லிமிடெட்

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்

தி டின்னவேலி மோட்டார் பஸ் சர்வீஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

சிங்கர்—டி. வி. எஸ். லிமிடெட்

திருச்சி ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட்

சுந்தரம் பாஸனர்ஸ் லிமிடெட்

டார்ஷன் புராடக்ட்ஸ் லிமிடெட்

வீல்ஸ் இந்தியா லிமிடெட்

லூகாஸ்—டி. வி. எஸ். லிமிடெட்

பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்

சுந்தரம் கிளேய்ட்டன் லிமிடெட்

# வடநாட்டில் தமிழ் மணம்

—டாக்டர் மாலிக் முகம்மத்

தமிழ் கூறும் நல்லுலகத்திற்கப்பாலும் தமிழ் இலக்கியம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சென்றுள்ளது. ஆரிய மொழிகள் பேசப்படும் பாரதத்தின் வடபாதியிலும் தமிழ் இலக்கிய மணம் பன்னூற்றாண்டுகளுக்குமுன்பே பரவியதற்குச் சான்றுகள் உள்ளன. போக்குவரத்து வசதிகள் குறைந்த அக்காலத்திலும் விந்திய மலையைக் கடந்து சென்ற பக்தர்கள் வாயிலாகத் தமிழ் மணம் வடநாட்டில் பரவ வாய்ப்பிருந்தது. குறிப்பாக வைணவ பக்தர்களான ஆழ்வார்களின் பக்தி இலக்கியமும் கம்பராமாயணமும் வடநாட்டில் வெகுவாகக் கவர்ச்சி பெற்றிருந்தன என்பதற்குப் போதிய சரித்திர, இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தகாலையில் பல மொழிகள் பேசும் பாரத நாட்டின் ஒற்றுமைக்காகப் பெரும்பான்மையோர் பேசும் மொழி என்னும் அடிப்படையில் இந்தி மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பிறகு மொழி வழி மாகாண அமைப்பின் பயனாக ஒவ்வொரு மொழியின் வளர்ச்சிக்காகவும் தக்க சூழ்நிலை உருவாக்கப்பெற்றது. ஆயினும், பெரும்பான்மையோர் பேசும் மொழி என்னும் நோக்கில் இந்தி மொழிக்குத் தனி ஓர் இடம் கொடுக்கப்பட்டு வந்தது. இன்று அரசியற் கண்ணோட்டத்தில் ஆட்சிமொழி பற்றிய பிரச்சினை சிக்கலான ஒரு நிலையை எட்டியுள்ளது. அரசியற் கண்ணோட்டத்திற்கப்பால் பல மொழிகள் பேசும் பாரத நாட்டில் மொழிகளின் இலக்கியங்களுக்கிடையே ஓர் இணைப்பு ஏற்படுதல் மிகமிக அவசியம். ஒரு மொழியின் இலக்கியத்தின் சிறந்த அம்சங்கள் வேறொரு மொழியின் இலக்கியத்தில் கடந்து செல்வதை யாரும் விரும்பாதிருக்க முடியாது. இந்நிலையில் மொழி பெயர்ப்பு வாயிலாகத் தமிழ் இலக்கியத்தின் சிறந்த அம்சங்கள் பிறமொழி இலக்கியத்தில் பிரவேசிப்பதையும், பிறமொழி இலக்கியங்களின் தனித் தன்மைபெற்ற பகுதிகள் தமிழில் வருவதையும் யாராலும் தவிர்க்க இயலாது. என்றும் ஓர் இலக்கியத்தை வெளித்தொடர்பில்லாமல் ஒதுங்கி நிற்க விடுவது அவ்விலக்கியத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இடுவதாகும். பல மொழிகள் வழங்கும் நாட்டில் மொழிகளின் இலக்கியங்களுக்கிடையே ஓர் இணைப்பு இருப்பது நாட்டு ஒற்றுமைக்கு இன்றியமையாததாகும். ஒவ்வொரு மொழியின் இலக்கியத்திலும் அதற்கான சில சிறப்புப் பகுதிகள் இருக்கலாம். அவற்றை மொழிபெயர்ப்பு மூலம் பிற மொழிகளில் கொணரும் நோக்கம் இலக்கிய இன்பத்தை எல்லோரும் பெற ஏதுவாகும்.

இந்தி மொழிக்குத் தனியான ஒரு முக்கியத்துவம் கிட்டியகாலை முதல் இலக்கியப் படைப்புக்கள் வெகுவாக உருவாக ஏற்ற சூழ்நிலை உண்டாகியது. பிற மொழிகளின் சிறந்த அம்சங்களை இந்தியில் கொணர ஓர் ஆர்வம் எழுந்தது. திராவிட மொழிகளில் தமிழுக்கான தனிச் சிறப்பை இந்தி பேசும் பிரதேசத்தார் நன்கறிந்துள்ளனர். தமிழ் மொழியைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் அறியப் பொதுவாக இந்தி வாசகர்களிடம் ஓர் ஆர்வம் காணப்படுகிறது. அரசியல் அரங்கத்தில் நிலை எதுவாயினும் இலக்கியத் துறையில் தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள் இந்தியில் வருவதை வரவேற்கும் ஒரு பெரும்பகுதி இந்தி இலக்கிய வாசகர்கள் உண்டு கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியத்தின் சிறந்த அம்சங்கள் பல இந்தியில் வெளிவந்துள்ளன. இத்துறையில் இந்தி கற்ற தமிழர்கள் பலர் தொண்டாற்றியுள்ளனர்; தொண்டாற்றிவருகின்றனர். இந்தியில் வெளிவந்துள்ள தமிழ் இலக்கியப் பகுதிகள் பல. சிலவற்றை இங்குச் சுருக்கிக் குறிப்பிடுவது அவசியமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களுள் திருக்குறளும், கம்பராமாயணமும், ஆழ்வார்கள் பாடல்களும் முக்கியமாக இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. கம்பராமாயணத்தின் சில பகுதிகளையும், இந்திப் புலவர் துளசிதாசர் இராமாயணத்தின் சில பகுதிகளையும் ஒப்பிட்டு டாக்டர் சங்கரராசு அவர்கள் இந்தியில் நூலொன்று எழுதியுள்ளார். கம்பராமாயணத்தைத் திரு. நா. வி. இராஜகோபாலன் இந்தியில் மொழிபெயர்த்துள்ளார். இக்கட்டுரையின் ஆசிரியர் ஆழ்வார்கள் பாடல்கள் பலவற்றை இந்தியில் ஆக்கியுள்ளார். தமிழ்ப் பக்தி இலக்கியத்தைப் பற்றியும், தமிழ் வைணவ பக்தி இயக்கம் இந்தி இலக்கியத்திற்கு அளித்த கருத்துச் செல்வம் பற்றியுமான இக்கட்டுரை ஆசிரியரின் இந்தி ஆராய்ச்சி நூல், தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் பெருமை பற்றி இந்தி வாசகர்கள் அறிய ஏதுவாயிற்று. தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் இந்தியில் பல வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியச் சரித்திரத்தை இந்தியில் முதலாக எழுதியவர் திரு. பூர்ணம் சோமசுந்தரம் ஆவார். அவர் நூல் வாயிலாக இந்தி


In India a tradition of cordial hospitality awaits you at
RITZ CHAIN OF HOTELS
Designed for gracious living, our hotels provide luxurious and beautifully decorated air-conditioned apartments, each with radio, telephone and attached bath. The highest standards of efficient and courteous service awaits you at our hotels. Choicest continental and Indian cuisine.
Firpo's
CREDIT CARD HONOURED
RITZ HOTEL BOMBAY
RITZ HOTEL HYDERABAD
HOTEL METROPOLE MYSORE
RITZ CONTINENTAL HOTEL (Under Construction) CALCUTTA
AIRLINES HOTEL BOMBAY
RITZ HOTEL COONOOR
HOTEL KRISHNARAJASAGAR MYSORE
FIRPO'S RESTAURANT (Established Since 1917) CALCUTTA
Service Advtg. Studio

வாசகர்களுக்குத் தமிழ் இலக்கியம் பற்றி ஓரளவு அறிய வாய்ப்புக் கிட்டியது.

இந்தியில் வெளிவந்துள்ள தமிழ் இலக்கியப் பகுதிகள் பலவகைப்பட்டன. இராஜம் அய்ய ரின் 'கமலாம்பாள் சரித்திரம்' திரு. ஹரிஹர சர்மா அவர்களால் இந்தியில் மொழிபெயர்க்கப் பட்டது. பாரதியாரின் பல பாடல்களைத் திரு. சிவராம் சர்மாவும், திரு. ஸ்ரீனிவாசாச்சார்யா வும், இன்னும் பலரும் இந்தியில் மொழிபெயர்த் துள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் 'பரேலி' என்னும் நகரிலிருந்து காலஞ்சென்ற திரு. இராக வாச்சார்யா அவர்கள் ஒரு தனி இந்திப் பத்தி ரிகை மூலம் தமிழ் வைணவ பக்தி இலக்கியம், சித்தாந்தம் பற்றிப் பல கட்டுரைகளும் நூல் களும் வெளியிட்டுவந்தார். பூர்ணம் சோம சுந்தரம் அவர்கள் கல்கியின் 'கள்வனின் காதலி' நவீனத்தை இந்தியில் மொழிபெயர்த்தார். இந்தி இலக்கியத்தின் சில பகுதிகளையும் தமிழ் இலக்கியத்தின் சில பகுதிகளையும் ஒப்பிட்டு இலக்கிய விமர்சனம் இந்தியில் எழுதிவருவோ ரில் திரு. சந்திரகாந்த முதலியார், திரு. ஜய ராமன், திரு. சங்கரராசு, திரு. கணேசன், திரு. நா. வி. இராஜகோபாலன், திரு. பார்த்தசாரதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளில் பல இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு வந்துள்ளன. பல தமிழ்க் கதைத்தொகுப்புக்களும் இந்தியில் வந்துள்ளன. திரு. வெங்கடகிருஷ்ணன், சிலப்பதிகாரத்தின் ஒருபகுதியை இந்தியில் ஆக்கியுள்ளார். சிலப்பதி காரம் முழுவதையும் இந்தியில் மொழிபெயர்க் கும் பணியில் இன்னொருவர் ஈடுபட்டுள்ளார். தற்காலத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாகக் கதை, நாவல் இலக்கியங்களில் சிறந்த பலவற் றைத் திரு. வீழிநாதனும் திருமதி சரஸ்வதி ராமநாதனும் இந்தியில் கொணர்ந்துள்ளனர். 'கல்கி'யின் 'பார்த்திபன் கனவு' நாவலைத் திரு. வீழிநாதனும், 'அகிலன்' அவர்களின் 'பெண்' சிறுநாவலைத் திருமதி சரஸ்வதிராமநாதனும் இந்தியில் மொழிபெயர்த்துள்ளனர். இங்குக் குறிப்பிடப்பட்டவர்களும் குறிப்பிடப்படாத பல ரும் தமிழ் இலக்கியத்தின் பல பகுதிகளை இந்தி யில் கொணர்ந்துள்ளனர். அவ்வப்போது தமிழ் இலக்கியப் பகுதிகள் இந்திப் பத்திரிகைகள் வாயிலாக வெளியாகிவருகின்றன. இதன்மூலம் தமிழ் இலக்கியம் பற்றி இந்தி வாயிலாக அறியும் வாய்ப்பு இந்தி வாசகர்களுக்குக் கிட்டியுள்ளது. இம்முயற்சி தொடர்கிறது; இனியும் தொடரும்.

சில இந்தி எழுத்தாளர்களிடையும் தமிழ் இலக்கியம் பற்றி அறியவும், தமிழ் இலக்கியப் பகுதிகளை ஒப்பிட்டு இந்தியில் எழுதவும் ஓர் ஆர்வம் எழுந்துள்ளது. அரசியல் விருப்புவெறுப் புக்கப்பால் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழ் இலக்கியம் பற்றி அறியவும் ஆர்வம் உள்ள ஒரு பகுதி இந்தி வாசகர்கள் கட்டாயம் இருக்கவே இருக்கிறார்கள். மும்மொழித் திட்டம் புகுந்த காலையில் தென்னாட்டு மொழிகளை வடநாட்டில் கற்பிக்கப் பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள் ளன. வட இந்தியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தி மொழியினரில் உற்சாகம் உள்ள பலர் ஆர்வத் துடன் தமிழ் கற்கின்றனர். ஆனால், அவர்களுக் குத் தமிழைக் கற்கப் பல இயற்கையான தடை கள் உண்டு. தமிழின் உச்சரிப்பு, இலக்கணம் அவர்களுக்குப் புதிராக உள்ளன. இந்நிலையில் இந்தி வாயிலாக இலகுவாகத் தமிழ் கற்பிக்கப் பல நூல்கள் தேவையாகின்றன. இத்துறை யில் கவனம் செலுத்த வேண்டுவது அவசியம். வடநாட்டில் பல முக்கியக் கேந்திரங்களில் இல வசத் தமிழ் வகுப்புக்கள் நடத்தத்தக்க ஏற்பாடு செய்தால் நல்லதொரு தொண்டாகும்.

இந்தியில் வந்துள்ள தமிழ் இலக்கியம் இந்தி வாசகர்களின் ஒரு பகுதியினரையே கவர்ந் துள்ளது! பெரும் பகுதியினரையும் கவர இந்தி யில் மேலும் தமிழ் இலக்கியப் படைப்புகளைக் கொணர உற்சாகத்துடன் பெருமுயற்சி எடுக்க வேண்டும். இத்திசையில் இந்தியில் எழுதும் ஆற் றல் பெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்குப் போதிய ஒத்துழைப்புக் கொடுப்பதும் அவசியமாகும். இங்கும் அங்குமாகச் சிறுசிறு பகுதிகளைப் பொறுக்கி எடுப்பதற்குப் பதிலாக, என்றும் நிலை நிற்கும் பெருமையுள்ள தமிழ் நூல்களை முழுமை யாக இந்தியில் பெயர்த்துக் கொணர்வது விரும் பத்தக்க ஒரு திட்டமாகும். இதன் மூலம் தமிழ் நூல்களுக்கு விரிவான ஒரு வாசகர் உலகம் கிட் டும். இப்பணியில் பலர் சேர்ந்து முனைவது அவசி யமாகும். சங்க அடிப்படையில் இம்முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் விரும்பத்தக்க பலன் ஏற் படும். இந்தி இலக்கியப் பரப்பைப் பெரிதாக்க விரும்பும் இந்தி வாசகர்களும் இதற்கு ஒத் துழைப்பர்; அரசாங்கத்தின் பொருளாதார ஒத் துழைப்பும் இப்பணிக்காகக் கிட்டும். இத்தகைய முயற்சியின் பலனாய் இந்தியில்மொழி பெயர்ப்பு மூலம் தமிழ் இலக்கிய மணம் பரவ ஏதுவாகும்.

தமிழ் கற்க ஆர்வம் வடநாட்டில் பெரும் பகுதியினரிடம் இல்லையாயினும், ஒரு சிறு பகுதியினரிடமாவது இருக்கத்தான் செய்கிறது. இச்சிறு பகுதியினருக்காவது தமிழைக் கற்கப் போதிய வாய்ப்புக்கள் கொடுக்க வழி செய்வது செய்யவேண்டிய ஒன்றாகும். இவர்களுக்காகப் பிரத்தியேகமாகப் பாடப்புத்தகங்கள் இயற்ற வும், வகுப்புக்கள் நடத்தவும், தமிழ் இலக்கியம் பற்றி இவர்களுக்காகச் சொற்பொழிவுகள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்வது அவசிய மாகும். தமிழ் கூறும் நல்லுலக எல்லைக்கப்பால் வடநாட்டில் பல பகுதிகளிலும் வாழும் தமிழர் கள் மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு ஆவன செய்ய உதவலாம். அவர்கள் மூலம் ஒரு திட்ட வட்டமான அமைப்பு முறையில் ஏற்பாடுகள் செய்ய ஒரு கழகம் தேவை. தமிழ் மணம் வெளி யுலகில் பரப்ப முனையும் ஆர்வமுள்ள எழுத் தாளர்களும் தமிழ் ஊழியர்களும் இத்திசையில் கவனம் செலுத்துவார்களாக.

★



# எல்லோரும்
# இன்புற்றிருக்க
# நினைப்பதுவே யல்லாமல்
# வேறொன்றறியேன்
# பராபரமே!

ஆனந்த விகடன் · 151. மவுண்ட் ரோடு · சென்னை 2

# எழுத்தாளர் மாநாடுகள்

—: சோ. சிவபாதசுந்தரம் :—

1948-ம் ஆண்டு இத்தாலியில் வெனிஸ் நகரத்துக்கு ஒரு விடுமுறையில் போயிருந்தேன். அப்போது தற்செயலாக ஓர் ஆங்கில நண்பரைச் சந்தித்தபோது, அவர் தாம் ''பி. இ. என்.'' என்ற அனைத்துலக எழுத்தாளர் மாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியாக வந்திருப்பதாகவும் வெனிஸ் நகரத்தில் அந்த மாநாடு நான்கு நாட்கள் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். நானும் 'பி. இ. என்'னைச் சேர்ந்த எழுத்தாளனாயிருந்ததை நண்பர் அறிந்ததும் மகிழ்ச்சியோடு என்னை அவர் அழைத்துச் சென்று மாநாட்டு நிர்வாகிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்து அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளித்தார். மிகப் பெரிய அளவில் அனைத்துலக உறுப்பினர்கள் கூடிய சிறந்த எழுத்தாளர் மாநாட்டை நான் கண்டு அனுவிக்கக் கூடியதாயிருந்தது.

மாநாட்டின் வெற்றி அம்மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை மாத்திரம் பொறுத்ததல்ல. மாநாட்டை நிருவகித்து நடத்துபவர்களின் உழைப்பிலும், பொறுப்புணர்ச்சியிலும், தியாக மனப்பான்மையிலும் தங்கியிருக்கிறது. வெனிஸ் மாநாட்டை நடத்திய நண்பர்கள் இத்தாலி நாட்டிலேயே பெருமதிப்பிற்குரிய மூன்று எழுத்தாளர்கள், மாநாட்டின்போது இரண்டு நாள் மாலை நிகழ்ச்சிகளில், தென் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த நாடோடிக் கலைஞர் குழுவின் எழில்மிக்க நடன நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. இந்த நிகழ்ச்சியை மேலே சொன்ன செயற்குழு நண்பர்கள் கண்டுகளிக்கவில்லை! முடியாமற்போனதல்ல, அவர்கள் வேறு அலுவல்களில், வெளிநாட்டு உறுப்பினர்களின் தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்!

மாநாட்டில் கருத்தரங்கு ஏற்பாடு செய்த உறுப்பினர் அக் கருத்தரங்கில் பங்குகொள்ளவில்லை. இசையரங்கு கலையரங்கு நடத்தியவர்கள் அந்த நிகழ்ச்சிகளைக் காண முடியவில்லை. இம்மாதிரி, அந்த மாநாட்டின் செயற்குழுவினர் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் இல்லாமல், மாநாட்டு விருந்தினரைக் கவனிப்பதிலும், மற்றும் காரியங்கள் ஒழுங்காக நடக்கின்றனவா என்று பார்ப்பதிலும் ஈடுபட்டினர். இதைக் கண்டு நான் ஆச்சரிப்பட்டேன். வெனிஸ் மாநாடு அந்த ஆண்டிலே மிக வெற்றிகரமாக நடந்தது என்ற பெயருக்குக் காரணம் அதன் செயற்குழு நண்பர்கள் தியாகமே என்ற உண்மையை அறிந்தேன்.

1959-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டைத் தமிழ் எழுத்தாள நண்பர்கள் மறந்துவிட்டிருக்கமாட்டார்கள். இருநூற்றுக்கு மேற்பட்ட வெளியூர் எழுத்தாளர்கள், பதினான்கு மொழிகளின் பிரதிகளின் பிரதிநிதிகள், ஒரு வார காலம் ஒரே இடத்தில் கூடி, ஒன்றாக வாழ்ந்து கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றில் கலந்து உறவாடி, ஈற்றில் பிரிய மனமில்லாமல் கலந்து தத்தம் ஊர் சென்றது மறக்க முடியாத ஒரு சம்பவம். இந்த மாநாட்டிலும், செயற்குழுவைச் சேர்ந்த ஐந்தாறு நண்பர்கள் ஊண் உறக்கமின்றி, கருத்தரங்கோ கலையரங்கோ என்பதில்லாமல் தத்தம் கடமையுணர்ச்சியில் ஈடுபட்டுழைத்ததுதான் மாநாட்டின் பெரிய வெற்றிக்குக் காரணம். இத்தனைக்கும் இந்த நண்பர்கள் சாதாரண தொண்டர்களல்ல; இலக்கியக் கருத்தரங்குகளிலும், கலையரங்குகளிலும் தம் பங்கைக் கொடுத்திருந்தால் மற்றைய எழுத்தாளர்களின் பாராட்டுதலைப் பெற்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் அப்பாராட்டுதலை நினைக்கவில்லை. விருந்தினர்கள் நல்லெண்ணமொன்றையே கருத்தில் கொண்டு உழைத்தனர். சென்னை நகருக்கு அது பெரிய புகழைத் தேடித் தந்தது என்று அப்போது அம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் பெருமிதமெய்தினர்.

தமிழ் எழுத்தாளர் மாநாடு கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சென்னையில் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு தடவை மாத்திரம் 1958-ல் நாகர்கோவிலில் இந்த மாநாட்டை நடத்தியிருக்கிறோம். நமது சங்கம்ஏற்படுவதற்குப்பலவாண்டுகளுக்கு முன்பு தமிழ் எழுத்தாளர்களின் மாநாடு ஒன்று கோயம்புத்தூரில் நடந்ததையும் நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். பெரும்பாலும் நாம் நமது மாநாடுகளைப் பெருமளவில் சிறப்பாகவே நடத்தி வந்திருக்கிறோம். சென்ற சில ஆண்டுகளாக சீன, பாகிஸ்தான் தொல்லைகளும், இவற்றின் விளைவான பொருளாதார நெருக்கடிகளும் காரணமாக நாம் ஆண்டு மாநாடுகளைச் சுருக்கமாகவும் சிக்கனமாகவும் நடத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. செலவிலே சிக்கனப்படுத்தினாலும், இலக்கிய முயற்சிகளில் நாம் சிக்கனம் செய்ய வேண்டுமென்பதில்லை. ஆகையால், வருங்கால மாநாடுகளை இன்னும் சிறப்பான முறையில் நடத்த வேண்டுமென்பது பல நண்பர்களின்

விருப்பம். அத்துடன், திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் முதலிய வெளி நிலையங்களிலும் மாநாடுகள் நடத்தினால் வெளியூர் உறுப்பினர்களும் உற்சாகமுறுவார்கள் என்றும் பேசப்படுகிறது.

இவற்றையெல்லாம் சிந்திக்குமிடத்து, நமது சங்கத்தை இன்னும் சிறிது வலுப்பெற வைக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சங்கத்தவர்களிடம் மேலும் ஊக்கம் வளரச் செய்து அதன் மூலம் இன்னும் பல எழுத்தாளர்களை உறுப்பினரார்கச் சேரச் செய்து, இதுவரை உறுப்பினராகாமல் இருக்கும் பல சிறந்த எழுத்தாளர்களையும் நம்மிடையே வரச் செய்து, இலக்கிய முயற்சிகளையும், எழுத்தாளர் நலன்களையும் பெருகச் செய்ய வேண்டும். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்று பாரதியார் சொன்னது நாட்டுக்கு மாத்திரமல்ல, நமது சங்கத்துக்கும் பொருந்தும். நமது சங்கத்தின் வருங்கால வெற்றிக்கு இப்போதே அனைவரும் ஒன்றுபடுவோமாக.

---

தமிழில் எந்தப் புத்தகம் வேண்டுமானாலும்
எங்கட்கு எழுதுங்கள்

↓

# மனோன்மணி புத்தக நிலையம்

138-A, பவழக்காரத் தெரு, சென்னை-1.

*தபால்பெட்டி எண். 114*

# தமிழில் விஞ்ஞான நூல்கள் ஒரு விமர்சனம்

ப. நா. பாலசுப்பிரமணியன்

**வி**ஞ்ஞானம் இன்று மிக வேகமாக வளர்ந்து வருகிறது. மனோவேகத்தையும் மிஞ்சக் கூடிய அளவில் வளர்ச்சி பெற்று வரும் விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவினை ஒவ்வொரு சராசரி மனிதனும் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாததாகிவிட்டதென்றே கூறவேண்டும்! அன்றாட வாழ்க்கையோடு நெருங்கிப் பிணைந்துவிட்ட விஞ்ஞானம் பற்றிய உண்மைகளை விளக்கும் விஞ்ஞானக் கட்டுரைகளும், விஞ்ஞான நூல்களும், 'விஞ்ஞான இலக்கியம்' என்ற உருவத்தில் பலருக்கும் பயன்படும்படி ஒவ்வொரு மொழியிலும் உருவாகியிருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டவல்ல ஒரு செய்தியாகும். இவ்வகையில் தமிழிலும் பல விஞ்ஞான நூல்கள் தோன்றித் தமிழில் 'விஞ்ஞான இலக்கியம்' வளம் பெறத் துணை புரிந்துள்ளன. தமிழில் இன்றளவில் வெளிவந்துள்ள விஞ்ஞான நூல்கள் பற்றிய சில உண்மைகளை இங்கே காண்போம்.

தமிழில் வெளிவந்துள்ள விஞ்ஞான நூல்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சுயமான நடையில் தமிழில் விஞ்ஞான உண்மைகளை விளக்கி எழுதப்பட்ட நூல்கள் முதல் பிரிவைச் சேரும். பிற நாட்டு விஞ்ஞான நல்லறிஞர்கள் எழுதியுள்ள விஞ்ஞான நூல்களின் (தமிழ்) மொழிபெயர்ப்பு நூல்கள் இரண்டாவது பிரிவைச் சேரும். இவ்விரு பெரும் பிரிவுகளில்தான் இன்றைய 'தமிழ் விஞ்ஞான நூல்கள்' அடங்கியுள்ளன.

தமிழில் தற்போது எந்தவொரு நுணுக்கமான விஞ்ஞானத் துறை பற்றிய நூலும் இருக்கிறதென என்றால் நிச்சயமாகச் சொல்ல முடியும். அச்சுக்கலை, தோட்டக் கலை, மின்(சாரப்) பொறியியல், (Electrical Engineering) தாவரவியல், பிராணி இயல் என்று விஞ்ஞான சாத்திரத்தின் பல துறைகளைப் பற்றிய நூல்கள் இன்று தமிழ் மொழியில் வெளிவந்துள்ளன. தமிழில் வெளிவந்துள்ள பல விஞ்ஞானத் துறைகளைப் பற்றிய நூல்களின் பட்டியல் மிக மிக நீளமானது!

முதலில் மொழி பெயர்ப்பு நூல்களைக் கவனிப்போம். இம் மொழிபெயர்ப்பு நூல்கள் பெரும்பாலும் மிகச் சிறந்த விஞ்ஞான நூல்களின் மொழிபெயர்ப்பு நூல்களாகவே அமைந்துள்ளன. அதாவது ஆங்கில மொழியில்; பிரபலமான, தங்களது துறையில் நிபுணர்களான விஞ்ஞானிகளாலும், விஞ்ஞான நூலாசிரியர்களாலும் எழுதப்பட்ட நூல்களே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கில நூல்களைத் தவிரப் பிறமொழிகளில் வெளியான விஞ்ஞான நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. என்றாலும், இவை எண்ணிக்கையில் அதிகமில்லை என்றே சொல்ல வேண்டும். பிற மொழிகளில் வெளியாகியுள்ள விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியில் அமெரிக்கச் செய்தித்துறையினரும் (USIS), என். சி. பி. எச். (N. C. B. H. Pvt. Ltd.) நிறுவனத்தாருமே முன் நிற்கின்றனர். 'கலைக்கதிர்' நிறுவனத்தாரும் விஞ்ஞான மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் பிரபல புத்தக வியாபாரிகளான ஹிக்கின்பாதம்ஸ் (Higginbothams) நிறுவனத்தார் அருமையான பல விஞ்ஞான நூல்களை (அமெரிக்காவில் வெளியானவை.) மொழிபெயர்த்து அழகிய புத்தகங்களாகத் தமிழில் வெளியிட்டுள்ளனர்.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விஞ்ஞான நூல்களைப் படிக்கும் பலருக்கும் படிக்க ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே அலுப்புத் தட்டும் வகையில் பல நூல்களின் மொழி பெயர்ப்பு அமைந்திருப்பதைக் காண வருத்தமுண்டாகிறது. ஆர்வங்காரணமாகத் தமிழில் வெளிவந்துள்ள விஞ்ஞான மொழிபெயர்ப்பு நூல்களைப் படிக்க முற்படும் பலர் மொழிபெயர்ப்பைப் புரிந்துகொள்ள இயலாமல் ஆங்கிலம் அல்லது பிறமொழியிலுள்ள மூல நூல்களையே படிக்கப் புகுவதை நான் பலமுறை கண்டிருக்கிறேன்! இதற்குக் காரணம், மொழிபெயர்ப்புச் சற்றே கடினமாக (Tough) இருப்பதுதான்! மேலும், பல மொழிபெயர்ப்பு நூல்களில் வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி மூலம் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது விரும்பத்தக்கதல்ல. தமிழ்மொழியின் இயல்புகளையொட்டி, பலருக்கும் புரியக்கூடிய எளிமையான முறையில்—அதே நேரத்தில் மூலத்தின்பொருள் மாறாத வகையில் மொழிபெயர்ப்புச் செய்யப்படுமானால் பலருக்கும் பயன்பட்டு, அவர்களது பாராட்டையும் பெறுவது திண்ணம். இது கடினமான காரியம் என்பதில் சந்தேகமில்லை. தமிழில் விஞ்ஞான இலக்கியத்தை வளம்பெறச் செய்யும் நல்ல நோக்கத்துடன், விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடு

**Money Comes......**
**And Goes**
**But with The State Bank**
**Money Comes......**
**And Grows!**

Your Savings with the State Bank of India guard your future for you. And your Savings earn while you learn or work. Open a Savings Account with cheque-book facilities.

With less taxes you have more money in hand. So you can save more and collect interest at the highest rates ever offered by the State Bank of India!

EARN A SECOND INCOME
WITH FIXED DEPOSITS:

We can help you to earn a second income when you keep your savings in Fixed Deposits. You get interest as high as 7%. Come to us.........we'll make your money earn more for you!

| | | |
|---|---|---|
| SAVINGS ACCOUNTS | up to | 4% |
| FIXED DEPOSITS | up to | 7% |

Full details of interest rates on request:

STATE BANK FOR SERVICE.

படும் விஞ்ஞானம் பயின்ற அறிஞர்கள் 'கர்ம சிரத்தையுடன்' பலருக்கும் புரியக்கூடிய வகையில் மொழிபெயர்ப்புச் செய்வதே உண்மையான பயன்தரவல்லது என்பது என் கருத்து.

உண்மை பொதுவில் இவ்வாறிருப்பினும், சில மொழிபெயர்ப்பு நூல்கள் மிகச் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களைப் படிக்கும்போது இவை சுயமாகவே தெள்ளுதமிழில் எழுதப்பட்டுள்ளனவோ?' என்ற ஓர் உயரிய எண்ணமே ஏற்படுகிறது. இதற்காக மொழிபெயர்ப்பு ஆசிரியரை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

பொதுவில் தமிழில் வெளிவரும் விஞ்ஞான மொழிபெயர்ப்பு நூல்களின் தரம் உயரவேண்டும்; உயர்வதற்கான வழிகள் இருக்கின்றன என்றே எனக்குப் படுகிறது.

தமிழில் எழுதப்பட்டுள்ள பழமையான விஞ்ஞான நூல்கள் விரிவான முறையில், ஆதார பூர்வமான விஷய விவரங்களுடன் சிறந்த வகையில் எழுதப்பட்டுள்ளன.

தமிழில் சுயமாக எழுதப்படும் விஞ்ஞான நூல்களின் பிரிவில் விஞ்ஞானப் பாடநூல்களை முதலில் கவனிக்கலாம். உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் போதனு மொழியாக இருப்பதன் காரணமாக எழுதப்பட்டுள்ள விஞ்ஞானப் பாடப் புத்தகங்கள், தமக்கு எளிதில் புரியக்கூடிய முறையில் சிறப்பான வகையில் எழுதப்பட்டுள்ளன என்றே மாணவ மாணவிகள் கூறுகின்றனர். இது முற்றிலும் உண்மையானதே. நான் மாணவனுக இருந்த காலத்தில் இதே ரீதியில் தான் தமிழிலுள்ள விஞ்ஞானப் பாடப்புத்தகங்களைப் பற்றிய என்னுடைய அபிப்ராயமும் அமைந்திருந்தது. தமிழிலுள்ள விஞ்ஞானப் பாடப்புத்தகங்களின் வெற்றிக்குப் பாடப் புத்தகக்குழு (Text-Book Committee) பெரிதும் காரணம்! ஆம், பாடப்புத்தகக் குழுவினர், பலருக்கும் புரியக்கூடிய தெளிவான நடையில் தவறுகளே இல்லாத (சமயத்தில் துரதிர்ஷ்டவசமாக சில தவறுகள் ஏற்படுவதும் உண்டு!) விஞ்ஞானப் புத்தகங்களையே விஞ்ஞானப் புத்தகங்களாக வைக்க அனுமதியளிக்கின்றனர். அனுமதி பெற்றாலன்றிப் பாடப்புத்தகமாக வைக்க முடியாது. எனவே, அனுமதி பெற வேண்டிய நிலையில் விஞ்ஞானப் பாடப்புத்தகங்களை எழுதும் விஞ்ஞான ஆசிரியர்கள் கர்ம சிரத்தையுடன் நூல்களை எழுதுகின்றனர்.

சுயமான நடையில் விஞ்ஞான உண்மைகளை விளக்கும் தமிழ் விஞ்ஞான நூல்கள் பல, பலரும் பாராட்டத்தக்க முறையில் எழுதப்பட்டுள்ளன. சுயமாகவே தமிழில் விஞ்ஞான உண்மைகளை எழுதுவதில் எத்தனையோ இடர்ப்பாடுகள் உண்டு. இருந்தபோதிலும், இயல்பாகவே ஒரு தெளிவு இந்நூல்களில் ஏற்பட்டுவிடுகிறது.

''பலருக்கும் புரியக்கூடிய முறையில் விஞ்ஞான நூல்கள் தமிழில் எழுதப்படவில்லை'' என்பது ஓர் இலக்கிய விமர்சகரின் அபிப்ராயம்!

விஞ்ஞானத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட திரு. தி. ஜ. ர. அவர்கள், ''தமிழில் விஞ்ஞான நூல்கள் மிகவும் தெளிவான முறையில், குறிப்பாக அமெரிக்க விஞ்ஞான நூல்களைப்போல் (Popular Science Books) பலரும் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டால் சிறந்த பலன் ஏற்படுவது நிச்சயம்'' என்று ஓரிடத்தில் எழுதுகிருர். இவருடைய எண்ணம் பூரணமாக நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை! தமிழில் விஞ்ஞான நூல்கள் எழுதும் சிலர் நல்ல முறையிலேயே, தெளிவான வகையிலேயே எழுதிவருகின்றனர் என்பதே என் நம்பிக்கைக்குக் காரணம்.

சில நூல்களில், தெளிவு('Clarity') இல்லாமலிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். ஒரு சில நூல்களிலேயே இந்தக்குறை இருப்பதாக எனக்குப் படுகிறது.

குழந்தைகளுக்கான நூல்களை எழுதுவதே சிரமமான காரியம். அதிலும் விஞ்ஞான நூல்களை இளஞ்சிறுவர். சிறுமியர்களுக்காக எழுதுவதென்பது மிக மிகக் கடினமான காரியம். இக் கடினமான காரியத்தைப் பலர் துணிந்து செய்துள்ளனர். குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ள விஞ்ஞான நூல்களில் பெரும்பாலானவை கதை ரூபத்திலேயே அமைந்துள்ளன. இந்த உத்தியே குழந்தைகளால் விரும்பப்படுகிறது. கதைப் பிரியர்களான குழந்தைகள் கதை யுருவத்தில் அமைந்துள்ள விஞ்ஞான நூல்களையே பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர்.

சில இடங்களில் எளிதில் புரியாத விஞ்ஞான உண்மைகள் கூறப்பட்டிருப்பினும், கதையாக அமைந்திருப்பதால் குழந்தைகள் படிக்கக் கஷ்டப்படுவதில்லை.

குழந்தைகளுக்கான விஞ்ஞான நூல்கள் சிலவற்றில் விஞ்ஞான உண்மைகளை விளக்கும் படங்களில் பல தவறுகள் காணப்படுகின்றன. ஓவியருடன் நூலாசிரியர் சேர்ந்து பணிபுரியாததே இதற்குக் காரணம்! விஞ்ஞான உண்மைகளை விளக்கும் படங்களில் தவறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நூலாசிரியரின் தலையாய கடமை. இந்த ஒரு குறைதான்! பொதுவில் குழந்தைகளுக்காக வெளிவந்துள்ள விஞ்ஞானப் புத்தகங்கள் மிகவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளன.

குழந்தைகளுக்கான மிகச் சிறந்த விஞ்ஞான நூல்களை எழுதுவதன் மூலம் அரிய பணியாற்றியுள்ள 'கல்வி' கோபாலகிருஷ்ணன், 'வைத் தண்ணு' ஆகிய இருவரும் பாராட்டுக்குரியவர்களாகின்றனர். இவர்கள் எழுதியுள்ள விஞ்ஞான நூல்களை யும், விஞ்ஞானக் கதைகளையும்

FOR ELEGANCE AND ECONOMY

BUY

CO-OPTEX HANDLOOM FABRICS

IN

Alluring colours, pleasing design & enchanting texture

available at:

all our Co-optex selling units throughout India

★

THE TAMIL NADU (MADRAS STATE)

**Handloom Weavers' Co-operative Society Ltd.,**

34/1A, Pantheon Road, Egmore, Madras-8.

குழந்தைகள் விருப்பத்தோடு படிப்பதே இவர்களுடைய நூல்களின் வெற்றிக்கும் எழுத்தாற்றலுக்கும் அத்தாட்சி.

தமிழில் விஞ்ஞான நூல்களை எழுதும்போது கலைச்சொற்களைப் பிரயோகிப்பது குறித்து விஞ்ஞான நூல் எழுதுவோரிடம் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலர், துணிந்து விஞ்ஞானக் கலைச் சொற்களை அப்படியே தமிழில் (Transliteration) எழுதிவிடுகின்றனர்! 'ஆம்ப்ளிபையர் மெக்கானிசம்', 'டிரான்சிஸ்டர் மெக்கானிசம்', 'எலக்ட்ரிகல் இன்ஜினீயரிங்', மோட்டார் மெக்கானிசம்' போன்ற நூல்களில் இந்த முறையைப் பரக்கக் காணலாம். கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்தி எழுதுபவர்களிடமும் ஒற்றுமையைக் (கலைச்சொற்கள் பிரயோகத்தைப் பொறுத்தமட்டில்) காணமுடியவில்லை. 'Chemistry' என்ற கலைச் சொல்லிற்கு; 'வேதியியல்', 'வேதிநூல்' 'இயைபியல்', 'இரசாயன சாஸ்திரம்' என்று பலவிதமான மொழிபெயர்ப்புக்கள் விஞ்ஞான நூல்களில் கையாளப்பட்டுள்ளன. 'Theory of Relativity' என்பதற்கு; 'ஒப்புமைத்தத்துவம்', 'சார்பு நிலைக்கொள்கை' 'சார்புத்தத்துவம்', 'சார்புக்கொள்கை' எனப் பலவாறான தமிழாக்கங்களைக் காணமுடிகிறது! ஏன்? இந்த ஒருமைப்பாடு குறித்துப் பேசும் இந்நாள்களில் குறைந்தபட்சம் விஞ்ஞானக் கலைச் சொற் பிரயோகத்தில் ஒருமைப் பாட்டினைக் கடைப்பிடிப்பது அப்படியொன்றும் கடினமான காரியமாகப் படவில்லை. தமிழில் எழுதப்படும் விஞ்ஞான நூல்களில் பலருக்கும் புரியக்கூடிய முறையில் விஞ்ஞானக் கலைச்சொற்கள் கையாளப்படவேண்டும். இக்காரியத்தில் ஒருமைப்பாடு இருப்பது தேவையானது. பயன்தரவல்லது என்பது என் கருத்து.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள விஞ்ஞான நூல்கள் சிலவற்றில் பொருள் அட்டவணையும் (Index) கலைச்சொற் பட்டியலும் இடம் பெறவில்லை. ஒவ்வொரு விஞ்ஞான நூலிலும் பொருள் அட்டவணையும், கலைச்சொற் பட்டியலும், அனுபந்தமும், முடிந்தால் 'Bibliography-யும் இடம்பெற வேண்டுமென்பது என் திடமான கருத்து.

தமிழில் நல்ல முறையில் சுயமான நடையில் விஞ்ஞான நூல்கள் எழுதுபவர்கள் என்று, திருவாளர்கள் பெ. நா. அப்புஸ்வாமி, ஆர். கே. விசுவநாதன், நா. கி. நாகராஜன், நீ. ரா. ஸ்ரீநிவாசன், சா. கு கணபதி ஐயர், ச. அருணாசலம், கே. எஸ். மகாதேவன், டாக்டர் எம். ஏ. தங்கராஜ், கேப்டன் தி. அ. கருப்பண்ணன், ப. குணசேகர், பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அ. நடராஜன், எஸ். எஸ். ராமசாமி, ப. நா. பாலசுப்ரமணியன் முதலான பலரைக் குறிப்பிடலாம்.

தமிழில் விஞ்ஞானத்தைப் போதிப்பது சாத்தியமான காரியமே என்று சுமார் இருபதாண்டுகளுக்கு முன்னரே கல்லூரிகளுக்கான பல விஞ்ஞானப் பாடப்புத்தகங்களைத் தமிழில் வெளியிட்டதன் மூலமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்நூல்கள் மிகச் சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளன என்பது பலரும் ஒப்புக்கொண்ட ஓர் உண்மை!

தரமான விஞ்ஞான நூல்கள் பல தமிழில் தோன்ற, சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் பரிசுத்திட்டம் ஒன்றின் வாயிலாகப் பாராட்டத்தக்க பணியாற்றி வருகின்றனர்.

தமிழிலுள்ள விஞ்ஞான நூல்களின் அச்சும் அமைப்பும் மிகவும் நன்றாக உள்ளன. நூலைப் பார்ப்பவரைப் படிக்கத் தூண்டும் 'காந்தசக்தி' இவற்றிற்கிருப்பதைச் சொல்லியே தீரவேண்டும்.

விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதுவதென்பது மிகமிகக் கடினமான காரியம். உழைப்பு மிகுதியாகவும், ஊதியம் குறைவாகவும் இருக்கின்ற இப்பணியில் ஈடுபட்டுள்ள பலரும் நல்ல இலட்சியப் பிடிப்புள்ளவர்கள். தமிழில் நல்ல பல விஞ்ஞான நூல்களை எழுதுவதன் மூலம் விஞ்ஞான இலக்கியப் பிரிவைத் தமிழில் வளப்படுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் விஞ்ஞான நூல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். "என்னுடைய நூல்களைப் பெருவாரியானவர்கள் படிப்பதில்லை. மேலும், விஞ்ஞானம் பற்றித் தமிழில் எழுதுவதால் போதிய அல்லது உரிய வருவாயும் கிடைப்பதரிது! எனவே, நீங்கள் கதைகளையும் நாவல்களையும் எழுதினால் தனலாபம் உண்டு. புகழும் கிடைக்கும்" என்று, தமிழில் தரமான விஞ்ஞான நூல்களைப் பல ஆண்டுகளாக எழுதிவரும் ஒரு முதுபெரும் அறிஞர், எனக்கு ஒரு சமயம் அறிவுரை நல்கினார். எனக்கு இப்படி அறிவுரை நல்கிய அவர் தொடர்ந்து விஞ்ஞான நூல்களையே எழுதி வருகிறார். இலட்சியப்பிடிப்பும் நல்லெண்ணமுமே இவரை இப்பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தக் காரணமாயுள்ளன. தமிழில் தரமான விஞ்ஞான நூல்களை எழுதும் பணியில் இலட்சியப் பிடிப்புடன் நானும் ஈடுபட்டு வருகிறேன். நல்ல பணிக்கு உரிய அல்லது ஏற்ற ஊதியம் கிடைக்காததை நான் அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை.

தமிழில் எழுதப்பட்டுள்ள விஞ்ஞான நூல்களில் காணப்படும் குணங்களையும் குற்றங்களையும் கண்டோம். இத்துறையில் ஈடுபட்டுவரும் எனக்கு ஒரு 'Self-Introspection' ரீதியிலேயே இக்கட்டுரையை எழுதியுள்ளேன். என் கருத்துக்களுக்கு மாறானவற்றையும் பலர் கொண்டிருக்க

லாம். தமிழிலுள்ள விஞ்ஞான நூல்களின் தன்மைகளைக் குறித்து என் மனத்தில் எழுந்த எண்ணங்களுக்கு எழுத்துருவம் தந்துள்ளேன். அவ்வளவுதான். குறைகள் நீங்கிய, குணங்கள் நிரம்பிய நூல்களே தோன்றவேண்டும் என்ற நல்ல நோக்கத்திலேயே குறைகளைப்பற்றி அதிகம் குறிப்பிட்டேன்.

பொதுவில் தமிழில் எழுதப்பட்டுள்ள விஞ்ஞான நூல்கள், நல்ல நோக்கத்தோடு வெளியிடப்பட்டவை. நல்ல முறையிலேயே பல நூல்களும் அமைந்துள்ளன. ஆரம்பத்தில் குறைகள் இருப்பது சகஜம். படிப்படியாக அவை நீங்கிவிடும். தமிழில் விஞ்ஞான நூல்களுக்கு இப்பொழுது 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது. இதனால் தரமான விஞ்ஞான நூல்கள் தமிழில் தோன்றித் தமிழில் விஞ்ஞான இலக்கியம் சிறப்புடன் விளங்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

—: :—

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின்
அருளாசியுடன்
எப்பொழுதும்
நன்மையும் நல்லறிவும் பக்தியும்
தரவல்ல இதிகாச நூல், தமிழில்
முதன் முறையாக வெளிவருகிறது
துளசி
இராமாயணம்
ஏழு காண்டங்களும் அடங்கிய முழு நூல்.
அழகிய தமிழ் உரை நடையில் சுவையாகச்
சுருக்கி எழுதியவர்: தமிழ், ஆங்கில, இந்திப், பேராசிரியர்:
தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார் M.A.B.O.L. விலை ரூ 7·50
தபாலில் பெற ரூ 8·50 M.O. செய்க
வசந்தா
வானதி பதிப்பகம்
82/11. பாண்டி பசார் • சென்னை-17.

# சங்கத் தோற்றமும் வளர்ச்சியும்

மா. சு. சம்பந்தன்
(பொதுச் செயலாளர்)

தென்னிந்தியப் பத்திரிகையாளர்களுக்கென ஓர் அமைப்பும், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கென ஒரு சங்கமும் ஏற்பட்டுச் செயற்பட்டு வருவதைக் கண்ட தமிழ் எழுத்தாளர்கள், தங்களுக்கெனத் தனிச்சங்கம் காண வேண்டியது இன்றியமையாதது என உணர்ந்தனர். ஆனால், அதனை உருவாக்குவது தொடக்கத்தில் அவ்வளவு எளிதானதாகத் தோன்றவில்லை. பல்வேறு கொள்கைகளைக் கொண்டவர்களையும், தனித் தனிப் போக்குகளைக் கொண்டவர்களையும் ஒன்றாகக் கூட்டி ஓர் அமைப்பின் கீழ்க் கொண்டுவருவது மிகவும் கடினமான செயலாகத்தான் இருந்தது.

என்றாலும், புதுமையான படைப்புகளைத் தமிழில் படைத்துத்தருபவர்களுக்கென ஒரு சங்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கருத்து திருவாளர்கள் பரலி சு. நெல்லையப்பர், ரா. நாராயண ஐயங்கார், நாரண துரைக்கண்ணன் போன்றவர்களின் உள்ளத்தில் உருவாகிக் கொண்டேயிருந்தது, பல ஆண்டுகளாக! ஆனால், அது கருக்கொண்டு அரும்பி, மொக்காகிப் போதாகி மலரத் தொடங்கியது 1944ம் ஆண்டுக்குப் பிறகுதான்—அதையும் துல்லியமாகக் கூற வேண்டுமானால், 1944ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கோவையில் கே. நீ. அண்ணாமலை, வெ. ரங்கசாமி ஆகியோரின் பெருமுயற்சியால் கோபால் பாக் மாளிகையில் கூட்டப்பட்ட முதல் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கும் பிறகுதான்! அம்மாநாட்டிற்குத் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் தலைவராயும், வ. ரா அவர்கள் திறப்பாளராயும் இருந்து, தமிழ்நாட்டின் பல பகுதியிலிருந்து வந்திருந்த தமிழ் எழுத்தாளர்களைக் கலந்து உரையாடினர். இம்மாநாட்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், அதன் தலைமைச் செயலகம் சென்னைநகரில் இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்பின், 1945ல் சென்னை மாநகரில் இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு திரு. பெ. தூரன் அவர்கள் தலைமையில் ஒற்றைவாடைக் கொட்டகையில் நடைபெற்றது. முதல் மாநாட்டின் தீர்மானங்கள் இங்கு மேலும் வலியுறுத்தப்பட்டன. திரு. ரா. நாராயண ஐயங்கார் வரவேற்புக்குழுத் தலைவராயும், திரு. நாரண துரைக்கண்ணன் செயலாளராயும் இருந்து மாநாட்டைத் திறம்பட நடத்தினர். இம்மாநாட்டில் திருவாளர்கள் பி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், ப. ஜீவானந்தம், சி என். அண்ணாதுரை, ம. பொ. சிவஞானம் போன்ற பல்வேறு அரசியற் கட்சியைச் சேர்ந்த எழுத்தாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தமிழ்மொழியைப்பயிற்சிமொழியாக ஆக்க வேண்டும் என்றும், மொழிவழி மாநிலம் ஏற்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு திரு. நாரண துரைக்கண்ணன் தலைமையில் நாகர்கோயிலில் நடைபெற்றது; கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வரவேற்புரையாற்றினார்; திரு. ரா. பி. சேதுப்பிள்ளை மாநாட்டைத் தொடங்கி வைத்தார். பெ. தூரன், கி. வா. ஜ, ம. பொ. சி. சா. கணேசன், டி. கே. சண்முகம், அகிலன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினர்; எழுத்தாளர் நலனுக்கென நல்ல பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம் மூன்று மாநாடுகளின் பின் விளைவாக 1948-49 வரை திரு. நாரண துரைக்கண்ணன் தலைமையில் 'தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்ற பொது அமைப்பு இயங்கத் தொடங்கியது. மேலும் 1950ம் ஆண்டில் ரா. நாராயணனும் பி. கோதண்டராமனும் முன்னின்று திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியைத் தலைவராகக் கொண்டு சென்னைத் தமிழ்எழுத்தாளர் சங்கம் என்ற கிளையமைப்பு இயங்கச் செய்தனர். இதற்கான சட்ட திட்டங்களை வகுக்கத் திருவாளர்கள். ஏ. ஜி. வேங்கடாச்சாரி, நாரண துரைக்கண்ணன், கி. சந்திரசேகரன் ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. 16-12-1950ல் இச் சங்கம் சென்னை மகாஜன சபைக் கூடத்தில் கூடி இம் முடிவை எடுத்தது.

அடுத்து 17-2-1951ல் திருவல்லிக்கேணித் தேசியப் பெண்கள் பள்ளியில் இச்சங்கச் செயற்குழு கூடி, சில திருத்தங்களுடன் குழு அமைத்துக் கொடுத்த விதிமுறைகளை ஏற்றும், அன்றே கூட்டப்பட்ட பேரவையில் மற்றும் பல திருத்தங்களைச் சேர்த்தும் சங்க அமைப்பு விதிகளை நிறைவேற்றியது.

10-3-1951ல் சென்னை மகாஜன சபையில் கூடிய பொது அவையில் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி புதிய விதிமுறைகளின்படி அமைக்கப்பட்ட சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச் சங்கம் 7-5-1952ல் முறைப்படி பதிவுசெய்யப் பட்டு இன்றுவரை நன்றாக இயங்கிவருகிறது.

இதன் முதல் மாநாட்டைத் தமிழ்ப்பெரியார் திரு வி. கலியாண சுந்தரனார் 1953ல் துவக்கி வைத்தார். 14-5-1951லே திரு. வி. க. தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகளைப் பாராட்டி இச்சங்கம் அவரைக் கௌரவ உறுப் பினராக ஏற்றுச் சிறப்பித்திருக்கிறது.

திரு. வி. க. விடம் பத்திரிகைத் துறையில் பயிற்சிபெற்ற திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள், 1951-54 வரை இச்சங்கத்தின் தலைவ ராக இருந்து, இதனை நிலைத்து நின்று பணி யாற்றக்கூடிய அளவிற்கு வலிவும் பொலிவும் தந்து தெம்பூட்டினார். இச்சங்கத்திற்காக இவர் கொடுத்த சிறு முதலீட்டை வைத்தே சங்கம் செயற்படத் தொடங்கியது. இவர் சிதறிக் கிடந்த எழுத்தாளர்களைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குள் கொண்டுவரப் பெரும்பாடு பட்டார். சங்கத்திற்கு உரமிட்டு வளர்த்த பெருமை இவரையே முதலில் சேரும்.

இவருடன் மிகவும் ஒத்துழைத்துப் பணி யாற்றிய திரு. பி. கோதண்டராமன் அவர்கள் சுமார் ஐந்தாண்டுக்காலம் செயலாளராக இருந் தார். இவர் காலத்தில் உறுப்பினராகச் சேர விரும்புபவரிடம் உருவப்படத்தையும், அவர் தம் மற்றத் தகவல்களையும் ஒருசேர வாங்கி வைத்துக்கொள்ளும் முறை அமுலுக்கு வந்தது. இவருக்கு உதவியாகக் திரு. தொ. மு. சிதம்பர ரகுநாதன் 1951-52 லும், திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம் 1953-54 லும், திரு. எம் அப்துல் வஹ்ஹாப் 1954லும் முறையே துணைச்செயலாள ராக இருந்திருக்கிறார்கள். திரு. டி.கே சண்முகம் அவர்கள் பொருளாளராக 1951 முதல் 1956 வரை இருந்துள்ளார்.

சங்கத்திற்கென ஒரு காரியாலயமும், ஒரு புத்தகாலயமும், கூட்டங்களுக்கென ஒரு மன்ற மும் இன்றியமையாது வேண்டுவன என்று இவர் கள் அனைவரும் உணர்ந்து பாடுபட்டனர்,

தகுதிவாய்ந்த நூல்களில் 10,000 படிகள் வாங்கி வழங்கும்படி அரசாங்கத்திற்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தீர்மானம் செய்து அக்காலத் தில் அனுப்பியுள்ளது; மேலும், சுமார் 300 நூல் களின் பட்டியலைத் தொகுத்து 2-8-1951ல் அரசாங்கத்திற்கு அனுப்பியது. 'தமிழ்நாடு புத்தகாலய மாநாடு' நடத்தவும் சங்கத்தலைவர் முன்னின்றார்.

சங்கச் செயலகம் முதலில் 'சுதேசமித்திரன்'

FOR
QUALITY
PRINTING
AND
BLOCK-MAKING

Contact :

**Commercial Printing & Publishing House**

46, Armenian Street,
MADRAS-1.

★

Phone : 22137 Grams : PRINTHOUSE

P. B. No. 1569

அலுவலகத்திலும், சங்கக் கூட்டங்கள் காலஞ் சென்ற வை. கோவிந்தன் அவர்களால் நிறுவப் பெற்ற 'சக்தி காரியாலய'த்திலும் நடத்தப் பெற்றன. சங்கம் தொடங்கியபோது சங்கத் தலைவர் ரூ. 9 முன்பணமாகக் கொடுத்துதவினர். திரு. வி என். குமாரசாமி ரூ. 100 நன்கொடையாக வழங்கினர். 'குமுதம்' ஆசிரியர் எஸ். ஏ பி. அண்ணாமலை அவர்கள் அவ்வப்பொழுது நடைபெறும் செலவுகளுக்கு ஈடுகொடுத்து வந்தார். இப்படியாகத் தொடக்கத்தில் சங்கம் மெல்ல மெல்ல முன்னேறி வந்தது!

சங்கம் முறைப்படி பதிவு செய்யப்பெற்ற பின்னர்தான் சங்கத்திற்குப் பெருமைகிட்டியது. 'பிரஸ் கமிஷன்' பொதுவிஷயங்களில் சங்க ஆலோசனைகளைக் கேட்கத் தொடங்கியது. சங்கச் சார்பில் திருவாளர்கள் ச. பாஷ்யம், பி. கோதண்டராமன், திருமதி குகப்பிரியை ஆகியோர் 'பிரஸ் கமிஷன்' முன் சாட்சியம் கூறியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அடுத்து, சங்க அலுவகம் 1952ல் ரூ. 30 ஆண்டு நன்கொடையாகக் கொடுத்து இந்திய ஊழியர் சங்கக் கட்டிடத்திலும், அதன்பிறகு 1953ல் தென்னிந்தியப் பத்திரிகையாளர் ஃபெடரேஷன் கிளப்பிலும், 1954ல் மாத வாடகை ரூ. 25 கொடுத்து, இளம்பிறைச் சங்கக் கட்டிடத்திலும் முறையே நடந்து வந்திருக்கிறது.

1953ம் ஆண்டு முற்பகுதியில் திரு. கி. சந்திரசேகரன் அவர்கள் சங்கத் தலைவரானார். இவர் காலத்தில்தான் ''எழுத்தாளர் நல நிதி'' என்ற ஒன்று தொடங்கிச் சுமார் ரூ. 1500 வரை திரட்டப்பட்டுள்ளது. தலைவருக்கும் செயலாளருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகச் செயலாளர் விலகினர். ஆனால், அவர் மீண்டும் 8-12-1953ல் மறுபடியும் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு திரு. கி. சந்திரசேகரன் அவர்கள் தம் பதவியிலிருந்து திடீரென்று விலகிக் கொள்ளவே, 1953 செப்டம்பர் முதல் திரு. கல்கி அவர்களே மீண்டும் தலைவராகப் பொறுப்பேற்றுத் தம் இறுதிக் காலம்வரை திறம்படச் சங்கத்தை நடத்தி வந்தார்.

சங்க வேலைகள் அதிகரிக்கத் தொடங்கவே, பொதுச் செயலாளர்க்கு உதவியாக, 1954-ம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதி கூடிய பேரவையில், சங்க அமைப்பு விதிகளின் 18-வது பிரிவில் ஒரு துணைச் செயலாளர் என்றிருந்ததை இரண்டு, துணைச் செயவாளர்கள் எனத் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாண்டு முதல்தான் இரண்டு துணைச் செயலாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் உண்டாயிற்று!

**இரண்டாவது தமிழ் எழுத்தாளர் சங்க மாநாடு**

1954-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள் தலைமையில் செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் முதல் நாள் நிகழ்ச்சியும், சென்னை மகாஜன சபைக் கூடத்தில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியும் நடைபெற்றன. சென்னை மாநில முதலமைச்சராக இருந்த திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மாநாட்டைத்துவக்கி வைத்துப்பேசினர். திரு.ச பாஷ்யம் (சாண்டில்யன்) வரவேற்புரையாற்றினர். திருவாளர்கள். ரா. பி. சேதுப்பிள்ளை, வெ. சாமிநாத சர்மா ஆகிய இருவர்க்கும், அவர்கள் செய்த தமிழிலக்கியச் சேவைக்காகச் சங்கம் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தது. இக்காரியம் 1954 முதல் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் ''பாரதி தமிழ் என்ற நூலை வெளியிட்ட திரு. பெரிய சாமித் தூரன் அவர்களுக்கும், ''பாரதி கண் காட்சியைச் சிறப்புற நடத்தின திரு.ரா.அ. பத்மநாபன் அவர்களுக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், சங்கச் சார்பில் ''பாரதி'' மாத இருமுறை இதழை 'சுதேசமித்திரன்' ஆசிரியராயிருந்த திரு. சி. ஆர். சீனிவாசன் துவக்கி வைத்தார். இதன் முதல் ஆசிரியராகத் திரு. வெ. சாமிநாத சர்மா இருந்தார். திரு. பி. என். ரெட்டி எழுத்தாளர்களுக்கு 'காஸினோ' தியேட்டரில் விருந்தளித்து, 'சந்திரஹாரம்' என்னும் படக்காட்சி ஏற்பாடு செய்து பெருமைப் படுத்தினர்.

இம்மாநாட்டில் திருவாளர்கள் ந சிதம்பர சுப்பிரமணியன் 'சிறுகதை இலக்கிய வளர்ச்சி' பற்றியும், அகிலன் 'தமிழ் நாவல் இலக்கியம்' குறித்தும், நீ. ரா. சீனிவாசன் 'தமிழும் விஞ்ஞானமும்' எனும் பொருள் பற்றியும் முறையே கட்டுரைகள் படித்தனர்.

1955ம் ஆண்டிற்கு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில் பொதுச் செயலாளராக திரு. க. சோமசுந்தரமும், துணைச் செயலாளர்களாகத் திரு. எம். அப்துல்வஹ்ஹாப்பும், திரு. அ வைத்தியநாதனும் பொருளாளராகத் திரு. டி கே. சண்முகமும் பணியாற்றினர்.

இக்காலத்தில் முக்கிய மாற்றம் ஒன்று ஏற்பட்டது. 'சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்ற பெயரில் 1951-ல் பதிவு செய்யப் பெற்றது. சென்னை நகரில் மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும், இந்தியாவின் பிற பகுதிகளிலும்,

இலங்கை, தென்னுப்பிரிக்கா, பினங் (மலேயா) போன்ற இடங்களிலும் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு உறுப்பினர்கள் இருப்பதால், இதனை மத்திய சங்கமாக அமைக்கவேண்டும் என்று கருதி, 25-1-55-ல் கூடிய பேரவையில் 'சென்னை' என்ற அடைமொழி நீக்கப்பட்டுத் 'தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்றிருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. அன்று முதல் இப்பெயரிலேயே சங்கம் அழைக்கப்பட்டு வருகிறது.

புதிய தலைவர் மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள எழுத்தாளர் சங்கங்களில் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடினர்; இலங்கையில் புதிதாக எழுத்தாளர் சங்கம் அமையவும் துணை புரிந்தார்.

சங்க மூன்ருவது மாநாடு, இவர் தலைமையில் 1955-ம் ஆண்டு பிப்ரவரி 12, 13 தேதிகளில் சென்னை ஆளுநர் (கவர்னர்) ஸ்ரீ. பிரகாசா அவர்களால், மயிலை, ரஸிக ரஞ்சனி சபை மண்டபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. முன்னுள் சங்கத் தலைவர் திரு. கல்கி அவர்களின் படத்தைத் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் திறந்து வைத்தார். முதுபெரும் புலவர்களான பேராசிரியர் மு. இராகவய்யங்கார், எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகியோர் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். இம்மாநாட்டின் வரவேற்புத் தலைவராகக் 'குமுதம்' ஆசிரியர். திரு. எஸ். ஏ பி. அண்ணுமலை அவர்கள் இருந்து வரவேற்புரையாற்றினுர்.

இம்மாநாட்டில் புத்தகத்தின் மீது விற்பனை வரி விதிக்கலாகாது என்றும், ரயில்வே சலுகை எழுத்தாளர்களுக்கு அளிக்கவேண்டும் என்றும், அகில இந்திய வானெலி நிலையம், சாகித்திய அக்காதெமி, சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களின் மூப்பரவை (செனெட்), சினிமா தணிக்கைக் குழு ஆகியவற்றில் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குப் பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்றும் கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது இங்குக் குறிக்கத் தகுந்தவையாகும்.

13-2-55-ல் சங்கத் துணைத் தலைவராயிருந்த திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி அவர்கள் "தமிழை அரசாங்க மொழியாக்குவதற்கு ஒரு திட்டம்" குறித்துக் கருத்தரங்கு ஒன்றை துவக்கி வைத்தார். இதன் மீது சூடான விவாதம் நடைபெற்றது. இக்கருத்தரங்கே, அன்றைய சென்னைக் கல்வியமைச்சர் கூட்டிய 'மொழி மாநாட்டிற்கு' முன்னேடியாக விளங்கியது.

சென்னை ஆளுநரான ஸ்ரீ பிரகாசா அவர்கள் சங்க மாநாட்டைத் துவக்கி வைத்ததோடு,

WITH BEST COMPLIMENTS FROM:

**VIKAS INDUSTRIES**

ELECTROPLATERS

C-23, Industrial Estate

GUINDY :: MADRAS-32.

Phone: 801663

எழுத்தாளர் நல நிதிக்காக ரூ. 500/- நன்கொடையும் அளித்துள்ளார்.

திரு. ம. பொ. சி. யை அடுத்து 1956-ம் ஆண்டிற்கு 'ஆனந்தவிகடன்' ஆர். மகாதேவன் (தேவன்) தலைவர் தேர்தலில் திரு. எஸ். பாஷ்யத்துடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்: இவர் காலத்தில் அமைதியாகவும் உருப்படியாகவும் எழுத்தாளர் சங்கம் பணியாற்றி வந்தது. இவர் அடுத்த ஆண்டிற்கும் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடன், பொதுச் செயலாளராகத் திரு. அழ. வள்ளியப்பாவும், துணைச் செயலாளர்களாக திரு. கண. முத்தையா. எச். வைத்தியநாதனும் பொருளாளராகத் திரு. டி. கே சண்முகமும், இருந்துள்ளார்கள். இவர் காலத்தில் எழுத்தாளர் ஊதியம் உயரவேண்டும் என்று தம் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்திப் பெருமுயற்சி புரிந்து வெற்றி பெற்றார்; எழுத்தாளர் சன்மானத் தொகை முன்னைவிட உயர்ந்தது.

சென்னையில் கூடிய 'அகில இந்திய வங்க இலக்கிய மாநாட்டின்' தலைவரான திரு. தேபேஷ் தாஸுக்கும் பிரதிநிதிகளுக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், திரு. தேவன் 'உட்லண்ட்ஸ் ஒட்டலில்' ஓர் அரிய விருந்தளித்தார். இலங்கையில் சுற்றுப் பயணஞ் செய்து திரும்பிய கலைஞர் டி கே. சண்முகத்திற்கும், அமெரிக்காவில் சுற்றுப் பயணஞ் செய்து திரும்பிய திரு. ரா அ பத்மநாபனுக்கும், ஆசிய எழுத்தாளர் மாநாட்டில் தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகளின் தலைவராகச் சென்று வந்த பேராசிரியர் அ. சீனிவாசராகவனுக்கும் வரவேற்பு தரப்பட்டது.

ஆர். மகாதேவன் தலைமையில் 7, 8-4-56-ல் மயிலை ரஸிக ரஞ்சனி சபையில் மாநாட்டின் வரவேற்புத் தலைவியாகத் திருமதி. சீதாலட்சுமி குமாரசாமி அவர்கள் இருந்து திறம்படச் செயலாற்றினார். இவர்தான் வரவேற்புத் தலைவியான முதல் பெண்மணி. இம்மாநாட்டைச் சென்னை நிதியமைச்சராயிருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். முதுபெரும் புலவர்களான திரு. வை. மு. கிருஷ்ணமாச்சாரியார்க்கும், திரு. டி. வி. சதாசிவ பண்டாரந்தாருக்கும் சங்கச் சார்பில் கேடயங்கள் வழங்கப்பட்டன. பாராட்டப்பெற்ற பேராசிரியர்கள் இயற்றிய நூல்களை யானைமீது வைத்து, அலங்கரித்த வண்டியில் அப்பெருமக்களை அமர்த்தி மேள தாளத்துடன் ஊர்வலமாக அழைத்துவந்து சிறப்பித்தது நினைந்து பாராட்டத் தக்கதாகும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி இராஜாஜி மண்டபத்தில் நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் முன்னிலையிலும், திரு. வி. சி. கோபால ரத்தினம் தலைமையிலும் 'நாடக வளர்ச்சி எந்த வகையில் தேவை' என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது. 1955-ல் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளில் மூன்றும், கட்டுரைகளில் மூன்றும் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, எழுதியவர்களுக்கு நீதிபதி ஏ. எஸ் பி ஐயரால் பரிசுகள் வழங்கப்பட்டன. 1955-ல் வெளியான புத்தகங்களின் கண்காட்சியும் வைக்கப்பட்டது. ருஷ்ய எழுத்தாளர்கள் இம்மாநாட்டிற்கு வந்து சிறப்பித்தனர்.

தமிழை விரைவில் ஆட்சி மொழியாக்க வேண்டும். என்றும், சென்னை இராச்சியத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்றும், பதிவு நூல் அஞ்சற் கட்டண உயர்வைக் குறைக்கவேண்டும் என்றும், கிளை நூலகங்களில் தமிழ் எழுத்தாளர்களுக்கும் பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. எழுத்தாளர்களின் புகைப்படச் சேகரிப்பும், உறுப்பினர் பட்டியல் அச்சடிப்பும், புத்தகக் கண்காட்சி முதலியனவும் இவ்வாண்டின் முக்கிய அம்சங்களாகும்.

திரு. தேவன் அவர்கள் எதிர்பாரா வகையில் இயற்கை எய்தவே, காலியான இடத்திற்குத் திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் (தினமணி) இடைக்காலத் தலைவராகித் திறம்படப் பணியாற்றினார். சங்கத்தின் சட்டதிட்டங்களைச் சீராக வகுத்துக் கொடுத்த பெருமை இவருக்குண்டு.

1957-ம் ஆண்டு ஜூன் 22, 23-ம் நாள்களில் இராஜாஜி மண்டபத்தில் திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் அவர்கள் தலைமையில் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. திரு. சிதம்பர சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திரு. எஸ் வரதாச்சாரியார் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்களுக்கும் இலக்கியப் பேராசிரியர் ச சோமசுந்தர பாரதியார் அவர்களுக்கும் சங்கம் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தது.

தமிழ் இலக்கியச் செல்வங்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்துத் தரும் அறிஞர்களுக்குப் பதக்கங்கள் அளிப்பதென்ற புதிய வழக்கம் இக்காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. இதன்படி, திரு. நாராயண நாயர் (மலையாளம்), திரு. பூ. ஸ்ரீராமுலு ரெட்டி (தெலுங்கு) ஆகியோருக்குப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. இந்த ஆண்டில், 1956-ல் வெளிவந்த புத்தகக் கண்காட்சி ஒன்று வைக்கப்பட்டது; பாரதி ஜூன் மாத இதழ் சிறப்பிதழாகக் கொண்டுவரப்பட்டது.

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றபோது, திரு. ஏ. ஜி. வி. தலைமையில் 14 தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்

பினர்கள் அங்கு கலந்துகொண்டனர். தலைவர், சென்னையில் அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டை நடத்த வேண்டும் என்று அன் பழைப்பு விடுத்து வந்தார். 1957 முதல் ''பாரதி'' சிறப்பிதழ் மாநாட்டு மலராக வெளி யிடப்பட்டு வருகிறது.

1958-ம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங் கத் தலைவராகத் திரு. வெ. சாமிநாத சர்மா போட்டியின்றித்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் திரு. வி. க.விடம் பற்றும் பயிற்சியும் உடைய வர். அரசியல் நூல்களை 60-க்கு மேல் இயற்றி யவர். இவருக்குத் துணையாகத் திரு. கொடு முடி இராஜகோபாலன் பொதுச் செயலாளராக வும், துணைச் செயலாளர்களாகத் திரு. விஜய பாஸ்கரனும் திரு. சி. சு. செல்லப்பாவும். பொருளாளராகத் திரு. ந. சிதம்பர சுப்பிரமணி யனும் வந்தார்கள்.

1958-ம் ஆண்டு மே 31, ஜூன் 1-ஆகிய தேதிகளில் சங்க ஆறுவது மாநாடு திரு. வெ. சாமிநாத சர்மா அவர்கள் தலைமையில் சென் னைக்கு வெளியே நாகர்கோவிலில் நடைபெற் றது. 'தினமலர்' ஆசிரியர் திரு. டி வி இராம சுப்பையர் வரவேற்புரையாற்றினர். மத்திய விஞ்ஞான ஆராய்ச்சி, கலைத்துறை அமைச்ச ரான திரு. ஹுமாயூன் கபீர் இம்மாநாட்டைத் திறந்து வைத்தார். கோவை சிவக் கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாரும், பேராசிரியர் பி. எஸ். இராமானுஜாச்சாரியாருக்கும் கேடயங் கள் வழங்கப்பட்டன. திரு ந சஞ்சீவி கேட யங்கள் பெற்றவரைப் பாராட்டினர். இரண் டாவது நாள் 'தமிழ் நாவல் விவாத அரங்கு' நடைபெற்றது. திரு. கு. அழகிரிசாமி தலைமை யில் பலர் பங்கு கொண்டனர். திரு. குண்டப்பா (கன்னடம்), திரு. எஸ் சங்கராஜு நாயுடு (இந்தி) ஆகியோர்க்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கு நாகர்கோவில் நகரமன்றம் வரவேற்பு அளித்துப் பெருமைப்படுத்தியது தமிழ் எழுத்தாளர் களெல்லாம் இறும்பூதெய்தத்தக்க ஒன்றாகும்.

1959-ம் ஆண்டின் தலைவராகத் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் திரு. க. நா. சுப்பிரமணி யத்துடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பொதுச்செயலாளராகத் திரு. அழ. வள்ளியப்பா வும், துணைச் செயலாளராகத் திரு. டி எஸ். கிருஷ்ணமூர்த்தியும், கோமதி சுவாமிநாதனும், பொருளாளராகத் திரு. ந. சிதம்பர சுப்பிரமணி யனும் இருந்தனர். ஏழாவது மாநாடு 1959-ஆகஸ்டு 1, 2 நாள்களில் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. திரு. டி. எஸ். சொக்கலிங்கத் திற்கும், திரு. பி ஸ்ரீ. ஆசார்யாவிற்கும் கேடயங்


# சங்க இலக்கியம்

( முழுதும் விலை ரூ 12-00 )

பத்துப்பாட்டுகளாகிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவும்; எட்டுத்தொகை எனப் படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவும் அடங்கிய பெரிய தொகை நூலே சங்க இலக்கியம் ஆகும்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தலைமையில் அறிஞர் கழகம் ஒன்று, பல ஆண்டுகள் ஆய்ந்து சங்க நூற்பாக்கள் அனைத்தையும் ஆசிரியர் அடைவில் அமைத்து சைவ சித்தாந்த சமாஜத்தாரால் பதிப்பிக்கப்பெற்ற அரிய நூலின் இரண்டாம் பதிப்பு.

சங்கப் புலவர் ஒவ்வொருவரும் பாடிய பாடல்களையெல்லாம் ஒருசேரப் படித்து மகிழும் வாய்ப்பை அளிக்கின்றது இச்சங்க இலக்கியப் பதிப்பு.

1600 பக்கங்கள், இரண்டு பாகங்கள், உயர்ந்த பைண்டு. தற்பொழுதுள்ள விலையில் சுமார் 30 ரூபா மதிப்புள்ளது.

இந்நூல் ஒன்று உங்களிடம் இருக்குமாயின் சங்க நூல் முழுதும் உங்கள் நூல் நிலையத்தில் இடம் பெற்றது போலாகும். இச்சங்கக் கருவூலத்தை எங்கும் உடன்கொண்டு செல்லவும் வசதி உண்டு.

## பாரி நிலையம்

59, பிராட்வே ; : சென்னை-1

கள் வழங்கப்பட்டன. திரு. சுனித்குமார் சட்டர்ஜி (வங்காளம்), டாக்டர் ஜீன் ஃபீலியோசா வுக்குப் (ஃபிரஞ்சு) பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. திரு. கு. அழகிரிசாமி, திரு. க நா. சுப்பிரமணியம் திரு. எஸ் கோவிந்தராஜுலு ஆகியோர் கேடயங்கள் பெற்றவரையும், பதக்கங்கள் பெற்றவரையும் பாராட்டிப் பேசினர். 'தமிழில் உரை நடை' என்ற விவாதம் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் தலைமையில் மிகவும் காரசாரமாக நடைபெற்றது. வாழ்க்கைச் சித்திரக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு பரிசு அளிக்கப்பட்டது.

*1960*-ம் ஆண்டின் தலைவராகப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் க. நா. சு. அவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் காலத்தில் பொதுச்செயலாளராக ஊ. ஜயராமனும், துணைச்செயலாளராக திரு. நாக. முத்தையாவும், திரு. சி.ரா. பழனியாண்டியும், பொருளாளராகத் திரு. அழ. வள்ளியப்பாவும் வந்தனர்.

எட்டாவது மாநாடு 5, *6-10-1960*-ல் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. திருவாளர்கள் ப. கோதண்டபாணி பிள்ளை அவர்களுக்கும், தெ பொ மீனாட்சிசுந்தரனார் அவர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. இராஜா சர். முத்தைய செட்டியார் அவர்கள் கேடயங்கள் வழங்கினார். தலைமை நீதிபதி திரு. இராஜமன்னார் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். ''இருபதாம் நூற்றாண்டில் தமிழ்வளர்ச்சி'' என்ற கருத்தரங்கு திரு. அகிலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கேடயம் பெற்றோரையும் பதக்கம் பெற்றோரான சல்லா இராதாகிருஷ்ணசர்மா (தெலுங்கு), வெண்ணிகுளம் கோபால குறுப்பையும் (மலையாளம்) திருவாளர்கள் கி வா ஜகந்நாதன், டி. கே சண்முகம், நாரண துரைக்கண்ணன் ஆகியோர் பாராட்டிப் பேசியினர். சென்னைச் சட்டமன்றத் தலைவரான திரு. யூ. கிருஷ்ண ராவ் அவர்கள் பதக்கமளித்துப் பாராட்டினர்.

இந்த ஆண்டில் வங்க எழுத்தாளர்களுக்கு *27-11-60*ல் சங்கக் கட்டிடத்தில் ஓர் வரவேற்புத் தரப்பட்டது குறிப்பிடத் தக்கது.

*1961*-ம் ஆண்டுத் தலைவராகப் புலவர் அன்பு கணபதி அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவாளர்கள் மா இளஞ்செழியன் பொதுச்செயலாளராகவும், நா. ஜகந்நாதன், அ செ செல்லப்பன் துணைச் செயலாளராகவும், கே பி. சுந்தரம் பொருளாளராகவும் இருந்தனர்.

*30-12-1961*ல் சங்கத்தின் ஒன்பதாவது மாநாடு, திரு. அன்பு கணபதி அவர்கள் தலைமையில், தியாகராயநகரிலுள்ள வாணி மகாலில் நடைபெற்றது. இம்மாநாட்டைத் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தொடங்கி வைத்தார். ''முரசொலி'' மாறன் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார்.

தமிழ் இலக்கியத்துக்கு மேதக்க தொண்டு புரிந்த திரு. மயிலை சீனி வேங்கடசாமி திரு. பரலி. சு. நெல்லையப்பர் ஆகிய இரண்டு அறிஞர்களுக்குக் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. தமிழ் இலக்கியத்தைச் சீரிய முறையில் மேநாடுகளில் அறிமுகப்படுத்தி வரும் செக்கோசுலோவாக்கிய வித்தகர் டாக்டர் கமில் சுவலபிலுக்குப் பதக்கம் வழங்கப்பட்டது. கேடயங்களையும் பதக்கத்தையும் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் அறிஞர்களுக்கு வழங்கி உரையாற்றினார். முதுபுலவர் மயிலை சிவமுத்து அவர்களும், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களும் விருந்தினரைப் போற்றிப் பேசினர். அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் 'தமிழ் எழுத்துக்கலை' எனும் பொருள் குறித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். ''சென்ற பத்தாண்டுகளில் தமிழ் வளர்ச்சி'' எனும் பொருள் பற்றித் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில் பலர் பேசினர்.

பாரதி மலர் பல அரிய கட்டுரைகள், கவிதைகளுடன் கொண்டு வரப்பட்டது.

*1962*-ம் ஆண்டு மீண்டும் திரு. அன்பு கணபதி அவர்களே தலைவராக இருந்தார். இக்காலத்தில் பொதுச் செயலாளராகத் திரு. பா. பாலசுப்பிரமணியமும் துணைச் செயலாளர்களாகத் திரு. இளம்பாரியும் நா. ஜகந்நாதனும் பொருளாளராகத் திரு. ஊ. ஜயராமனும் இருந்தனர்.

சங்கப் பத்தாவது மாநாடு திரு. அன்பு கணபதி தலைமையில் மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது. திரு. கே. ஜி. இராதாமணாளன் வரவேற்புரையாற்றினர். உயர்திரு. இராஜாஜி அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. டாக்டர் பா. நடராஜன், ஏ. ஜி. வேங்கடாச்சாரி ஆகியோர் பாராட்டினர். ரா. வீழிநாதன் (இந்தி), அவர்களுக்கும், எஸ் கே நாயர் (மலையாளம்) அவர்களுக்கும் பிறமொழித் தமிழ்த் தொண்டுக்காகப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இசை நிகழ்ச்சியும் இருந்தது.

*1963*ம் ஆண்டின் தலைவராகத் திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார் இவருடன் திருவாளர்கள் பா. பாலசுப்பிரமணியன் பொதுச் செயலாளராகவும், அ செ. செல்லப்பன், சி திருநாவுக்கரசு துணைச் செயலாளராகவும், ஊ. ஜயராமன் பொருளாளராகவும் இருந்து பணியாற்றினர்.

சங்கத்தின் பதினோராவது மாநாடு *1963* டிசம்பர் *21, 22*ம் நாள்களில் சென்னை மெமோரியல் மண்டபத்தில் திரு. சீனி. வேங்கடசாமி

கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டைத் தமிழகத்தின் முதலமைச்சராயிருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கிவைத்தார். வரவேற்புக்குழுத் தலைவராக டாக்டர் சு.சங்கரராசு அவர்கள் இருந்தார். தமிழிசைப் பாடல்களை இயற்றிய பாபநாசம் சிவன் அவர்களுக்கும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை வளம்பெறச் செய்த பா. தாவுத்ஷா அவர்களுக்கும் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. திருவாசகத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், திருவாய்மொழியையும் திருப்பாவையையும் கன்னடத்தில் மொழிபெயர்த்த கவிஞர் பு. தி நரசிம்மாச்சார் அவர்களுக்கும் பதக்கங்கள் தந்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. திரு. சா கணேசன் விருந்தினர்க்குக் கேடயங்கள், பதக்கங்கள் வழங்கிப் புகழ்ந்துரைத்தார். திருவாளர்கள் கொத்தமங்கலம் சுப்பு. தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான், அப்துல் சமது, பீர் முகம்மது பி. ஜி. எல். சாமி ஆகியோர் விருந்தினரைப் போற்றிப் பேசினர். திருமதி நீலா ராமமூர்த்தி குழுவினரின் இசையரங்கும் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை காலை பன்மொழிப் புலவர் தெ பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தலைமையில் "தமிழில் பிறமொழி இலக்கியங்கள்" என்ற பொருள் குறித்து ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கைத் தென்னகப் புத்தகப் பொறுப்பகப் பொதுமேலாளர், வி. சுந்தரராஜு நாயுடு அவர்கள் துவக்கிவைத்தார். சமஸ்கிருதம் உருது, வங்கம், இந்தி, தெலுங்கு, மலையாளம், ஃபிரஞ்சு, ஆங்கிலம், இரஷ்யன்—ஆகிய 9 மொழிகளில் பழக்கமுள்ள அறிஞர்கள் இதுவரை தமிழில் இவ்வொன்பது மொழிகளிலிருந்தும் பெயர்க்கப்பட்ட இலக்கியங்களைத் திறனாய்வு செய்தனர். 'கவிஞர் பற்றிக் கவிஞர்' என்ற கவியரங்கமும் நடைபெற்றது. மாலை 'தமிழ் அன்றும் இன்றும்' என்றபொருளில்சங்ககாலம்,


ஈ.ஐ.டி.-பாரி உர விநியோகஸ்தரே விவசாயியாகவும் இருக்கிறார் அநேக இடங்களில். எனவே ஈ.ஐ.டி.-பாரி உரங்கள், பூச்சி நாசினிகளின் பெரும் பயன்களை அவர் நன்கறிந்திருக்கிறார். ஈ.ஐ.டி. நிறுவனத்தின் நிபுணத்துவம் மிக்க ஆலோசகப் பணிப் பிரிவின் துணையுடன் கூடிய அந்த உர, பூச்சி நாசினி விற்பனை வெறும் வர்த்தகப் பேர்த்துடன் நிற்பதல்ல என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

அவருடைய கடை வழக்கமான விற்பனை நிலையம் மட்டுமல்ல; விவசாயச் சிநேகிதர்களின் சந்திப்புக் கேந்திரமுமாகும் அது. பயிர்ச் செலவுப் பிரச்னைகள் அனைத்தையும் பொறுத்து அவரிடமிருந்தும், அந்த வட்டார ஈ.ஐ.டி.-பாரி உர விற்பனையாளரிடமிருந்தும் ஆலோசனை பெறவே அங்கு அவர்கள் வருகிறார்கள்.

அதிக உணவு கிடைக்கச் செய்யும் பொருட்டு விளைச்சலைப் பெருக்க விவசாயிகளுக்கு உதவுவதே நாட்டுக்குத் தாங்கள் செய்யக்கூடிய தலை சிறந்த சேவை என்று ஈ.ஐ.டி.-பாரி நிறுவனத்தினரும், அவர்களுடைய உர பூச்சி நாசினி விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள் ஆகியோரும் உறுதியாகக் கருதுகின்றனர் - உணவு உற்பத்தியை உயர்த்துவதே இன்று நம் நாட்டின் முன்னுள்ள முதல் பெரும் பிரச்னை அல்லவா?

ஈ.ஐ.டி.-பாரி லிமிடெட்
டேர் ஹவுஸ் சென்னை-1

**இவர்தான்**
**ஈ.ஐ.டி.-பாரி**
**உர விநியோகஸ்தர்**



8

இடைக்காலம், தற்காலம், வருங்காலம் என்கிற பிரிவுகளில் கா. அப்பாதுரை, அ. மு பரமசிவானந்தம், கே. பால்தண்டாயுதம், ம. நன்னன், க அறிவழகன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இலண்டன் பல்கலைக்கழகக் கீழ்த் திசைக் கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளரான டாக்டர் ஆர். இ. ஆஷர் அவர்களும் இம் மாநாட்டில் கலந்துகொண்டு "நான் கண்ட தமிழ்" எனும் பொருள் குறித்துப் பேசியது இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும். கருத்துகள் நிறைந்த "பாரதி" ஆண்டு மலர் வெளியிடப் பட்டது.

1964ம் ஆண்டுத் தலைவராக இந்திப் பேராசிரியர் டாக்டர் சு. சங்கரராஜு அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குத் துணையாகத் திருவாளர்கள் ஊ. ஐயராமன் பொதுச் செயலாளராகவும், இளம்பாரி கெ. பக்தவத்சலம் துணைச் செயலாளர்களாகவும், கோமதி சுவாமிநாதன் பொருளாளராகவும் இருந்தார்கள். சிறிது காலத்திற்குள் தலைவர் தம் பதவியிலிருந்து விலகிக் கொண்டதால், திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களே மீண்டும் தலைவரானார்.

சங்கத்தின் பன்னிரண்டாம் மாநாடு 1964 டிசம்பர் 5, 6ம் நாள்களில் சென்னை, கோகலே மண்டபத்தில் திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திரு. சோமலெ அவர்கள் வரவேற்புத் தலைவராக இருந்து திறம்படச் செயலாற்றினர்.

தமிழ்க் கடல் இராய சொக்கலிங்கன் அவர்களுக்கும் பழம்பெரும் எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் அவர்களுக்கும் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் அளித்துள்ள திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், தமிழை ரஷ்யாவில் பரப்பிவரும் பேராசிரியர் செமியோன் ருடின் (செம்பியன்) அவர்களுக்கும் பதக்கங்கள் தந்து பாராட்டப்பட்டன. சங்கச் சார்பில் கேடயங்களையும் பதக்கங்களையும் சென்னை உயர் நீதிபதி உயர் திரு. மா. அனந்த நாராயணன் அவர்கள் வழங்கினர். டாக்டர் பா. நடராசன், திருமதி சௌந்தரா கைலாசம், டாக்டர் அ. சிதம்பரநாதன், திருமலை முத்துசாமி முதலியோர் விருந்தினரைப் போற்றிப் பேசினர்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமையில் 'உலக மகாகவிகள்' என்ற கருத்தரங்கு நடைபெற்றது. காளிதாசர், துளசிதாசர், சோபாகிளிஸ், கத்தே, ஷேக்ஸ்பியர், பர்தோசி, கம்பர் ஆகியோரைப் பற்றி முறையே டாக்டர் வே. ராகவன், டாக்டர் நா. சந்திரகாந்த முதலியார், திரு. பா. பச்சையப்பன், திருமதி எஸ். ராதா சீனிவாசன், திரு.மு. ஆரோக்கியசாமி, திரு. முக்தார், திரு.ரா. சீனிவாசன் முதலியோர் பேசினர்.

திரு. கி. வா. ஜகந்நாதன் தலைமையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி, இராஜஸ்தானி கலைஞர்கள் கலந்துகொண்ட நாட்டுப் பாடல் இசையரங்கு ஒன்று நடைபெற்றது. மாலையில் 'இலக்கியம் பலவிதம்' என்ற உரைக்கோவையும் நடைபெற்றது. இம் மாநாட்டு மலரில் பல அரிய கட்டுரைகளுடன், தமிழ் எழுத்தாளர் சங்கத்தைப் பற்றிய ஓர் ஆங்கில அறிமுகமும் பிற விவரமும் அடங்கியுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

1965ம் ஆண்டின் சங்கத் தலைவராகத் திரு. சோமலெ அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குத் துணையாகத் திருமதி எம். எஸ். கமலா பொதுச்செயலாளராகவும், திருவாளர்கள் கெ. பக்தவத்சலம், கு. இராமகிருட்டினன் துணைச்செயலாளர்களாகவும், இளம்பாரி பொருளாளராகவும் அமைந்தனர். சங்க வரலாற்றிலே ஒரு பெண்மணி செயலாளரானது இதுதான் முதல்முறையாகும்.

சங்க நிதி நிலைமை பற்றும் பற்றுமாயிருந்த சூழ்நிலை மாறிச் சீர்பட்டது. திரு. சோமலெ காலத்தில் தான். வாழ்நாள் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததும், எழுத்தாளர் தொகை கூடியதும், சிறுகதை விழா நடைபெற்றதும் இக்காலத்தில்தான் புதிதாகச் சங்கத் தலைவர்கள் விழாவும் கொண்டாடப்பட்டது. அனைத்திந்திய எழுத்தாளர் மாநாடு ஆல்வாயில் நடைபெற்றபோது சங்கத் தலைவருடன் எழுவர் கலந்து கொண்டனர். சங்கம்பற்றி மற்ற மொழி எழுத்தாளர்க்கு ஆங்கிலத்தில் அறிவிப்புச் செய்தனர்.

பதின்மூன்றும் மாநாடு 1965 டிசம்பர் 19ம் நாளில் மயிலை ஏ. வி. எம் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் திரு. சோமலெ தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றவர் திருமதி ஐயா அருணாசலம் அவர்கள். டாக்டர் சி. பி இராமசாமி ஐயர் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். விஞ்ஞான அறிவு நூல்களைத் தமிழில் ஆக்கித்தந்த திரு. பெ. நா. அப்புசாமி அவர்களுக்கும், பல அரிய நூல்களின் ஆசிரியரான பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களுக்கும் கேடயங்கள் அளிக்கப்பட்டன. தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள திருமதி ஹெப்ஸிபா ஜேசுதாசன் அம்மையாருக்கும், தமிழ் மறையை உருதுமொழியில் மொழிபெயர்த்துத் தந்த திரு. ஹஸ்ரத் சுக்ரவர்த்திக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. விருந்தினரைத் திருவாளர்கள் கி.வா. ஜகந்நாதனும், ந. சஞ்சீவியும் பாராட்டிப் பேசினர்,

சட்டமன்றத் தலைவரான திரு. எஸ். செல்லபாண்டியன் தலைமையில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. 'தேசப் பாதுகாப்பில் எழுத்தாளர் பங்கு என்பதுபற்றிப் பலர் கலந்து கொண்டு

With the best Compliments of

**K. P. V. SHAIK MOHAMED ROWTHER & CO.**

MERCHANTS, SHIPPING AGENTS & CONTRACTORS

41, Linghi Chetty Street,

Post Box No. 1264,

MADRAS-1.

AGENTS:

The Scindia Steam Navigation Co. Ltd.

The Shipping Corporation of India Ltd.

The United States Navigation Co. Inc.

Jayanti Shipping Co. Ltd.

Esso Standard Eastern Inc.

Telephone: 25756 (5 lines)

Cable Address: 'SHAIK' (General)



FOR

RADIOS, RADIOPLAYERS, RECORDS ETC.

CONTACT:

**Radio Services**

10, MOUNT ROAD, MADRAS-2.

(Phone: 86091)

BRANCHES:

24, General Patters Road,
MADRAS-2.
(Phone: 88089)

5/1, Main Bazaar,
NEYVELI-3.

வீரவுரை நிகழ்த்தினர். திரு அப்துல்வஹ்ஹாப் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

திரு. செமியோன் ருடின் அவர்கள் ருஷிய நாட்டில் தமிழ்க் கல்வியின் நிலை பற்றித் தமிழில் உரையாற்றினர். திரு ம பொ சி. பேராசிரியர் ஹாரி எம். பக், ச. சிவகுமாரன் ஆகியோரும் பேசினர்.

இம்மாட்டு மலரில் வழக்கம்போல் வெளியிடப் படும் கட்டுரைகளுடன் பல பொதுக் கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் சாமர்செட் மாகம் பற்றியும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தைப் பற்றியும், கேடயங்கள் பதக்கங்கங்ள் பெறுவோர் குறித்தும் விவரங்கள் உள்ளன.

1966-ம் ஆண்டின் தலைவராகத் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் ஒரு மனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவருடன் பொதுச் செயலாளராகத் திருமதி எம். எஸ். கமலாவும், திரு. கெ. பக்தவத்சலமும், கு இராமகிருட்டினனும், பொருளாளராகத் திரு. கண. முத்தையாவும் இருந்தனர்.

இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சி ரஷ்ய எழுத்தாளர்க்கு வரவேற்பு அளிக்கப்பட்டதாகும். எழுத்தாளர் எண்ணிக்கை முன்னிலும் அதிகப்பட்டது. தமிழ் எழுத்தாளர்கள் கலந்துரையாடும் 'உறுப்பினர் திருநாள்' 10-11-66-ல் தென்மொழிப் புத்தக நிறுவனக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. 200-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வந்து கலந்துகொண்டு, உரையாடி, உண்டு மகிழ்ந்தனர். காலை 10 மணி முதல் மாலைவரை பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்தன. மாலையில் உறுப்பினர்களிடையே விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது.

1966 ஜுலை 15, 16, 17-ம் நாள்களில் இந்து உயர்நிலைப் பள்ளியில் 'நாவல் விழா' நடைபெற்றது. 15 நாவல்களைப்பற்றி இருவர் தவிர மற்றவர் எழுதிப் படித்தனர். திருவாளர்கள் கி. வா. ஜகந்நாதன் மீ. ப. சோமசுந்தரம், கு. அழகிரிசாமி ஆகிய மூவர் மூன்று நாள்களுக்கும் தலைமைத் தாங்கினர். நாவல் விழாப் பேச்சுகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. குறிக்கத்தக்கது.

தமிழ்மொழியை எளிதில் கற்பதற்கான நூல்களை இந்தியில் எழுதிய திரு. சௌம்ய நாராயணனையும், வங்க மொழியில் எழுதிய 'வங்கத் தமிழனை'யும் 8-7-66-ல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டியுள்ளது.

1965-ல் 'சோமலெ' முயற்சியுடன் தொடங்கப்பட்ட ஆயுள் உறுப்பினர் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் மொத்தம் இருபதாயிற்று;


# THE INDIAN OVERSEAS BANK LIMITED

(Central Office: 151, MOUNT ROAD, MADRAS-2.)

With Branches in India, Ceylon, Honkong, Malaysia, Singapore and Thailand and with world wide agency arrengements

**THE INDIAN OVERSEAS BANK LIMITED**

Offers you

**A COMPREHENSIVE BANKING SERVICE**

Please contact your nearest branch for full particulars regarding our:

★ Recurring Deposits
★ Gift Cheques
★ Travellers' Cheques
★ Minors' Savings
★ Personal Loans

Chairman:
M. CT. MUTHIAH

General Manager:
G. LAKSHMINARAYANAN

## கழக வெளியீடுகள்

| | |
|---|---|
| சங்க இலக்கிய இன்கவித் திரட்டு—விளக்கக் குறிப்புரைகளுடன்-(3-பகுதிகள்) தனித்தனி | 4-50 |
| சீவக சிந்தாமணி வசனம் | 6-75 |
| சிலப்பதிகார வசனம் | 5-00 |
| பெருங்கதை வசனம் -இலாவாண மகத காண்டங்கள் | 4-50 |
| பெருங்கதை வசனம் -வத்தவ, நரவாண, துறவுக் கண்டங்கள் | 13-00 |
| பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு | 7-50 |
| திருவாசக ஒளிநெறி | 10-00 |
| திருவாசக விளக்கவுரை | 7-50 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் -விளக்கவுரையுடன் (2-பகுதிகள்) | 12-50 |
| தாயுமான வடிகள் திருப்பாடல்கள் -சித்தாந்தச் சிறப்புரை | 12-50 |
| குறள் முதுமொழி வெண்பாக் கொத்து | 7-50 |
| குறள் வெண்பா நூற்கோவை (2-பகுதிகள் தனித்தனி) | 4-00 |
| திருக்குறள் இன்பம் (சுத்தானந்த பாரதி) | 4-00 |
| சிலம்புச் செல்வம் ,, | 5-50 |
| தூது உரைநூற்கோவை-உரையுடன் | 6-25 |
| மூவருலா-விளக்கவுரை | 5-50 |
| தொழில் தந்தையர் | 4-00 |
| பாம்பீயின் கடைசி நாட்கள் | 4-50 |
| நிலவைச் சுற்றிய கதை | 2-25 |
| பூமிக்குள் பயணம் | 3-50 |
| மாண்டிகிரிஸ்டோ பெருமகன் | 6-25 |
| எம்மா (Emma) | 4-50 |
| ஆற்றங்கரை ஆலே (The Hill on the Floss) | 3-50 |
| Four Popular Books By James Allen | 6-00 |
| All these things Added by James Allen | 4-00 |

மற்றும், ஆங்கிலத் தமிழாக்க நூல்களும், அரசியல், சட்ட, கல்லூரிப் பாடநூல்களும் மறைமலையடிகளாரின் ஆராய்ச்சி நூல்களும் கிடைக்கும்.

---

விவரங்கட்கு :

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
திருநெல்வேலி-6 சென்னை-1.

---

அம்மே நாராயணு
தேவி நிவாஸ்
தேவி நாராயணு
லட்சுமி நாராயணு
தசரத ராம்
சீதாராம்
கணேஷ் ராம்
சேஷா ராம்

இந்தப் பெயர்களெல்லாம் எமது லாட்ஜிங் அறைகளின் ஒவ்வொன்றின் பெயரைக் குறிப்பனவாகும்.

இட்டிலிக்கும், சட்டினிக்கும் புகழ்பெற்ற

# ஸ்ரீ ராம பவன் லாட்ஜிங்

46, தம்புச்செட்டித் தெரு,

தந்தி: 'Cochutni'

சென்னை - 1.

போன்: 23665 & 27777.

உரிமையாளர்: R. S. N. ஐயர் & R. S. G. ஐயர்

உறுப்பினர் எண்ணிக்கை 506 ஆயிற்று. "தமிழ் எழுத்தாளர் யார் எவர்?" தொகுப்பு நூல் முயற்சி—நெடுநாளைய கனவு—இந்த ஆண்டில் தான் முடிவுற்றது. இதற்காகச் சென்னை அரசாங்கம் ரூ. 1,000/- உதவியுள்ளது. இந்நூலில் 1146 எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன. தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு ஏற்ற ஓர் இலச்சினையை ஓவியர் திரு. கோபுலு தயாரித்துக் கொடுத்தார். இது இந்த ஆண்டின் இறுதி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

சங்கம் பதினான்காவது மாநாடு 1966 டிசம்பர் 3, 4-ம் தேதிகளில் மயிலை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் தலைவர் அழ. வள்ளியப்பா உடல்நிலைக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால் திரு. சோமலெ தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டின் வரவேற்புரையைத் திரு. வி. ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களும், தொடக்கவுரையை மேன்மை தங்கிய ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களும் செய்தனர்.

திரு. அழ. வள்ளியப்பாவின் தலைமையுரையைத் திரு. சோமலெ படித்தார். கவிஞர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும், முதிர்ந்த எழுத்தாளர் தி ஜ ரங்கநாதன் அவர்களுக்கும் கேடயங்களும், தமிழ் இலக்கியத்தைச் சிங்கள மொழியில் பரப்பிய திரு. தருமாதன தேரோ அவர்களுக்கும், கன்னட மொழியில் பரப்பிய திரு. மாத்தூர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் பதக்கங்களும் ஆளுநர் வழங்கிச் சிறப்பித்தார். விருந்தினரைப் பாராட்டித் திருவாளர்கள் மீ ப. சோமசுந்தரமும், கு. அழகிரிசாமியும் பேசினர்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலையில், 'எழுத்தாளர்களிடம் எதிர்பார்ப்பது' என்னும் கருத்தரங்கு நடைபெற்றது. மயிலை சீனி. வேங்கடசாமி வரவேற்புரையும், திரு. ஏ ஜி வேங்கடாச்சாரி தலைமையுரையும், டாக்டர் மு வரதராசனார் திறப்புரையும் செய்தனர். 'பதிப்புத் துறை' பற்றித் திரு. கண முத்தையாவும், 'வானொலி' குறித்துத் திரு. உமா சந்திரனும் 'நாடகம்' பற்றித் திரு. டி. கே. சண்முகமும் 'திரைப்படம்' குறித்துத் திரு. எஸ். டி. சுந்தரமும் 'ரசனை' பற்றித் திருமதி ராஜேஸ்வரிநடராஜனும் பேசினர்.

'தமிழ் எழுத்தாளர் யார் எவர்?' என்ற நூலைத் தமிழக முதலமைச்சராயிருந்த திரு. மீ.

FOR NAME PLATES, METAL LABELS

CONTACT

**PADMA PROCESS**

★

For PRE. PRINTED CUT SHEETS, DOCUMENTS PHOTOGRAPHY

CONTACT:

**BHATTARAMS PHOTO SERVICE**

**10, Narasingapuruam Street,**

**MADRAS-2.**

பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டுச் சிறப்பித்தார்.

'நகைச்சுவைக் கவியர'ங்கத்துக்குத் திரு. கே. ஆர். கல்யாணராமன் (மகரம்) வரவேற்புரையும், திரு. கொத்தமங்கலம் சுப்பு தலைமையுரையிம், நிகழ்த்திக் கவிஞர்கள் பலர் கலந்து கொண்டு கவிதைகள் படித்து வெற்றிபெறச் செய்தனர்.

இலக்கிய இசைஅரங்கைத் திரு. கே. சி. தியாகராஜன் மிகவும் இனிக்கப் பாடி நிகழ்த்தினார்.

தமிழ்நாட்டுத் தலைமை நீதிபதி திரு. மா. அனந்தநாராயணன் தலைமையில் 'தமிழ் நாவல்கள்' உரைக்கோவை நூல் வெளியிடப்பட்டது. திருவாளர்கள் அ. ச. ஞானசம்பந்தமும், எஸ். இராமகிருஷ்ணனும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

1967-ம் ஆண்டிற்கு சங்கத் தலைவராகத் திரு. அகிலன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவரது தலைமையில், தமிழ் எழுத்தாளர் 15-வது மாநாடு சிறப்புற நடைபெறுகிறது. இவ்வாறே தனது இலட்சியப் பாதையில் தமிழ் எழுத்தாளர் சங்கம் மேன்மேலும் முன்னேறி வருகிறது.

—★—

FOR ALL CONSTRUCTION JOBS

USE

SANKAR BRAND

PORTLAND

Pozzolana

CEMENT

Conforming to No. I.S. 1489-1962. manufactured at Sankarnagar Works of THE INDIA Cement LTD. under license issued by The Ministry of Industry, Govt. of India.

Portland Pozzolana cement has these noteworthy features:
It produces less heat of hydration.
The workability of the concrete is much improved and it is free from segregation and bleeding.
It is less susceptible to show haircracks than ordinary Portland Cement.
It offers increased resistance to attack by chemical agencies (alkali aggregate reaction and sulphate attack), particularly seawater.
Can generally be used for all purposes for which ordinary Portland cement is used.
When used for reinforced concreting, ensure that the shuttering is left in position for at least 50% longer period than normal and curing done under moist conditions.
Sankar Brand portland Pozzolana Cement is available with the stockists of The India Cements Ltd. in the marketing zone of Sankarnagar Factory.

THE INDIA CEMENTS LIMITED
"Dhun Building",
175/1, MOUNT ROAD, MADRAS-2.

# தமிழ் எழுத்தாளர்

## யார் - எவர்

தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியிட்டுள்ள இப்புத்தகம் 500க்கு மேற்பட்ட தமிழ் எழுத்தாளர்களின் பெயர், முகவரி, துறை, நூல்கள் ஆகிய விவரங்களைத் தருகிறது. இதுவரை தமிழில் இத்தகைய ஒரு நூல் இந்த அளவில் வரவில்லை. எழுத்துத் துறையினருக்கும் வாசகர்களுக்கும் இன்றியமையாதது.

பக்கம் 306 அளவு டெம்மி விலை ரூ. 3-00

விற்பனையுரிமை :

**தமிழ்ப் புத்தகாலயம்**

பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,

சென்னை - 5.

BEST COMPLIMENTS:

↓

Telegrams: "VEEKAYDES" Phone: Office: 22586

Res: 63587

## V. K. DURAISAMY & SONS

Shipping, Clearing & Forwarding Agents

Transport Contractors

First Floor, 14, Jaffar Syrang St.,

MADRAS-1.


Edited and Published by Al. Valliappa for the Tamil Writers' Association Crescent Society Buildings, Madras-2, and Printed at Deepam Achagam, Madras-2.